பக்கங்கள்
யாழ்., வன்னி ரூ.20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 249 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 17, சனி 02.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

German Language Academy
ஜேர்மன், சுவிஸ் செல்பவர்களுக்கான டொச் மொழிகள் ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் இலகுவாக கற்பிக்கப்படுகின்றது.
தொலைபேசியில் தொடர்புகொண்ட பின் நேரில் வரவும்
077 9707 322
German Language Academy
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

உள்ளே...



வெடித்தது எரிவாயுக் குழாய் 7



அம்பலமாகும் இரகசியங்கள் 8



பத்திரிகை பணியில் தனிநாயகம் அடிகள் 14



இளந்தென்றல், சென்.யூட் இறுதியில் 17

# கல்லறையை நோக்கி பயணிக்கின்றது அரசு

## எச்சரிக்கை விடுக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக.2
மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலின்போது ஆரம்பமான அரசின் வீழ்ச்சிப் பயணம் ஊவா மாகாண சபைத் தேர்தலுடன் கல்லறையை நோக்கிப் பயணிக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, அதற்கான அபாய சமிக்ஞைகள் தற்போதே தென்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.
ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
"ஆட்சி கவிழ்வதற்கான அறிகுறியாக அரச கூட்டுக்குள் இருந்து பங்காளிக்கட்சிகள் தனிவழிப் பயணத்தை ஆரம்பிக்கும் சமிக்ஞை தென்படும். குறிப்பாக, 1970இல் உருவாக்கப்பட்ட சமத்துவ முன்னணியிலிருந்து 1975இல் சமசமாஜக் கட்சி விலகிச் சென்றது. அத்துடன், 1976இல் கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்து சென்றது. இதனால், 1977இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இதேபோல், 17 வருடங்கள் நாட்டை ஆட்சிசெய்த ஐக்கிய

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர் ஆலயத்தில் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், ஓக 2
நல்லூர் ஆலய வருடாந்த திருவிழாவின் முதல் நாளான நேற்றைய தினமே 4 பவுண் சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், அதனுடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் ஏனைய இருவர் தப்பியோடியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.
நேற்று நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றதுடன் ஆரம்பமாகியது. கொடியேற்றத்தைக் காண்பதற்காக பெருமவிலான பக்தர்கள் ஆலயத்துள்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## ஜெயலலிதாவை அவமதித்து அரச இணையத்தளத்தில் கட்டுரை

### தமிழகத்தின் கடும் எதிர்ப்பால் மன்னிப்புக் கோரியது பாதுகாப்பு அமைச்சு



யாழ்ப்பாணம், ஓக. 02
இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவமதிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய கட்டுரை மற்றும் அதனுடன் இணைந்த ஒளிப்படம் என்பன தமிழகத்தில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன. அங்கு ஏற்பட்ட கொந்தளிப்பான நிலையை அடுத்து, பதிவேற்றப்பட்ட 6 மணி நேரத்திலேயே அந்தக் கட்டுரையை நீங்கியதுடன், இந்தியப் பிரதமரிடமும், தமிழக முதலமைச்சரிடமும் பாதுகாப்பு அமைச்சு பரந்தளவிலான பகிரங்க மன்னிப்பை

❖ 22 ஆம் பக்கம் பார்க்க



## ஜெயலலிதா கடும் சீற்றம்

சென்னை, ஓக.2
தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு தாம் எழுதும் கடிதங்களை கீழ்மையாகச் சித்தரித்த இலங்கை அரசின் அதிகாரபூர்வ வலைதள விவகாரம் தொடர்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதா கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் "இந்திய வெளியுறவு அமைச்சகம், இலங்கை தூதரக அதிகாரியை நேரில் வரவழைத்து அதிருப்தியைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"பத்திரிகைச் சுதந்திரம் கொண்ட ஒரு வலுவான ஜனநாயக நாட்டில்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## போராட்டத்தை கைவிட்டனர் மீனவர்கள்

இராமநாதபுரம், ஓக.2
மீனவர் கைது மற்றும் படகுகள் விடுவிப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியாளர் உறுதிமொழி வழங்கியதை அடுத்து இன்று நடத்தப்படவிருந்த கச்சதீவை தஞ்சமடையும் போராட்டத்தை இராமேஸ்வரம் மீனவர்கள் கைவிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தின் தலைவர் எஸ்.யேசுராஜா.
6 சங்கங்களைச்சேர்ந்த இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்கக் கோரி கடந்த 9 நாள்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் இன்று கச்சதீவில் வெள்ளைக்கொடியுடன் இலங்கைக் கடற்படையிடம் தஞ்சமடையப் போகின்றோம் என்றும் அறிவித்தி

❖ 22 ஆம் பக்கம் பார்க்க



**கொந்தளித்தது தமிழகம்**

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை இழிவுபடுத்தி கட்டுரை வெளியிடப்பட்டது. அதற்கு கண்டனம் தெரிவித்து அ.தி.மு.கவினர் மற்றும் தந்தை பெரியார் திராவிட கழகத்தினர் சென்னையில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். போராட்டத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவம்பொம்மையை எரித்தனர். (ற)

## புலிகளிடம் மீட்கப்பட்ட ஆயுதங்கள் குறித்து தகவல்களை வெளியிட வேண்டாம்

### சில நாடுகளின் தூதுவர்கள் கோரினர் என்கிறார் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு, ஓக.2
போர் நடைபெற்ற காலத்தில் வடக்கில் விடுதலைப் புலிகளின் முகாம்களில் இருந்து மீட்கப்பட்ட வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட பல்வேறு ஆயுதங்கள் பற்றிய தகவல்களை ஊடகங்களில் வெளியிட வேண்டாம் என சில நாடுகளின் தூதுவர்கள் தன்னிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
"இப்படியான நிலையில், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் சந்தேகத்துடன் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது, தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் அது குறித்து தேடிப்பார்க்க வேண்டியது அரசின் கடமை.
சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கையால் எந்த தரப்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

# ராஜீவ் காந்தி பிரபாகரனை இரகசியமாகச் சந்தித்தார்

## நட்வர் சிங்கின் கருத்தால் எழுந்தது சர்ச்சை

கொழும்பு, ஓக.2

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இரகசியமாகச் சந்தித்தார். அவரை ராஜீவ் காந்தி நம்பினார். பிரபாகரன் ஏமாற்றி விட்டார். - இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங். அவரின் இந்தக் கருத்தால் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. 'ஹெட்லைன்ஸ் டுடே' எனும் இந்தியத் தொலைக்காட்சி அலைவரிசைக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு விவரித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"ராஜீவ் காந்திக்கு தவறான ஆலோசனை வழங்கப்பட்டது. அதனால் அமைச்சரவைக்கோ, மூத்த அதிகாரிகளுக்கோ தெரிவிக்காமல், இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்ப ராஜீவ்காந்தி உத்தரவிட்டார். இலங்கையில் இந்திய அமைதிப்படையினர் என்ன செய்யப் போகிறார்கள் என்ற எந்த தயார்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தியாவினது கொள்கைக்கு அது பொருத்தமானதாக இருக்கவில்லை.

ராஜீவ்காந்தி இலங்கை விவகாரத்தில் பொருத்தமான கொள்கையை கடைப்பிடிக்கவில்லை. அப்போது தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். தனது கொள்கைப்படி செயற்பட்டார். இந்தியா தனது கொள்கைப்படி செயற்பட்டது.

இலங்கைப் பிரச்சினைக்கு இலகுவாக தீர்வு காணலாம் என்று ராஜீவ் காந்தி நம்பினார். ராஜீவ் காந்தி இரகசியமாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். அவர் பிரபாகரனை நம்பினார், ஆனால் பிரபாகரன் அவரை ஏமாற்றிவிட்டார். ராஜீவ்காந்தி கொழும்புக்குச் சென்றிருந்த போதே, இந்தியப் படைகளை அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டது. இன்றிரவு ஆட்சிக் கவிழ்ப்பு நடக்கவுள்ளது என்றும், அதற்கு உங்களின் உதவி தேவை என்றும், இல்லாவிடின் நிலைமை கையை மீறிச் சென்று விடும் என்றும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தன்னிடம் கூறினார் என்று ராஜீவ் காந்தி தெரிவித்திருந்தார்.


இலங்கையில் தனது படையினரை இழந்தது இந்தியாவின் கொள்கைக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. இலங்கை விவகாரம் தவறாக கையாளப்பட்டதால்தான், ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். 1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி மீண்டும் பதவிக்கு வருவார் என்பது தெளிவாக இருந்தது. அதனால் தான் அவர் கொல்லப்பட்டார்.

அதற்காக அவர் திறமையற்றவர் என்றில்லை. அவர் அதிகம் நம்புபவராக இருந்தார். அரசியல்வாதி அதிகம் நம்புபவராக இருக்கக்கூடாது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

# கொடியேற்றம் நடக்கையில் ஆலய வீதியில் ஓடிய பிக்கப்

## வீதிகள் மூடப்பட்டிருக்கையில் தனியாருக்கு சலுகையா என மக்கள் விசனம்





வலி.வடக்கு, ஓக.2

நல்லூர்க் கந்தன் ஆலய கொடியேற்றம் நேற்றுப் பக்திபூர்வமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் ஆலய வீதியில் சுற்றித் திரிந்த தனியாருக்குச் சொந்தமான பிக்கப் ரக வாகனம் குறித்தும், மோட்டார் சைக்கிள் ஒன்று குறித்தும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கடும் வெயிலையும் பொருட்படுத்தாது அடியார்கள் அங்கப் பிரதட்டணை செய்து கொண்டிருந்த சமயமே குறித்த வாகனங்கள் ஆலய வீதிகளில் சுற்றின என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆலயத் திருவிழாக் காலத்தில் ஆலய வீதிகள் மூடப்பட்டிருக்கும் என்றும், நண்பகல் 12 மணியில் இருந்து பி.ப. 2 மணி வரையே போக்குவரத்துக்காகத் திறக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்டவர்களால் அறிவிக்கப்பட்டிருந்து. ஆயினும் வீதி முடப்பட்டிருந்த நிலையிலும், நேற்று நூற்றுக் கணக்கான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோதும், குறித்த பிக்கப் ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் ஆலய வீதிகளில் சுற்றியுள்ளன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ற-86)

## பண்டாரநாயக்கா விமான நிலையம் 4ஆவது இடத்தில்

கொழும்பு, ஓக.2

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஸ்கேதரக்ஸ் தரப்படுத்தலில் மத்திய ஆசியாவில் 4ஆவது இடத்தையும் ஐ.சி.ஏ.ஓவின் பாதுகாப்பு தணிக்கை முடிவுகளில் ஆசியபசுபிக்வலையத்தில்5ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.(ற)

# கலாசார உடையுடன் கோயிலுக்கு வருக

## நல்லூர் ஆலயத்தில் பக்தர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக.2

நல்லூர் திருவிழாவின்போது ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் சைவ, தமிழ் பாரம்பரிய உடைகளுடன் வருவதோடு, அடியார்கள் ஆலய வீதிகளில் அங்கப் பிரதட்சணம் செய்வதால் பாதணிகள் அணிவதைத் தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நல்லூர் ஆலயச் சூழலில் இந்த வேண்டுகோள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கோயிலும், கோயிலின் சூழலும் புனிதமான இடங்கள். அந்தப் புனிதத் தன்மையைப் பேணிப் பாதுகாப்பது எமது கடமை. தமிழ், சைவ மக்களின் பண்பாட்டு, பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்து வாருங்கள். கோயில் வீதிகளில் அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்வார்கள். அத்தகைய வீதிகளில் பாதணி அணிந்து செல்வதைத் தவித்துக் கொள்ளுங்கள். - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# சைவசமய பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், ஓக.2

மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மஞ்சவனப்பதி முருகன் ஆலய இளைஞர்களால் நடத்தப்படும்சைவசமயபரீட்சை இன்று சனிக்கிழமை காலை கொக்குவில் இந்து கல்லூரியில் நடைபெறவுள்ளது. தரம் 6 முதல் 10 வரை காலை 9.30 மணிக்கும், தரம் 11க்கு பி.ப. 2 மணிக்கும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# நல்லூர்க் கந்தன் வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பம்.













வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய கொடியேற்றம் நேற்றுப் பக்தர்களின் அரோகரா ஒலியுடன் பக்திபூர்வமாக நடந்தேறியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதில் கலந்து கந்தனின் அருள் வேண்டினர். அதிகாலை முதலே அடியார்கள் ஆலயத்துக்குள் கூடத் தொடங்கினர். அந்தணர்கள் வேத பாராயணம் ஒலிக்க, அடியார்கள் அரோகரா ஒலி எழுப்ப, பக்திபூர்வமாக முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது. நேற்று ஆரம்பமாகிய நல்லூர்க் கந்தன் வருடாந்த திருவிழா தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும். (ற-21,86)



பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா யாழ். 20/-

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 17 சனிக்கிழமை (02.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 249

# வெளிநாட்டுத் தூதரக அறிக்கைகளுக்கு பாதுகாப்பு அமைச்சு பதிலளிக்கக்கூடாது

## அது ராணுவ ஆட்சியை வெளிப்படுத்தும் என்கிறார் இராஜதந்திரி தயான் ஜயதிலக



**கொழும்பு, ஒகஸ்ட் 2**

**வெளிநாட்டுத் தூதரகங்களின் அறிக்கைகளுக்குப் பாதுகாப்பு அமைச்சு அல்லது சீருடையணிந்த அதிகாரிகள் மறுப்பு வெளியிடுவதானது, இராணுவ சர்வாதிகார ஆட்சியின்போது மட்டுமே நடக்கின்ற விடயம் என்று குறிப்பிட்டுள்ள முன்னாள் இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக, அமெரிக்கத் தூதரக அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு மறுத்தமையானது விவேக மற்ற செயல் என்றும் சாடியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அல்லது அமெரிக்கத் தூதரகத்தின் கருத்தை வெளிவிவகார அமைச்சே மறுத்திருக்கவேண்டும். அவ்வாறு மறுக்கக் கூடாது என்று வெளிவிவகார அமைச்சு கருதும் பட்சத்தில், இன்னொரு அமைச்சு அத்தகைய மறுப்பை அதிகாரபூர்வமாக வெளியிட்டிருக்கக்கூடாது.

அரச ஊடகம் ஒன்றின், ஆசிரியர் கருத்தில் அதனைக் குறிப்பிட்டாலே போதுமானது.

பாகிஸ்தான் நீண்ட காலம் இராணுவ ஆட்சியில் இருந்த போதும் கூட, இன்னொரு நாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் இத்தகைய அறிக்கைகள் வெளிவந்ததில்லை. இது போன்ற விவகாரங்கள் வெளிவிவகார அமைச்சிடமே விடப்பட்டன. இராணுவம் மீது நேரடியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் சூழ்நிலையின்போதே, சர்வதேச விவகாரங்களுக்கு இராணுவப் பேச்சாளர் பதிலளிக்கலாம். தூதரகங்களின் அறிக்கையைப் பாதுகாப்பு அமைச்சு அல்லது சீருடையணிந்த அதிகாரிகள் மறுப்பது, இராணுவ சர்வாதிகார ஆட்சியின்போது மட்டுமே நடக்கின்ற விடயம் - என்றார். (த-5)

## பிரதேச சபை உறுப்பினருக்கு நீதிமன்று கட்டாணை அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 2

வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர், தன்மீது கட்சியினர் எந்தவித' நடவடிக்கையும் எடுக்கக்கூடாது எனக் கோரி யாழ்.மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த கட்டாணை வழக்கில், விசாரணையின் பின்னர் அவருக்குக் கட்டாணை அனுமதி வழங்கியுள்ளது நீதிமன்று. எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இந்தக் கட்டாணை வழங்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நீதிமன்றில் நேற்றுமுன்தினம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நேற்றுச் சுமார் இரண்டரை மணி நேரம் இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் நீக்கப்பட்ட கதிரவேலு கௌரிகாந்தனால் இந்த வழக்கு சட்டத்தரணி மூலமாகத் தாக்கல் செய்யப்பட்டது. முதலில் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிகேள் எழுத்தாணை மற்றும் தடை எழுத்தாணை என்பன தகுந்ததாக அமையவில்லை என்பதனால் மேல் நீதிமன்றினால் நேற்று அது நிராகரிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் மாவட்ட நீதிமன்றில் அது தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் ஆணையாளரால் தனக்குக் கடிதம் அனுப்பப் பட்டபோதே சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் தான் நீக்கப்பட்டமை தெரியவந்தது. தன்னைப் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் நீக்கியமை பிழை என்று கூறியுள்ள கௌரிகாந்தன், மீண்டும் தனக்கு அந்தப் பதவியையும் கட்சி உரிமையையும் வழங்குமாறு கோரியுள்ளதோடு, வழக்கு தீர்ப்பு வரும்வரை தன் மீது கட்சியினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது இருப்பதற்கான கட்டாணை ஒன்றையும் கோரியிருந்தார்.

அது தொடர்பில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிகளுள் ஒருவர் சார்பில் சட்டத்தரணி ஜோனி மதுரநாயகத்தின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகியிருந்தார்.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.கனகசிங்கம், சில

(22ஆம் பக்கம் பார்க்க)

## கைகலப்பில் ஈடுபட்ட நால்வருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 2

வீதியால் சென்ற ஒருதரப்பினருடன் கைகலப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. யாழ்.பிரதான வீதியை அண்மித்து யாழ். சிறைச்சாலைக்கு அருகில் நேற்று முன்தினம் அவர்கள் வீதியில் நின்று வீதியால் சென்றவர்களுடன் முரண்பட்டு கைகலப்பில் ஈடுபட்டதாகக் கூறிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (த-4)

## சமுர்த்தி அதிகார சபையின் 24 ஊழியர் பதவி விலகல்

### வாழ்வின் எழுச்சித் திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளமையை அடுத்து

யாழ்ப்பாணம், ஓக. 2

சமுர்த்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சித் திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளமையினால், அந்தத் திணைக்களத்தின் கீழ் பணியாற்ற விரும்பாத 24 ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் பதவி விலகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் கொடுப்பனவுகளும் நஷ்டஈடும் பதவி விலகிய ஊழியர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

சமுர்த்தி அதிகார சபையின் கீழ் பணியாற்றிய சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவரும், தற்போது வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினுள் இணைக்கப்பட்டுள்ளனர். அதிகார சபையிலிருந்து திணைக்களத்துக்குள் இணைக்கப்படும் போது 4 தெரிவுகள் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் கொடுப்பனவுகளையும் நஷ்டஈட்டையும் பெற்றுக்கொண்டு பதவி விலகுவது, திணைக்களத்தினுள் இணைந்து கொண்டு ஓய்வூதியத் திட்டத்தில் பங்குபற்றுவது, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டு புதிதாகத் திணைக்களத்தில் இணைந்து கொள்வது, தொடர்ந்தும் ஊழியர் நம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு ம.வி. மாணவரை நேற்று தாக்கின தேன் குளவிகள்

### பாதிக்கப்பட்ட 22 பேருக்குச் சிகிச்சை

முல்லைத்தீவு, ஓக.2

முல்லைத்தீவு மகாவித்தியாலய கட்டடத் தொகுதியின் வெளிப் பகுதியில் கூடு கட்டியிருந்த தேன் குளவிகள் கலைந்து தாக்கியதில் மாணவிகள் உட்பட 22 மாணவர்கள் பாதிப்படைந்த நிலையில் உடனடியாக முல்லைத்தீவு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



இவர்களில் 9 மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வீடுதிரும்பினர். ஏனைய 13 மாணவர்களும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்ற நிலையில் 10 மாணவர்கள் பின்னர் வீடு செல் வதற்கு அனுமதிக்கப்பட்டனர். தற்பொழுது கடும் தாக்கத்துக்கு உள்ளான மூன்று மாணவர்கள் மட்டுமே தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம் பெற்றது.

மூன்றுமாடிகளைக் கொண்ட இரண்டு கட்டடத் தொகுதிகளின் வெளிப்புற இடைவெளி

(22ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி ஒருபோதும் அடிபணிய வைக்கமுடியாது

### அரசும் அதன் படைகளும் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஓக். 2

"தமிழினத்தின் அவலங்களை வெளி உலகத்திற்கு எடுத்துக்காட்டும் தமிழ் ஊடகவியலாளர்களை மிரட்டி - அச்சுறுத்தி அவர்களை ஒருபோதும் அடிபணிய வைக்க முடியாது. இதனை இலங்கை அரசும், அதன் படைகளும் புரிந்துகொள்ள வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் ஊடகவியலாளர்கள் எதற்கும் அடிபணியாமல் தமது பணிகளைத் துணிகரமாகச் செய்த காரணத்தால்தான் அரசினதும் அதன் படைகளினதும் மோசடிகளும், மனித உரிமை மீறல்களும் வெளி உலகிற்கு அம்பலமாகியுள்ளன. இதனால்தான் சர்வதேச சமூகத்தின் பொறிக்குள் இலங்கை அரசு சிக்கித் தவிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஓமந்தையில் கஞ்சா என்ற பெயரில் ஒரு நாடகத்தை அரங்கேற்றி யாழிலிருந்து ஊடகப் பயிற்சிப்பட்டறைக்காக கொழும்பு வந்த தமிழ் ஊடகவியலாளர்களை சிறையில் தள்ள அரச படைகள் முயற்சித்தன. இந்த மிரட்டல் நடவடிக்கை தோற்றுப்போக மறுநாள் கொழும்பில் நடைபெறவிருந்த ஊடகப் பயிற்சிப்பட்டறையை இனவாதக் கும்பலை ஏவிவிட்டு அரசு குழப்பியடித்தது. எனினும், தமிழ் ஊடகவியலாளர்கள் அஞ்ச

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கருத்தரங்கு

யாழ். மாவட்ட நீதிவான் நீதிமன்றங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ரில்கோ ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

நீதி அமைச்சின் சிறுவர் சிநேகபூர்வமிகு அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான அறிமுகமும் தயார்ப்படுத்தலும் என்னும் தொனிப்பொருளில் பற்றி கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ள நீதிவான் நீதிமன்றில் கடமையாற்றும் பதிவாளர்கள், கணக்கு உதவியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், கட்டுநர்கள் ஆகியோரை நீதிமன்ற நீதிவானின் அனுமதியுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## அமரர் பொன். சபாபதி நினைவாக கிளிநொச்சியில் நிகழ்வுகள்

அமரர் பொன். சபாபதி நிதியத்தின் மூலம் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு உதவி வழங்கும் நிகழ்வும் அமரரின் நினைவு நாள் நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் ஆசிரியர் இ.ஜெயசுதர்சன் தலைமையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம், வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சிறிகுமரன், முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.ஆதவன், வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கு.கோசலை, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சமூக விஞ்ஞானத்துறை விரிவுரையாளர் ம.சத்தியகுமார் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

இதில் அமரர் பொன். சபாபதி நினைவுப் பேருரை, விருந்தினர் உரை, கருத்துப் பகிர்வு என்ப வற்றுடன் வன்னி விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்களின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க-426)

## கந்தபுராண படனம்

சின்மயா மிஷன் நடத்தும் கந்தபுராண படனம் நல்லூர் மூத்துவிநாயகர் ஆலயத்தில் நேற்றையதினம் ஆரம்பித்து எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (க)

## மணி விழாவும் நூல் வெளியீடும்

கரணவாய், ஒக. 2

இமையாணன் அ.த.க.வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரத்தின் மணிவிழாவும், நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் ஆசியுரைகளை வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி தேசிகர், உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை நே.து. ஜெயநேசன் ஆகியோரும்-

வாழ்த்துரைகளை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யோ.ரவீந்திரன், அ.ஸ்ரீகரன், கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா, வித்தியாலய முன்னாள் அதிபர் ம.குட்டித்தம்பி, யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் உட்படப் பலர் நிகழ்த்தவுள்ளனர். மணி விழா நூல் தொடர்பான நயப்புரையை உடுத்துறை மகா வித்தியாலய ஆசிரியர் மா.செல்வதாஸ் நிகழ்த்துவார். (ஓ-108)

## ஆண்டு விழாவுக்காக சைக்கிள் ஓட்டம், இரத்ததான நிகழ்வு

கைதடி, ஒக. 2

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மாவட்ட ரீதியிலான சைக்கிள் ஓட்டப் போட்டியும், அதனைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு நிலைய அங்கத்தவர்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் மு.ப. 10.30 மணிக்கு இரத்ததான நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

மாலை 7 மணிக்கு நிலையத் தலைவர் சி.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் அரங்க நிகழ்வில் கல்விசார் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றியீட்டியோருக்கு பரிசில் வழங்கலுடன் மாணவர்கள், நிலைய அங்கத்தவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன.

இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.சிவானந்தம் கலந்து கொள்வார். (ஓ-288)

## சமயசந்நிதிகளில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை தேர் உற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. 20ஆம் திகதி புதன் கிழமை திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும். (க)

◆◆◆

நீர்வேலி வாய்க்கால்தரவை மூத்தவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 10 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறுவ துடன் பெருந்திருவிழா நிறைவுறும். தினமும் மாலை 7 மணிக்கு 'பெரிய புராணம்' என்னும் தலைப்பில் பண்டிதர் பொன்.சுகந் தனின் தொடர் சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது. (ஓ-173)





**வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு**

3 அறைகள், Hall, சமையலறை, காடின், கிணறு, 5 பாக்கிங் வசதியுடன் நவீனமயமாக்கப்பட்ட வீடு Mt Laveniaவில் Temples றோட்டில் உள்ளது

தொடர்பு - 072 7056233

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=
(Attached Bathroom)
Hotel Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 2222


## AN APPRECIATION

### An Exemplary Principal MR.V.Ganesarajah

**MR.V.Ganesarajah is stepping down from office on 7th of August 2014. He is a glittering star in the galaxy of Eminent Principals.**

His tenure of office as the Principal of Jaffna Hindu College will go down in the history of Jaffna Hindu College as a golden era. We are proud to say that under his able Guidance and dynamic leadership, Jaffna Hindu College began to develop fast and wonderfully unprecedented developments took place in all fields. His outstanding contributions, hard work, dedication and devotion helped the college to reach a new high. Infact fast development into a national College is due to his efficient administration and dedicated teachers moreover the glory of Jaffna Hindu College is at its peak to day. His selfless and dedicated service will allways be remembered with love and gratitude by the Jaffna Hindu College community.

**By: A.Reputed, Competent,
and a.Veter an. English Teacher,
K.Rasanayagam at Jaffna Hindu College.**

(50465) (12.3.6)


**வீடு விற்பனைக்கு**

இல.76, இலந்தைக்குளம் வீதி, அரியாலை எனும் முகவரியில் உள்ள காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. ஏ9 வீதி, புகையிரத நிலையம், கல்யாண மண்டபம் என்பன அருகில் உள்ளன.

தொடர்பு: 077 597 9578

(50499) (4.6.3)

**மணமகள் தேவை**

- 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 30 ½ பாவமுடைய BSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 84 இல் பிறந்த 12இல் செவ்வாய் 40 ¼ பாவமுடைய அரச நிறுவனத்தில் நிறைவேற்று அதிகாரியாகப் பணி புரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 86இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 56 ¼ பாவமுடைய முகாமைத்துவ உதவியாளராகப் பணி புரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 42 ¾ பாவமுடைய (B.A, M.A Polo) அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை,
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி., முடமாவடி.
077 607 0862

(50502) (12.3.6)

**வீடு விற்பனைக்கு**

யாழ்.நகர் மத்தியில் நான்கு பக்க சுற்றுமதில்களுடன் இரு கிணறுகள், 10 அறைகள், 10 குளியல் அறைகள் கொண்ட மாடி வீடு 4 ¾ பரப்பில் விற்பனைக்குண்டு. தனியார் வைத்தியசாலை, தனியார் பாடசாலை, நிறுவனம், அலுவலகம் ஆகியவற்றிற்கு உகந்தது.

தொடர்புகளுக்கு :077 054 7623
(தரகர்கள் தேவையில்லை)

(50486) (12.3.6)








**திருமதி நவமணி சந்திரசேகரம்**
(SLPS-I,BEd)
[முன்னாள் அதிபர் - யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்]

**சேவை விவரம்**

01.06.1978 - 31.12.1981 - ஆசிரியர், யா/இமையாணன் அ.த.க.
01.01.1982 - 31.12.1983 - ஆசிரிய மாணவி, யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
01.01.1984 - 31.12.1986 - ஆசிரியர், மன்/புனித லோறன் றோ.க.த.க தலைமன்னார்
01.01.1987 - 31.03.1989 - ஆசிரியர், மன்/விடத்தல்தீவு அலிகார் ம.வி
01.04.1989 - 16.04.1995 - ஆசிரியர், யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்
17.04.1995 - 15.06.2014 - அதிபர், யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்
14.06.2014 - 25.07.2014 - அதிபர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி -

அரச பணியின் பெரும்பகுதியை எமது பாடசாலைக்காக அர்ப்பணித்து பெருஞ்சேவை புரிந்த பெருமாட்டி! பல்சீரும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றோம்.

விழாக்குழுவினர்
யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்.

(49721) (10.6.3)



சங்கானை செங்கற் படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம்
இரண்டாம் நாள் திருவிழா

படைகள் பூதங்கள் பல் கணங்கள் நிதம்பணிய
தடைகள் உடைய அடியார் தடபட என தினமும்
உடைய அடிக்கும் நாளிகேர திருவமுதை தித்தே
மிடைகள் நீக்குவான் செங்கற்படையான் திருநாளது
- இரண்டில்

ஆக்கம்: சங்கை – சிவம்

உபயம் : 2ஆம் திருவிழா உபயகாரர்கள்
ஐங்கரன் அடியார்கள்
நிற்சாமம், சங்கானை.

Peninsula Trading Company (Private) Limited
பெனின்சுலா றேடிங் கம்பனி (பிறைவேற்) லிமிட்டற்
வடமாகாண M Lotto முகவர்

* M4D - 0 தொடக்கம் 9 வரை 4 இலக்கங்களைத் தெரிவு செய்து 20/= பெறுமதியான ரிக்கற்றுகளை வாங்கி 10000 ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
* M Lotto - 1 தொடக்கம் 63 வரை 4 இலக்கங்களைத் தெரிவு செய்து 20/= பெறுமதியான ரிக்கற்றுகளை வாங்கி 4 மில்லியன் ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
* M Lotto Plus - 1 தொடக்கம் 65 வரை 5 இலக்கங்களைத் தெரிவு செய்து 50/= பெறுமதியான ரிக்கற்றுகளை வாங்கி 5 கோடி ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
* M Super Lotto - 1 தொடக்கம் 50 வரை 6 இலக்கங்களைத் தெரிவு செய்து 150/= பெறு மதியான ரிக்கற்றுகளை வாங்கி 15 கோடி ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு உள்ளடங்கலாக வடமாகாணத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் எமது Lotto விற்பனை முகவர்கள் தேவை. விரும்புவோர் எமது யாழ். முகவரை கீழ் உள்ள விலாசத்துக்கு தொடர்புகொள்ளவும்.

இல. 120, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (50479) (10.0.3)
T.P: 021 222 5333, 021 222 7733, 021 222 7333, 076 622 8333

VISIBLE DIFFERENCE
hair and beauty academy for women



உலகப் புகழ்பெற்ற அழகுக் கலை நிறுவனத்துடன் இணைந்து பணியாற்ற உங்களுக்கும்

ஓர் அரிய வாய்ப்பு!

உலகப் புகழ்பெற்ற தமிழக அழகுக்கலை நிபுணர் திருமதி வசுந்தரா அவர்களின்
'விஸிபிள் டி.'.பரன்ஸ்'
அழகு சிகிச்சை நிறுவனம், இலங்கை மக்களின் ஏகோபித்த விருப்பத்தின் பேரில், தனது உன்னத அழகு சாதனப் பொருட்களை இலங்கையில் விநியோகிக்கவுள்ளது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, நீங்களும், விஸிபிள் டி.'.பரன்ஸுடன் கெளரவ முகவராகலாம்.

முந்துங்கள்! சில இடங்களே உள்ளன!

அழகு சிகிச்சையில், சிகையலங்காரத்தில், ஒப்பனைக் கலையில் நிபுணத்துவம் பெற விரும்புகிறீர்களா? அழகுக் கலைத் துறையில் இருபது வருடங்களுக்கு மேலான அனுபவம் கொண்டவரும், எண்ணற்ற அழகு சிகிச்சை நிபுணர்களையும் உருவாக்கியவருமான வசுந்தராவின் நேரடிப் பயிற்சி உங்களுக்காகக் காத்திருக்கிறது. உங்கள் வசதிக்கேற்ப நீண்டகால, குறுங்கால பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.





* அழகு சிகிச்சை மற்றும் சிகையலங்காரத்தில் முழுமையான பயிற்சி - 1.5 மாதங்கள்
* ஸ்பா சிகிச்சை பயிற்சி - 15 நாட்கள்
* அஸ்தடீஷியன் பயிற்சி - 15 நாட்கள்

குறிப்பு: தனிப்பட்ட முறையிலோ, குழுக்களாக இணைந்தோ பயிற்சி பெறலாம். தங்குமிட, போக்குவரத்து வசதிகளும் செய்து தரப்படும்.

முழு விபரங்களுக்கு அழையுங்கள்:
எண் 5, பாலாஜி அவென்யூ முதல் தெரு, (வித்தியோதயா பள்ளி எதிரில்) தி.நகர், சென்னை - 600 017, தமிழ்நாடு, இந்தியா. (50492)
தொலைபேசி:
0091 44 2834 4079 vasundhra.vasu@gmail.com
0091 98415 25298 www.visibledifference.in

British College of Languages
பிரித்தானிய ஆங்கிலக் கல்லூரி

IELTS [Highest pass rate in Jaffna]
General English
Spoken English
I-ESOL
IELTS Registration Centre
City & Guilds APPROVED CENTRE
British College Smart teachers ,bright tomorrow
0777302882
Business English (with presentation skills)

படிமுறை ரீதியில் அமைந்த கற்கை நெறிகள்,மாணவரின் நிலைக்கேற்ற கல்வி நெறியை தெரிவு செய்ய வசதி செய்கிறது. 16 வருட அனுபவமுள்ள முழு நேர இங்கிலாந்து பட்டதாரி ஆசிரியர்கள் கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம். எமது மாணவர்களின் வெற்றிக்கதைகளை இணையத்தில் காணுங்கள் : http://edu.kugroup.info/ (c.15603)

BCL@Knowledge Unvierse
No 626,1/1,K.K.S Road, Jaffna.021-3208342

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக.2

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் திருவிழாக் காலத்தில் நடத்தும் சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று மாலை 3 மணிக்கு, திருப்பெரும்வடிவம் என்ற தலைப்பில் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும் தொல்புரம் ஆதி முத்துமாரி அம்பாள் அறநெறிப்பாடசாலை, கைதடி பெரியதம்பிரான் ஆலய அறநெறிப் பாடசாலை, பண்டத்தரிப்பு மார்க்கண்டு சுவாமிகள் அறநெறிப்பாடசாலை மற்றும் வேலணை சரவணை ஸ்ரீ செல்லக் கதிர்காம முருகன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (வ)

◆◆◆

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு, எஸ். திருஞானசம்பந்தன் - பாடல், செல்வி க.சித்ரா - உடன் பாடுபவர், என். செல்வச்சந்திரன் -ஹார்மோனியம், சுதா வேல்மாறன் - மிருதங்கம், எஸ். செந்தூரன் - முகர்சிங் ஆகியோர் பங்கு கொள்ளும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (வ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் 29ஆவது குருபூசைத் தினம்

வடமராட்சி, ஓக. 2

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் சுற்றாடலில் ஆனந்தா ஆச்சிரமம் என்ற பெயரில் மடாலயம் ஒன்றை நிறுவி அன்னப்பணி, சமயப் பணிகளை பல்லாண்டு காலம் மேற்கொண்டு வந்த ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில் வாகனம் சுவாமிகளின் 29 ஆவது குருபூசைத் தினம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக பூசை, ஆராதனைகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையின் உப தலைவர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் ஆச்சிரமத்தில் இடம்பெறும் குருபூசை நிகழ்வில் மயில் வாகனம் சுவாமிகளின் அடியார்கள் குழுவின் பஜனையும் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறும். தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஒ-173)

## கஞ்சிக் கலயங்களை ஏந்தியவாறு பக்தர்கள் திரண்டு ஊர்வலம்

ஆடிப்பூர விழாவையொட்டி ஏற்பாடு


மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் யாழ். மன்றத்தினர், ஆடிப்பூர விழாவையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை கஞ்சிக்கலய ஊர்வலம், பாலபிடேகம் மற்றும் வழிபாட்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர். திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய முன்றிலில் தயாரிக்கப்படும் கஞ்சியை சின்னஞ்சிறிய மண் பானைகளில் நிரப்பி ஏந்தியவாறு செவ்வாடை சக்திகளின் ஊர்வலம் இடம்பெறும்.

அன்னை ஆதிபராசக்தியின் திருவுருவப் படங்கள் தாங்கிய வண்ணம் கஞ்சிக் கலயங்களுடன் செவ்வாடை சக்திகள், அங்கிருந்து ஊர்வலமாக அணிவகுத்து சட்டநாதர் சிவன் கோயிலுக்குச் சமீபமாகவுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தை அடைவர். அங்கு அன்னை ஆதிபராசக்தியின் திருவுருவச் சிலை சுயம்புவுக்கும் பால் அபிடேகம் இடம்பெறும். தொடர்ந்து மகேஸ்வர பூசையுடன் ஆடிப்பூர விழா நிறைவுபெறும். (ஒ)

## சாவகச்சேரியில் திருச்சொரூப பவனி

சாவகச்சேரி கச்சாய் புனித விகோரியார் தேவாலய நவநாள் திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வான திருச்சொரூப பவனி நாளை ஞாயிறு காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

இதனையொட்டிய கூட்டுத் திருப்பலி நாளை காலை 6.30 மணிக்கு அமலமரித் தியாகிகள் சபை மகானதி தலைவர் எட்வின் வசந்தராஜா தலைமையில் இடம்பெறும். ஆலய திருச்சொரூப பவனியை அடுத்து ஆலயத்துக்கான புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)



நல்லூர் முருகன் முதலாம் நாள் திருவிழா

## வருவோம் திருக்காட்சி காண!

நல்லூர்ப் பதியில் கோயில் கொண்ட அழகனே
நலமர்ன சமாதானம் நிலைத்திடச் செய்திடுவாய்
எல்லாரும் இன்புற்று வாழ்கின்ற நிலை தாராய்
ஏற்றமிகு நல்லூரில் வீற்றிருக்கும் குமரனே

பொல்லாத சுயநலம் சிறிதேனும் இல்லாமல்
பொது சேவை செய்திட எமை ஆளாக்கி அருள்வாய்
நல்லோர்கள் வாழ்கின்ற நல்லை நகர்க் கந்தனே
நாள் தோறும் வருவோம் உன் திருக்காட்சி காண

*ஏழாலை மு.இந்திராணி*



## நாளும் அவனருள்


சொல்லுக்குள் பொருளுண்டு
ஓசை சந்தங்களுமுண்டு
நல்லூரான் அருளுமுண்டு நாளும்
அவனருள் திருநாமங்களை
எல்லோரும் பாடிப் பணிந்து
போற்றி மகிழ அவன் புகழை
அல்லல்கள் போக்கி அருள்
வாழ்வைத் தருவானவனே!

*இராம ஜெயபாலன்*

## மாலவன் மருகனே அழகு முருகா...

பாற்கடல் துயிலும் மாயோன் மருகனே
புரம் எரித்த எந்தை ஈசன் மைந்தனே
பார்வதியிடம் வேல் பெற்ற அழகனே
மாபாரதம் தந்த தும்பிக்கையான் சோதரனே
சரவணப் பொய்கை வந்துதித்த பெருமானே
தேவர்கள் துயர் துடைத்த வேலவனே
பிரணவப் பொருள் உரைத்த குமரனே
ஆறுமுகங்கள் கொண்டு அருள் பொழியும் - கந்தா
உன் திருவடி தொழுவோர் துயர் துடைப்பாய் நாளும்

*நிசா (இரா- புரம்)*





# சர்வதேச அழுத்தம், கவனம் இலங்கை விடயத்தில் அவசியம்

## வலியுறுத்துகிறார் நவநீதம்பிள்ளை

கொழும்பு,ஓக.2

இலங்கை விடயத்தில் சர்வதேச கவனமும் -அழுத்தங்களும் அவசியம் தேவை என்று வலியுறுத்திக் கூறியிருக்கின்றார் பதவியிலிருந்து விலகிச் செல்லும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

ஓகஸ்ட் மாத இறுதியில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் பதவியில் இருந்து பணி முடிந்து செல்லவுள்ள நவநீதம்பிள்ளை 'அல்ஜசீரா' தொலைக்காட்சிக்கு நேர்காணல் ஒன்றை இந்த வாரம் வழங்கியிருந்தார்.

அந்த நேர்காணலில் இலங்கை தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர், அச்சமயம் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

"இலங்கை தொடர்பில் ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரைத்த சில விடயங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட விடயங்களை ஒத்துள்ளன. அவற்றையே எனது அறிக்கையிலும் நான் வலியுறுத்தி இருக்கிறேன்.

எனது இந்த அறிக்கை இலங்கைக்கு எதிரான பரப்புரை அல்ல.

இலங்கை போர் அழிவுகளில் இருந்து மீள்கட்டுமானம் அடைந்து முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என விரும்புகின்றது. இது அவசியம்தான். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வை வழங்குவது அதனை விட முக்கியமானது. இதையே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை பலமுறை ஐ.நா. மனித உரிமைகள் சபை கேட்டுக் கொண்டது. ஆனால், அதனை செய்வதற்கு இலங்கை அரசு தவறி விட்டது.



கடந்த வருடம் நான் இலங்கைக்கு சென்றிருந்தபோது என்னை சந்தித்த மக்களில் சிலரும், மதத் தலைவர்களும் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதுவே எனது பணிக் காலத்தில் நான் சந்தித்த மிக மோசமான சம்பவம்.

மேலும், இலங்கையின் இத்தகைய செயற்பாடுகளுக்கும், பிரச்சினைத் தீர்வுக்கும் சர்வதேச கவனமும் - அழுத்தமும் தேவை என்ற உறுதிப்பாட்டை எனக்கு அந்தச்சம்பவம் ஏற்படுத்துகின்றது" - என்று தெரிவித்துள்ளார் நவநீதம்பிள்ளை. (ஓ)

## இந்து இளைஞர் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்து இளைஞன் பவளவிழா மலர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பொது மருத்துவ நிபுணரான மருத்துவர் த.பேரானந்தராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நூல் வெளியீட்டுரையை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா நிகழ்த்துவார்.

முதற் பிரதியை இதயநோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர் ம.குருபரன் பெற்றுக் கொள்வார். ஆய்வுரையை பேராசிரியர் தி.வேல்நம்பி ஆற்றவுள்ளார். (க)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







பொன்னாலை புண்ணிய பூமியின் தலையாக விளங்கும் கிருஷ்ணன் கோயிலின் முன்றிலில் அமைந்துள்ள மின்பிறப்பாக்கி மூலம் இருளில் இருந்த பொன்னாலைப் பகுதி வடக்கின் வசந்தத்தின் மூலம் இன்று ஒளிமயமாக காட்சி அளிக்க உள்ளது
**இன்று (02.08.2014) சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு**
பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர்
கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களால்
இங்கு மின் இணைப்பு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
Congratulation
இதன் ஏற்பாட்டாளர்களாக விளங்கும்
Congratulation
நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற பிரதித் தலைவருமான
கௌரவ முருகேசு சந்திரகுமார் M.P (அசோக் தோழர்) அவர்களையும்
நடந்து முடிந்த மாகாண சபை தேர்தலில் போட்டி இட்டபோது எமது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்றிய வலிகாமம் அமைப்பாளரும்
வலிமேற்கின் எதிரணித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன் தோழர்)
அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இச்சந்தர்ப்பத்தில்
நாம் (E.P.D.P) அமைப்பையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(C/15294)(7.6.3)

வாழ்த்துவோர் :
பொன்னாலை இளம்சுடர் சனசமூகத்தினரும்
பொன்னாலை பிருந்தாவன சமூக முன்னெடுத்தல் குழுவினரும்

# பிற்பொக்கற் அடிக்க முயன்ற சிறுவன் கைது

வலி.வடக்கு, ஓக 2

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பயணி ஒருவரிடம் பிற்பொக்கட் அடிக்க முற்பட்ட எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, காரங்குளத்தைச் சோந்த தரம் 3 இல் கல்வி கற்கும் சிறுவன் ஒருவனே பிற்பொக்கட் அடிக்க முற்பட்டு மாட்டிக் கொண்டவராவார்.

இதுகுறித்து சிறுவன் கூறுகையில்தான் வவுனியாவில் இருந்து புதன்கிழமை தனது பாட்டியின் வீட்டுக்கு வந்ததாகவும், அண்ணன் ஒருவர் தன்னைக் கூட்டி வந்து பஸ் நிலையத்தில் விட்டு பணத்தை எடுக்குமாறு கூறியதாகவும் தான் எடுக்க முற்பட்ட வேளையில் தன்னை பிடித்துவிட்டதாகவும் கூறினான்.

யாழ்ப்பாணம் பொலிஸார் வவுனியா பொலிஸாருடன் தொடர்பு கொண்டு குறித்த சிறுவனின் பெற்றோரை அழைத்துவர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறுவன் கூறியதைப் போன்று சிறுவனை அழைத்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்ட அண்ணனை பொலிஸார் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் தேடிய போதிலும் குறித்தநபர் அகப்படவில்லை. (வ-86)

## பணியாளர்கள் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு ஆண் பணியாளர்கள் தேவை.
வயது எல்லை 18-25
முடிவு திகதி 04.08.2014
தொடர்பு: Pc Systems மானிப்பாய்
076 680 6338 (50516) (4.6.3)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சுந்தரேசு



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரேசு 30.07.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நமசிவாயம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், மதங்கசூடாமணி, சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சரஸ்வதி, தனலக்சுமி, சிறீஸ்கந்தராஜா, மனோகரன், கர்ணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதர்சினி, சுதாகரன், காலஞ்சென்ற சுதர்சன்(பாபு) மற்றும் சுதர்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபேந்திரன், சிவரூபினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிணன், கவிதா, பிரவிந்தன், அர்யுந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Meadowvale Visitation Centre 7732 Mavis Road, Brampton, ON L6Y 5L5 இல். இன்று (02.08.2014) சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 9 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு, நாளை (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை அதே மண்டபத்தில் மு.ப. 10 மணி முதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப. 2 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 222 8730 (50504)(4.6.3)

தகவல்:
தம்பி: வே.மனோகரன்

## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி வேலாயுதபிள்ளை

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், சம்பியன்லேன், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி வேலாயுதபிள்ளை 29.07.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (கந்தசாமி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - இரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கருணாதேவி (கருணா) யோகராசா (மணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நித்தியானந்தசிவம் (அபிதா ஸ்ரோர்ஸ் - வவுனியா), சந்திரலீலா (லண்டன்), புஸ்பலீலா (யாழ்), பவானந்தன் (சிவா - யாழ்), லதாநிதி (குடும்பநல உதவியாளர் - யாழ்.மாநகரசபை), பவாநிதி (லண்டன்), தயாநிதி (பிரான்ஸ்), துஷியந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஞ்சினி, சதானந்தன், சந்தானகோபால், சித்திரவேல், காந்திமதி, சிறீவிக்னேஸ்வரன், தயாசீலன், சுயேந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிதா, கிருயன், துஷா, துஷி, பிரசாந், மதிராஜ் (ஆலோசகர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம்), கபில்ராஜ், சன்ராஜ், துஷிராஜ், ஜீவப்பிரியன், தர்சன், லக்சிகா, டிலக்ஷன், லக்சிகன், தனுஷி, லபிஷா, நிகில், பிரியங்கா, ரம்மியா, பிருந்தன், கவிப்பிரியா, நிதுரா, நிதுரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.56/3, சம்பியன்லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (50506) (12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 604 2183/077 101 7660

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சிவா (ஜீவா)



கரணவாய் மேற்கு அறிவாலயத்தைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவா (ஜீவா) 28.07.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், ராதாவின் அன்புக் கணவரும், சியானின் பாசமிகு தந்தையும், திருமதி கருணாகரன் ஜீவராணி (பிரான்ஸ்), திருமதி ஜெயக்குமார் ஜீவலதா, திருமதி ஜெயரூபன் சுஜாதா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறிவாலயம், கரணவாய் மேற்கு, கரவெட்டி.
T.P : 021 226 3517, 077 660 0826 (49725) (7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 72 மணிநேர போர் நிறுத்தம்

## ஐ.நா.- அமெரிக்கா கூட்டாக ஏற்பாடு

ஜெருசலேம்,ஓக.2

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ மூனின் கோரிக்கைக்கு இணங்க, இஸ்ரேலிய படையினரும், ஹமாஸ் போராளிகளும் கடந்த வியாழக்கிழமை முதல் 72 மணி நேர போர் நிறுத்தத்துக்கு சம்மதித்துள்ளனர்.

காஸா பகுதியில் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

போரை நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் பயன் அளிக்கவில்லை. ரமழான் பண்டிகையை முன்னிட்டு தற்காலிகமாகத் தாக்குதல் நிறுத்தப்பட்டு, பின்னர் மீண்டும் சண்டை தொடங்கியது.

இரு தரப்பினருக்கிடையிலான தாக்குதலின் 23 ஆவது நாளான கடந்த 30ஆம் திகதி இஸ்ரேலின் தாக்குதலுக்குப் பயந்து இடம்பெயர்ந்த சுமார் மூவாயிரம் பலஸ்தீனியர்கள் தஞ்சம் அடைந்திருந்த ஐ.நா. பள்ளி மீது இஸ்ரேல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் குழந்தைகள் உட்பட 20 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

முன்னறிவிப்பு இன்றி நடத்தப்பட்ட இந்த கொடூரத் தாக்குதலுக்கு ஐ.நா. செயலாளர்நாயகம் பான் - கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இரு தரப்பினரும் தாக்குதல்களை கைவிட்டு உடனடியாக நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த போர் நிறுத்தம் வரும் ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு வரை நடைமுறையில் இருக்கும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ மூனும், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் ஹெரியும் கூட்டறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளனர். இந்த இடைக்காலத்தைக் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லவும், இறந்தவர்களின் பிரேதங்களை அடக்கம் செய்யவும் பொது மக்கள் பயன் படுத்திக் கொள்வார்கள் எனக் கருதப்படுகிறது. (த)

## மகசேசே விருதுகளுக்கு 6 பேர் தேர்வு

சீனாவைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர், சுற்றுச்சூழல் துறை சார்ந்த வழக்குரைஞர் ஆகியோர் உட்பட 6 பேருக்கு இந்த ஆண்டுக்கான மகசேசே விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெண் பத்திரிகை ஆசிரியை ஹு ஷுலி (வயது - 61), சுற்றுச்சூழல்துறை சார்ந்த வழக்குகளில் வாதிடும் வழக்குரைஞர் வாங் கான்ஃபா (வயது - 55) ஆகியோர் இந்த விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்தோனேஷிய மானுடவியல் நிபுணர் சார் மார்லினா மானுருங், ஆப்கானிஸ்தான் தேசிய அருங்காட்சியக இயக்குநர் ஒமரா கான் மசூதி ஆகியோரும் இவற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். (த)

## தாய்வான் எரிவாயு குழாய் வெடித்ததில் 20 பேர் சாவு



தைபே,ஓக. 2

தாய்வானின் தென்மேற்கு பகுதி யிலுள்ள துறைமுக நகரமான கவோ சியுங் இரண்டாவது பெரிய நகரம் ஆகும். இங்கு 2.8 மில்லியன் மக்கள் வசித்துவருகின்றனர். இந்த நகரத்தின் குடியிருப்புப் பகுதியில் வியாழக்கிழமை நள்ளிரவு எரிவாயுக் குழாய் வெடித்துச் சிதறியதில் அந்தப் பகுதியின் சாலை முற்றிலும் சேதமடைந்தது. சாலையின் இருபுறமும் இருந்த மரங்கள் சாய்ந்து அங்கு நிறுத்திவைக் கப்பட்டிருந்த கார்கள், மோட்டார் சைக்கிள் ஆகியவை சேதமடைந்தன. இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டவர்களில் 20 பேர் பலியாகி உள்ளனர், 270 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்த வெடி விபத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதி முழுவதும் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டதால் மீட்புப் பணியில் தாமதமேற்பட்டது.

எங்கும் கூச்சலும், குழப்பமும் நிலவின. வெடித்த இடத்தில் தோன்றிய தீப்பிழம்பு கொழுந்துவிட்டு எரிந்து வருகின்றது. சியான் சென் மாவட்டத்தின் குடியிருப்பு, தொழில் நகரமான கவோசியுங்கில் பல பெற்றோலிய நிறுவனங்கள் தங்களின் எரிவாயுக் குழாய்களை அங்கு செயற்பட்டுவரும் கழிவுநீர்த் திட்டத்துடன் இணைத்துப் பதித்துள்ளனர் என்று அந்த நகர மேயர் சென் சு குறிப்பிட்டுள்ளார்.

மக்களைப் பாதுகாப்பதே தங்களின் முதல் கடமை என்று கூறிய அவர் நிலத்தடி குழாய்கள் செல்லும் பகுதியில் வாழும் மக்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறும்படி கேட்டுக் கொண்டுள்ளார். எரிவாயுக் கசிவுக்கான காரணம் தெரியவில்லை என்று கூறப்படுகின்றது. (த)



காஸாவில் அல் ஷவி வைத்தியசாலையில் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதோடு, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மொஹமட் அலாலியா என்ற சிறுவன், காயமடைந்து குறித்த வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில், தனது மனத்தின் ரணங்களை வார்த்தைகளால் வெளிப்படுத்தியுள்ளான். நினைக்கவே வேதனையாக உள்ளது. காஸாவில் சிறுவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். உலக நாடுகள் ஏன் இதுபற்றி கவனம் செலுத்தவில்லை. ஏனைய நாட்டுச் சிறுவர்களை போல ஏன் எங்களால் வாழ முடியவில்லை என அந்தச் சிறுவன் கேள்வி எழுப்பியுள்ளான். (த)

# கிளர்ச்சியாளர் குழுக்கள் லிபியாவில் கடும் சண்டை

டுனிஸ்,ஓக. 2

லிபியாவில் கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையிலான சண்டை வலுப் பெற்று வருவதால், லிபியாவிலிருந்து வெளியேறி அண்டை நாடான டுனீசியாவில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டோர் தஞ்சமடைந்துள்ளனர்.

இதுகுறித்து டுனீசியா வெளியுறவுத்துறை அமைச்சர் மோன்ஜி ஹம்தி குறிப்பிடுகையில்:

"டுனீசியாவுக்கு அகதிகளாக வரும் ஏராளமான லிபியர்களை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதைத் தடுக்க லிபியா அரசு அதன் எல்லைகளை உடனடியாக மூட வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளோம்.

"டுனீசியாவின் பாதுகாப்புக்கும், ஸ்திரத்தன்மைக்குமே நாங்கள் முன்னுரிமை கொடுப்போம். தேவைப்பட்டால் லிபியாவுடனான எல்லைகளை நாங்கள் மூடுவோம் "என்று தெரிவித்துள்ளார்.

லிபியா தலைநகர் திரிபோலியிலுள்ள சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்றுவது தொடர்பாக இரு போட்டி கிளர்ச்சியாளர்கள் குழுக்களுக்கிடையே கடந்த சில வாரங்களாக மோதல் நடைபெற்று வருகிறது.

இந்த மோதலில் இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ளனர்.

**முன்னாள் துணைப் பிரதமர் விடுவிப்பு:**

400இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனிடையே, மர்ம நபர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை கடத்தப்பட்ட லிபியாவின் முன்னாள் துணைப் பிரதமர் முஸ்தபா அபு ஷாகர், சில மணி நேரம் கழித்து விடுவிக்கப்பட்டார் என்று அவரது உறவினர் ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

**பிரேஸில் தூதரக அதிகாரிகள் வெளியேறினர்**

லிபியாவில் உள்நாட்டுப் போர் வலுவடைந்துள்ளதால், அங்கிருந்து பிரேஸில் தூதரக அதிகாரிகள் வெளி யேறியுள்ளனர். இதுகுறித்து, பிரேஸில் வெளியுறவுத்துறை அமைச்சகம், வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்," லிபியாவில் போராட்டக் குழுக்களுக்கிடையே மோதல் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

"இதனால், அங்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருவதால், திரிபோலியில் இருந்த எங்கள் தூதரக அதிகாரிகளை, டுனீசியாவுக்கு அனுப்பி வைத்துள்ளோம்' "என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளும் திரிபோலியிலுள்ள தங்கள் தூதரகங்களை மூடி விட்டன.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, எகிப்து ஆகிய நாடுகள், லிபியாவிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அங்குள்ள தத்தம் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளன. (ஏ)

## ஹமாஸ் சுரங்கப்பாதைகள் அனைத்தும் தகர்க்கப்படும்



பெஞ்சமின் நெத்தன் யாகு

காஸாமீதான இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல் நீடித்து வருகிறது. இந்நிலையில், ஹமாஸின் சுரங்கப் பாதைகள் அனைத்தும் தகர்க்கப்படும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் இயக்கத் துக்குமிடையிலான தற்காலிக போர் நிறுத்தத்துக்குப் பின்னர் இஸ்ரேல், தனது தாக்குதலை விரிவுப்படுத்தி வருகிறது.

"காஸாவிலுள்ள ஹமாஸ் இயக்கத்தின் சுரங்கப்பாதைகள் அனைத்தும் தகர்க்கப்படும். போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தத் தாக்குதல் நடத் தப்படுவது உறுதி" என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாகு பகிரங்கமாகவே அறிவித்துள்ளார்.

ஏற்கனவே, காஸாவில் 86,000 இஸ்ரேலிய இராணுவ சிப்பாய்கள் உள்ளார்கள். மேலும் தாக்குதலை தீவிரப்படுத்த 16,000 இராணுவத்தினரை அனுப்ப இஸ்ரேல் பாதுகாப்புத்துறை வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

காஸாவில் நடைபெற்று வரும் தொடர் தாக்குதல் 23 ஆவது நாளை கடந்துள்ளது. இந்நிலையில், பலஸ்தீன மக்களின் உயிரிழப்பு 1,300 ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேல் இராணுவத் தரப்பில் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (ஏ)

# 21ஆம் நூற்றாண்டின் கூட்டாளிகளாக இந்தியாவும் அமெரிக்காவும் திகழும்

## புதுடில்லியில் நேற்றுத் தெரிவித்தார் ஜோன் ஹெரி

வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா, அமெரிக்க அமைச்சர் ஜோன் கெரி கூட்டாகப் பேட்டியளித்தனர். பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து இந்தியத் தலைவர்களுடன் கெரி பேச்சு நடத்தினார். அப்போது 21ஆம் நூற்றாண்டின் நெருங்கிய கூட்டாளியாக இந்தியா-அமெரிக்கா திகழும் என்றும் இந்தியா எதிர்கொள்ளும் சாவல்களை அமெரிக்க உதவியுடன் சமாளிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். இந்தியா-அமெரிக்கா இரு நாடுகளிலும் ஏராளமான வளங்கள் உள்ளன எனவும் அமெரிக்க அமைச்சர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார். இந்தியா பொறுப்பு வாய்ந்த அணு ஆயுத நாடு.

கடந்த 15 ஆண்டுகளாக இந்திய-அமெரிக்க உறவு மேம்பட்டு வருகிறது. மேலும் உணவு உத்தரவாதம் குறித்த இந்தியாவின் கவலையை அமெரிக்கா உணர்ந்துள்ளது என்று கூறிய கெரி, உலக வர்த்தக அமைப்பில் இந்தியா அடுத்த கட்டத்துக்கு முன்னேற உதவ முடியும் என்றும் தெரிவித்தார். இந்தியா பொறுப்பு வாய்ந்த அணு ஆயுத நாடு என்றும் அவர் பாராட்டுத் தெரிவித்தார். இந்தியாவின் பலகோடி மக்களுக்குமின்சாரம்கிடைக்கச்செய்வதில் அமெரிக்கா உதவும் என டில்லியில் சுஷ்மாவுடன் கூட்டாகச் செய்தியாளர் களைச் சந்தித்த கெரி உறுதியளித்தார். (கு)



இந்தியா சென்றுள்ள-அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி நேற்று புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சு நடத்தினார். (கு)

## காங்கிரஸ் கட்சி தொடர்பில் அம்பலமாகும் இரகசியங்கள்



புதுடில்லி, ஓக. 2

காங்கிரஸ் கட்சி, மற்றும் அதன் தலைவர் சோனியா காந்தி பற்றியும் பல ரகசியங்களை அம்பலமாக்கிவரும் முன்னாள் அமைச்சர் நட்வர்சிங் பற்றி பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

காங்கிரஸ் தலைமையிலான முதலாவது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த நட்வர்சிங் ஊழலில் சிக்கியதால் பதவியை இழந்தார்.

தற்போது தனது சுயசரிதையை வெளியிடுவதுடன் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்து காங்கிரஸ் பற்றி பல அதிரடி விமர்சனங்களையும் முன்வைத்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறையில் 30 ஆண்டுகாலம் அதிகாரியாகப் பணியாற்றிய நட்வர்சிங், சீனா, அமெரிக்கா மற்றும் யுனிசெப் ஆகியவற்றில் முக்கிய பணிகளுக்கு அதிகாரியாகச் செயல்பட்டுள்ளார்.

1966ஆம் ஆண்டு முதல் இந்திரா குடும்பத்துக்கு நெருங்கிய நபராக உருவெடுத்த அவருக்கு 1984ஆம் ஆண்டு மத்திய அரசு பத்மபூஷண் விருது அளித்துள்ளது.

2005ஆம் ஆண்டு ஈராக்குக்கு உணவு, மருந்துக்கு எண்ணெய் என்ற ஐ.நா. திட்டத்தில் நடந்த ஊழலில் சிக்கியதால் அமைச்சர் பதவியை இழந்தார்.

2005ஆம் ஆண்டு உணவுக்கு எண்ணெய் ஊழலில் தன்னையும் மகனையும் சோனியா காப்பாற்றுவார் என நம்பியிருந்த அவருக்கு, சோனியா துரோகம் செய்து கட்சியைவிட்டே நீக்கியதாகக் கருதியுள்ளார்.

தற்போது நட்வர்சிங் சுயசரிதை என்ற பெயரில் தனக்குத் தெரிந்த இந்திரா குடும்பத்து ரகசியங்களைப் பகிரங்கப்படுத்தியதால், சோனியா காந்தி அவரை நேரில் சந்தித்து மன்னிப்பு கேட்டதாக நட்வர்சிங் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது. (கு)

## சசி தரூரின் வெற்றியை எதிர்த்து மனு தாக்கல்

முன்னாள் மத்திய அமைச்சர் சசி தரூர் மக்களவைத் தேர்தலில் திருவனந்தபுரத்தில் இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது வெற்றியை எதிர்த்து கேரள உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம் மாவட்ட பா.ஜ.க. தலைவர் எஸ்.சுரேஷ் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அதில், இறந்து போன சுனந்தா புஷ்கரின் சொத்து மதிப்பு விவரங்கள் பற்றி தன்னுடைய வேட்பு மனுவில் அவரது கணவரான சசி தரூர் தெரிவிக்கவில்லை. ஆகவே அவரது இந்த வெற்றி செல்லாததாகும். இவருக்கு அடுத்த இடத்தைப் பிடித்த பா.ஜ.கவின் ராஜகோபாலை வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டும் என்று கோரப் பட்டிருந்தது. மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி விசாரணையை 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (கு)

## நாடாளுமன்றுக்கு மோடியை அழைக்க அமெ.தீர்மானம்

வாஷிங்டன், ஓக. 2

பிரதமர் மோடியை, அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்ற அழைக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குஜராத் கலவரத்தால் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேல் மோடிக்கு விசா வழங்க மறுத்த அமெரிக்கா, தற்போது அவர் பிரதமரானதும் அமெரிக்காவின் உயரிய கௌரவத்தை அளிக்கவுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில், சபை உறுப்பினர்கள் பேசுகையில், இரு நாடுகளுக்கு இடையில் ஸ்திரத் தன்மை, ஜனநாயகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கூட்டுக் கூட்டத்தில் மோடியை உரையாற்ற அழைக்கவேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (கு)

# புனே நிலச்சரிவில் புதைந்த 160 பேரில் இதுவரை 51 சடலங்கள் மட்டுமே மீட்பு!

மகாராஷ்டிர மாநிலத்தில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் மண்மேடிட்ட புனே மாவட்ட கிராமத்திலிருந்து இதுவரை 51 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்த நிலையில் 8 பேரை மீட்புப் படையினர் காப்பாற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற மீட்புப் பணியில் 10 சடலங்கள் மீட்கப்பட்டதையடுத்து பலியானோர் எண்ணிக்கை 51 ஆக அதிகரித்துள்ளது.

பலியானவர்களில் 23 பேர் ஆண்கள், 22 பேர் பெண்கள், 6 பேர் குழந்தைகள் ஆவர்.

நிலச்சரிவினால் பெயர்ந்து விழுந்த பாறைகள், மண் சேற்றில் மலை அடி வாரப் பகுதியில் அமைந்துள்ள மாலின் கிராமம் மண்மேடிட்டுள்ளது. 44 வீடுகள் புதையுண்டுவிட்டன. இதில் சிக்கியுள்ளதாக அஞ்சப்படும் இன்னும் 160 பேரை உயிருடன் காப்பாற்றும் வாய்ப்பு மங்கிவிட்டது.

முதல்வர் பிருத்விராஜ் சவாண் தெரிவித்த தகவலின்படி புதையுண்டதாகக் கருதப்படும் 160 பேரில் இன்னும் 115 பேர் நிலச்சரிவில் புதைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதனிடையே, மழை நீடிப்பதால் மீட்புப் பணியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

### ராஜ்நாத் சிங் சென்று பார்வையிட்டார்

சோகம் நிகழ்ந்த அம்பேகாவன் தாலுகா மாலின் கிராமத்தை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் பார்வையிட்டு சோகத்தில் ஆழ்ந்துள்ள கிராம மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

உயிரிழந்தோரின் குடும்பத்தாருக்கு பிரதமர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2 லட்சம் உதவித் தொகையை வழங்குவதாக அவர் அறிவித்தார்.

இயற்கைச் சீற்றத்தால் பாதிப்புக்குள்ளாகி உள்ள கிராமத்துக்குத் தேவையான எல்லா உதவிகளையும் பிரதமர் உறுதியளித்தபடி மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கும், நிலச் சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பத்தாருக்கு மத்திய அரசு சார்பில் இரங்கல் தெரிவிக்கிறோம் - என்றார் ராஜ்நாத் சிங். (கு)



மீட்கப்படும் சடலங்கள்

# தேர்தல் காலத்தில் ஊடலும் பின்னர் கூடலும் ஹக்கீமுக்கும் விமலுக்கும் கைவந்த கலை

தேசிய சுதந்திர முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியக் கட்சிகள் தேர்தல் காலங்களில் தனித்துக் களமிறங்கினாலும் தேர்தலின் பின்பு அவை அரச கூட்டுக்குள் வந்துவிடும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போது, ஊவா மாகாண சபைத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி தனித்துக் களமிறங்கு வதற்கு எடுத் துள்ள முடிவு பற்றி அரசின் நிலைப்பாடு என்னவென்று அமைச்சரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு சர்வதேச நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தானே அந்தக்கட்சி தனி வழிப் பயணத்தை ஆரம்பித்துள்ளது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"அது அவர்களின் நிலைப்பாடு. முடிவெடுப்பதற்குரிய சுதந்திரம் அவர்களுக்கு இருக்கின்றது. இதுதான் கூட்டணி அரசின் ஜனநாயகமாகும். இது முதற்தடவை அல்ல. இதற்கு முன்னரும் தேசிய சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை தனித்துப்போட்டியிட்டுப் பின்னர் அரசுடன் இணைந்து கொண்டுள்ளன. கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்" என்று பதில் வழங்கினார் அமைச்சர் கெஹலிய.

அப்படியாயின் தேசிய சுதந்திர முன்னணியின் முடிவை ஒரு நாடகமாகவா கருதுகின்றீர்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்கு, " உண்மையாகவே அந்தக்கட்சி தேர்தலில் போட்டியிடுகின்றது எனக் குறிப்பிட்டார் அமைச்சர். (ஓ)

## நகைகள் திருட்டு; பணிப்பெண்ணும் கணவனும் கைது



கோப்புப்படம்

கொழும்பு,ஓக.2

கொழும்பு, முகத்துவாரம் அளுத்மாவத்தையிலுள்ள வீடொன்றில் நகைகள் களவுபோன சம்பவம் தொடர்பில் அந்த வீட்டின் பணிப்பெண்ணும் அவரது கணவனும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மோதர பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ள வீட்டு உரிமையாளரான பெண்ணுக்குப் பணி விடை செய்வதற்காக இந்தப் பெண் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்.

அந்தச்சமயம், வீட்டிலிருந்த அலுமாரியிலிருந்து பத்து பவுண் சங்கிலியொன்றையும், மூன்று பவுண் வளையல்கள் இரண்டையும் களவாடியவர் கடைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு இடைவழியில் கணவனைச் சந்தித்து அந்த நகைகளைக் கொடுத்துவிட்டு மீண்டும் வீட்டுக்கு வந்திருக்கிறார்.

நகைகள் களவுபோன விடயம் பற்றி வீட்டு உரிமையாளர் மோதர பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து இந்தப் பணிப்பெண் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் அவரது கணவரிடமிருந்த நகைகள் மீட்கப்பட்டன.

இவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக மோதர பொலிஸார் தெரிவித்தனர். (ஓ)

# ஐ.எஸ்.ஐ.எஸ். சர்வதேச தீவிரவாதம் இலங்கையை ஆக்கிரமிக்கும் அபாயம்

## அரச பங்காளி ஹெல உறுமய எச்சரிக்கை

கொழும்பு,ஓக.2

பாதுகாப்புப் பிரிவினரின் அலட்சியம் காரணமாக சர்வதேச தீவிரவாதிகளான ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினர் வெகு விரைவில் இலங்கையை முழுமையாக ஆக்கிர மிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, உக்ரைன் விமானத் தாக்குதலுக்கு எதிர்ப்பை வெளி யிட்ட ஐக்கிய நாடுகள் சபை, காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு ஏன் இதுவரை எதிர்ப்பைவெளியிடவில்லை என்றும் அந்தக் கட்சி கேள்வி எழுப்பியது.



நிஷாந்த வர்ண சூரிய

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமய காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அந்தக் கட்சியின் ஊடகப்பேச்சாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த வர்ணகுலசூரிய மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்கள் ஆணையாளர் கடந்த வியாழக்கிழமை சகல கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் ஊவாத் தேர்தல் குறித்து பேச்சு நடத்தினார். இதன் போது, வாக்குச் சாவடிக்கு வருகை தரும் முஸ்லிம் பெண்கள் அணிந்து வரும் ஆடை குறித்து நாம் கேள்வி எழுப்பினோம். இதில், நிகாப் மற்றும் பர்தா போன்ற ஆடைகளுடன் வாக்க ளிக்க வரும் பெண்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தேர்தல்கள் ஆணையாளர் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

நாட்டில் நீதி அனைவருக்கும் பொதுவானது என்ற கோட்பாட்டிற்கமையவே நாம் இந்த ஆடை விவகாரம் குறித்து கேள்வி எழுப்பினோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, இஸ்ரேல் தாக்குதல் குறித்தும் நாம் முக்கியமாகச் சுட்டிக் காட்ட வேண்டும். பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதலால் இதுவரை காஸாவில் 1,224 பேர் பலியாகியுள்ளனர்.

முஸ்லிம்களின் பெருநாளான ரமழான் தினத்திலும் கூட இந்தப் போரை நிறுத்திக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

காஸா பெண்கள், குழந்தைகள் மற்றும் அங்குள்ள மின் உற்பத்தி நிலையங்களைப் பிரதானமாகக் குறி வைத்தே இஸ்ரேல் தாக்குதலை மேற் கொண்டு வருகிறது. ஆனால், இந்தக் கொடூர யுத்தத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை இது வரையிலும் ஒரு கண்டனத்தையேனும் வெளியிடவில்லை.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு இவை போர்க்குற்றமாகவும், மனித உரிமை மீறலாகவும் தெரியவில்லையா?

உக்ரைன் வான் பரப்பில் மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டபோது கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட ஐ.நா வும், நவிப்பிள்ளையும் ஏன், காஸா மீதான தாக்கு தலைக் கண்டிக்கவில்லை? என்றார். (ஓ)

# போகம்பரைச் சிறையைப் பார்வையிட்டார் கோத்தா



ஓய்வு விடுதியாக மாறும் போகம்பரைச் சிறைச்சாலையின் நினைவுக்கல்லைத் திறந்து வைக்கிறார் கோத்தபாய

கொழும்பு,ஓக.2

கண்டியிலுள்ள போகம்பரச் சிறைச்சாலை நவீன மயப்படுத்தப்பட்ட ஓர் ஓய்வுவிடுதியாக மாற்றப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போகம்பரச் சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம். ஹர்ஸான் டி சில்வா மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமல் பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போகம்பரச் சிறைச்சாலையானது பாரம்பரிய கட்டடக் கலை களுடன் நிர்மாணிக்கப்பட வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த ஒரு கட்டடமாகும்.

போகம்பரச் சிறைச்சாலை கண்டி நகரில் அமைந்துள்ளதுடன் கண்டி நகரானது அதிக சுற்று லாப்பயணிகளை கவரும் ஒரு ரம்மியமான நகரமாகும்.

1876 ஆம் ஆண்டு சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் என்ஆர். சோன்டஸின் அறிவுறுத்தலின் கீழ் பிரித்தானிய மற்றும் இலங்கை அரசுகளால் இது நிர்மாணிக்கப்பட்டது இது 13 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இலங்கையின் இரண்டாவது பெரிய சிறைச்சாலை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

# யாழ். ஊடகர்கள் மீது கஞ்சாக் குற்றச்சாட்டு: ஊடக அமைச்சருடன் கடும் வாக்குவாதம்

கொழும்பு,ஓக.2

கொழும்பில் நடைபெறவிருந்த ஊடகப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஊடகவியலாளர்கள் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப் பட்ட விவகாரம் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சரிடம் ஊடக வியலாளர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்ததால் அமைச்சருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் பிற்பகல் ஊடகத் துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



கெஹலிய

கேள்விநேரத்தின் போது, யாழ். ஊடகவியலாளர்கள் கைது விவகாரம், தமிழ் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் இரத்து, செயலமர்வுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் சரமாரியாக கேள்விகளைத் தொடுத்தனர். எனினும், இவற்றுக்கு மழுப்பல் போக்கிலேயே அமைச்சர் பதிலளித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்த ஊடகவியலாளர்கள் பயணித்த வாகனத்தில் இராணுவம்தான் கஞ்சா வைத்ததாகக் கூறப்படுகின்றதே என எழுப்பப்பட்ட கேள்விக்கு,"யார் சொன்னது" என ஊடகவியலாளரிடம் திருப்பிக் கேட்டார் அமைச்சர்.

இதற்கு, "தடுக்கப்பட்ட ஊடகவியலாளர்கள்தான் கூறினார்கள்" என ஊடகவியலாளர் பதிலளிக்கையில், 'அப்படியா? இது குறித்து முறைப்பாடு செய்தால் விசா ரணை நடத்த முடியும்' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

"இல்லை... அமைச்சரே ! குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்களுக்கென நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள் மாத்திரம் ஏன் இவ்வாறு இரத்துச் செய்யப்படுகின்றன" என இதன்போது எழுப்பப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு, " ஏன்! தமிழ் ஊடகவியலாளர்கள் என்று குறிப்பிடுகின்றீர்கள்? இலங்கை ஊடகவியலாளர்கள் என்று கூறுங்களேன். ஜனநாயகம், தேசியப்பாதுகாப்பு ஆகியன முக்கியம் " என்று பதில் வழங்கினார் கெஹலிய.

சரி. தமிழ் மொழி மூல ஊடகவியாளர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அப்படியாயின், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைக்கு எந்தவித இடையூறுகளும் இல்லாத நிலையில், அதே பயிற்சியை தமிழ் ஊடகவியலாளர்களுக்கு வழங்கும்போது மாத்திரம் ஏன் தடங்கல் ஏற்படுத்தப்படுகின்றது என்ற வினாவுக்கு,

'அவ்வாறு எதுவும் இல்லை. மூன்று மொழிகளிலும் ஒரே விடயம்தான் கற்பிக்கப்படுகின்றது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது. இது தொடர்பில் அரசுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதன்பிரகாரமே அரசு செயற்படுகின்றது. சில அரசசார்பற்ற நிறுவனங்கள் விடயதானங்களுக்கு அப்பால் சென்று செயற்படுகின்றன. வாக்களிப்பது பற்றி விளக்கினால் பரவாயில்லை. யாருக்கு வாக்களிக்க வேண்டும் என ஆலோசனை வழங்குவது தவறான செயல் அல்லவா? சில அரச சார்பற்ற நிறுவனங்கள் பல வருடங்களாகக் கணக்கறிக்கைகளை வெளிப்படுத்தாமலுள்ளன.

அத்துடன், பாதுகாப்பு என்பது மிக முக்கியமானதாகும்" என்று பதில் வழங்கினார் அமைச்சர் கெஹலிய. (ஓ)



# காரில் சிக்கிய கோலா

ஐந்தறிவு கொண்ட காட்டில் வாழும் மிருகங்கள் வாகனாங்களைக் கண்டாலே பயந்து ஓடிய காலம் மாறி இன்று மனிதனின் ஆறறிவையே மிஞ்சிவிடும் அளவுக்கு மிருகங்கள் நடந்து கொள்கின்றன.

அந்த வகையில் ஆஸ்திரேலியாவில் அதிகமாகக் காணப்படும் கோலா எனப்படும் சிறிய விலங்கு ஒன்று, சுமார் 88 கிலோமீற்றர் தூரம்வரை கார் ஒன்றின் அடிப்பாகத்தில் தொங்கிக்கொண்டு பயணித்து உயிர்பிழைத்த சம்பவம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

பஞ்சு போன்ற தோலையும், சாதுவான குணத்தையும் கொண்ட இந்த விலங்குக்கு நான்கு வயதாகின்றது. ஆஸ்திரேலியாவின் மெரிபோரோவ் என்ற பிரதேசத்தில் இருந்து, மிகவும் பிரசித்தமான மாநிலமான குயீன்ஸ்லேன்ட் என்ற இடத்துக்குச் சென்ற கார் ஒன்றிலேயே அந்தப் பிராணி இவ்வாறு தொங்கிக்கொண்டு பயணித்துள்ளது.

காரைச் செலுத்தி வந்தவர்கள் குயின்ஸ்லேன்ட், ஜிம்பை என்ற இடத்தில் காரை பெற்றோல் நிரப்புவதற்காக நிறுத்தியபோதே அந்தக் கோலா, காரின் அடிப்பாகத்தில் தொங்கிக்கொண்டிருப்பதை அவர்களுடன் வந்த பயணியொருவர் அவதானித்துள்ளார். அதிர்ந்துபோன கார் செலுத்துநர், உடனடியாக ஆஸ்திரேலிய மிருகக் காட்சி சாலைகளின் வனவிலங்கு வைத்தியசாலைக்குத் தொடர்பை ஏற்படுத்தி இதுகுறித்து அறிவித்துள்ளார். சிகிச்சைகள் நிறைவடைந்த பின்னர் அந்தக் கோலாவின் உடல்நிலை கவலைக்குரியதாக இல்லை என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இவ்வாறான பிராணியொன்று இப்படி காருக்கு அடிப்பாகத்தில் பிரயாணித்து சிறு சிறு காயங்களுடன் உயிர்பிழைத்தது ஆச்சரியத்துக்குரிய விடயம். அதுக்கென்று ஒரு அதிர்ஷ்டம் இருந்திருக்க வேண்டும் என்று வைத்தியர்கள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

# செல்லப்பிராணிகளுக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய ரோபோ



சமகாலத்தில் அனைத்துத் துறைகளிலும் ரோபோக்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். அதேபோன்று செல்லப் பிராணிகள் போன்று மனிதர்களுடன் மிகவும் நெருங்கிய நண்பர்களாகச் செயற்படக்கூடிய ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

எஜமானின் ஒவ்வொரு தேவைகளையும் அறிந்து கொள்ளக்கூடிய இந்த ரோபோ அமெரிக்காவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

11 அங்குல உயரமுடையை இந்த ரோபோ, செல்பேசிகளுக்கு வரும் குறுஞ்செய்திகளைத் தெரிவித்தல், மாத்திரை எடுத்துக் கொள்ளும் நேரங்களை நினைவூட்டல், குழந்தைகளுக்கான கதைகளைச் சொல்லுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாகக் காணப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டளவில் விற்பனைக்கு வரவுள்ள இந்த ரோபோவின் விலை 300 பவுண்ட்ஸ்களாகும்.

# பேஸ்புக் தரும் அதிர்ச்சி

சமூகவலைத்தள பாவனையில் முன்னணியில் திகழும் பேஸ்புக், மொபைல் சாதனங்களுக்கான அப்பிளிக்கேஷனை வெளியிட்டுள்ளமை யாவரும் அறிந்ததே.



தற்போது இந்த அப்பிளிக் கேஷனில் இருந்து குறுஞ் செய்தி அனுப்பும் வசதியை நீக்கவுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது. குறுஞ்செய்திகளை அனுப்புவதற்காக மட்டும் அந்த நிறுவனத்தால் பேஸ்புக் மெசஞ்சர் என்ற புதிய அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே பேஸ்புக் மொபைல் அப்பிளிக்கேஷனில் இருந்து குறித்த வசதியை நீக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

திருமதி கனகசபாபதி மனோரஞ்சனா

(யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் லிகிதர்)

சிவன் கோயிலடி, காரைநகர் (கனடா)

மலர்வு 03-02-1961 | உதிர்வு 13-08-2013

வாழ்வாங்கு வாழும் வழியதனில்
வாழ்ந்திருந்தீர்
வாழும் வழியதனில் வழிமாறி
போனதெங்கே?
வேண்டியவை எல்லாம் வேண்டி
அவன் சிவன் தந்தான்
வேண்டாத வேளைதனில்
வேண்டுமென அழைத்து விட்டான்
ஆண்டாண்டு அழுதாலும்
ஆறாது உம்பிரிவு

உன் ஒளிமுகத்தை முன்நிறுத்தி
என்றும் உன்நினைவுடனே
வாழுகின்றோம்

நினைவில் எம்முடனும்
நிஜத்தில் இறைவனிடமும்
கலந்திட்ட உன் ஆன்மா
சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உன் நினைவுகளை
நெஞ்சில் சுமக்கும்
அன்பு மைத்துனர்கள்
திருமதி ஆறுமுகம்பிள்ளை
சொர்ணாம்பிகை
திரு. சு. கருணாகரன் (கர்ணன்)

# அதிக கோபம் கல்லீரல் பாதிப்பை ஏற்படுத்துமாம்

அதிக கோபம், அதிக உடல் உழைப்பு, மது அருந்துதல், போதைப் பொருள்கள், போதிய உறக்கமின்மை, கொழுப்பு உணவுகள் கல்லீரலைப் பாதிக்கிறது.



கல்லீரல் மனித உடலின் ஒவ்வொரு உறுப்புகளுக்கும் தேவையான சக்தியைப் பெற உதவுகிறது.
அது தன் வேலையைச் செய்தால்தான் மற்ற உறுப்புகள் சீராக இயங்கும்.
அது, இரத்தத்தைச் சேமித்து வைத்து உடல் உழைப்பின்போது தேவையான பகுதிகளுக்கு அனுப்பி தசைகளுக்கும், தசை நார்களுக்கும் ஊட்டமளிக்கிறது.
கல்லீரலின் சக்தி பாதிக்கப்பட்டால் தசை நாண்கள் சுருங்கி விரிதல், நீட்டி மடக்குதலில் தொய்வு ஏற்பட்டு உடலின் எலும்பு கூட்டமைப்பில் வலி மற்றும் நோய்கள் ஏற்படுகின்றன.
கண்பார்வைக் கோளாறுகள், சரும பாதிப்புகள், விரல் நகங்களில் கோளாறுகளுக்கு காரணம் கல்லீரலின் குறைபாடுகளே.
கல்லீரலின் குறைபாட்டால் மன இறுக்கம், அதிக கோபம், அதிக உடல் உழைப்பு, மது அருந்துதல், போதைப் பொருள்கள், போதிய உறக்கமின்மை, கொழுப்பு உணவுகள் கல்லீரலைப் பாதிக்கின்றன.
இதனால் கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், முரட்டுத்தனம், கடுஞ்சொற்கள், ஒற்றைத்தலைவலி, இரு தய நோய்கள், மஞ்சள் காமாலை, கிறுகிறுப்பு, வயிற்று வலி, புளித்த ஏப்பம், ஒழுங்கற்ற மாதவிடாய், பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.
மோசமான உணவு முறை மட்டுமல்லாமல், தொடர்ந்து அற்ககோலை அதிகமாக அருந்துதல், தொப்பை போன்ற விடயங்களும் கல்லீரல் கொழுப்பு பிரச்சினை வரக் காரணமாக உள்ளன.
இந்தப் பிரச்சினைக்கான காரணம் உணவு முறையை ஒட்டியே ஆரம்பிப்பதால், ஆரோக்கியமான உணவுகளை உண்பது அவசியம் ஆகிறது.



# விரைவில் சமிபாடடையும் உருளைக்கிழங்கு?

வயதானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் தேவையான சுண்ணாம்புச்சத்து இதில் அதிகமாக உள்ளன. உருளைக் கிழங்கு எளிதில் சமிபாடடையும் தன்மை உடையது.

உலக அளவில் அரிசி, கோதுமைக்குப் பிறகு அதிகம் பயிரிடப்படுவது உருளைக்கிழங்குதான். உருளைக் கிழங்கு உயர்தரமான சத்துணவு கொண்ட காய்கறியாகும். 100 கிராம் கிழங்கில் கிடைக்கும் கலோரி 97 கிராம் ஆகும்.
இதில் புரதம் 16 சதவீதம் உள்ளது. பொஸ்பரஸ், இரும்பு, விற்றமின் ஏ,பி,சி ஆகியவையும் போதியளவில் உள்ளன.
வயதானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் தேவையான சுண்ணாம்புச்சத்து இதில் அதிகமாக உள்ளது. உருளைக் கிழங்கு எளிதில் சமிபாடடையும் தன்மை உடையது.
வயதானவர்களுக்குத் தேவையான புரதம், மாப்பொருள்கள், சர்க்கரை, சுண்ணாம்புச் சத்து, பொட்டாசியம் போன்ற அனைத்தும் உருளைக்கிழங்கில் கிடைக்கிறது.
உருளைக்கிழங்கை தோலுடன் சாப்பிட்டால் தான் சத்துக்கள் கிடைப்பதுடன் எல்லா நன்மைகளும் கிடைக்கும்.
பூரிக்கு, உருளைக்கிழங்கு மசாலாதான் சிறந்த தொட்டுக் கொள்ளும் உணவாகும். சில காய்கறிகளிலும், சில வகை கிழங்குகளிலும், சில வகை கீரைகளிலும், சில வகை பருப்பு களிலும் வாய்வு இருக்கத் தான் செய்கிறது.
அதற்காக நாம் அவற்றைச் சாப்பிடாமல் இருக்கிறோமா? சாப்பிடுகிறோம். எனவே உருளைக் கிழங்கை அளவோடு சாப்பிட்டு உடற்பயிற்சி செய்யுங்கள்.
உங்களுடைய எடைகூடாது, தொப்பையும் வராது. அதனால் எந்தப் பயமும் இல்லாமல் உருளைக் கிழங்கைச் சாப்பிட்டு மகிழ்ச்சியாக வாழுங்கள்.



# பிளாஸ்ரிக் கோப்பைகளில் புற்றுநோய் உருவாக்கும் வேதிப்பொருள்கள்

உணவுகளை ரின்கள் அல்லது பெட்டிகளில் வைப்பதற்காக பயன்படும் வேதி பொருள்களில் நச்சு உருவாக்க கூடிய பொருள்களும் காணப்படுகின்றன. அவை புற்றுநோயை உருவாகக் கூடும் என்றும், மரபணுக்களில் மாற்றத்தைத் தோற்றுவிக்க கூடியவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேநீர், கோப்பிஆகியவற்றைக்குடிப்பதற்கு பயன்படும் பிளாஸ்ரிக் கோப்பைகளின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் ஸ்டைரீன் என்ற வேதிப் பொருள் மனிதர்களில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடும் என்று அமெரிக்க அறிவியலாளர்கள் ஆய்வு ஒன்றில் தெரிவித்துள்ளனர்.
அமெரிக்காவின் தேசிய ஆய்வு அமைப்பு ஒன்று வேதியியல், நச்சு வேதிப் பொருள் கண்டறியும் அறிவியல் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளைச் சேர்ந்த 10 நிபுணர்களைக் கொண்டு ஆய்வு ஒன்றை நடத்தியது. அதில், வேதிப்பொருளான ஸ்டைரீன் மனிதர்களிடையே புற்றுநோயை உண்டாக்க கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளது.
ஆய்வின் தலைவர் வைத்தியர் ஜேன் ஹென்னே கூறும்போது, இது துன்பம் விளைவிக்கும் ஒன்று என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டியது அவசியமானது என்று தெரிவித்துள்ளார். அவரது கூற்றின்படி, அறிவியல் பூர்வமான தகவலின் அடிப்படையில், ஸ்டைரீன் புற்றுநோயை உண்டாக்குவதற்கான சான்றுகள் உள்ளன. ஆனால், சில மாற்று விளக்கங்களும் இருக்கின்றன.
அவை வாய்ப்பு, ஒரு பக்கச் சார்பு நிலை மற்றும் சில காரணிகள் ஆகும் என்று ஹென்னே தெரிவித்துள்ளார். எங்களது அறிக்கை இந்த வேதிப்பொருள் பிரச்சினைக்குரிய ஒன்று என தெரிவிக்கின்றது. ஆனால், அவற்றின் அளவு, பயன்பாடு, ஆபத்துக் கான பண்புகள் ஆகியவற்றைக் குறித்து ஆய்வு செய்ய வேண்டியது மிக அவசியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
உணவு வகைகளைப் பாதுகாப்பாக விற்பதற்காக அடைத்து வைக்கப்படும் நிலையில் பயன்படும் வேதிப்பொருள்களில் ஸ்டைரீன் உட்பட 170 அபாயகரமான வேதிப் பொருள்கள் சட்டபூர்வமான பயன்பாட்டில் உள்ளன என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
உணவுகளை ரின்கள் அல்லது பெட்டிகளில் வைப்பதற்காக பயன்படும் வேதிப் பொருள்களில் நச்சு உருவாக்கக் கூடிய பொருள்களும் காணப்படுகின்றன.
அவை புற்றுநோயை உருவாக்க கூடும் என்றும், மரபணுக்களில் மாற்றத்தைத் தோற்றுவிக்கக் கூடியவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஹென்னே தலைமையிலான ஆய்வுக் குழு, பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய 175 வேதிப்பொருள்களைக் கண்டறிந்துள்ளனர்.
இந்த பொருள்கள் ஆணின் விந்தணு உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுத்துதல், உறுப்புகள் பாதிப்புடன் உருவாகுதல் மற்றும் உடலில் ஓமோன் உற்பத்தியில் பாதிப்பு ஆகியவற்றை ஏற்படுத்துகின்றன என்று கண்டறிந்துள்ளனர்.
எனினும், உணவு தர கழகம், ஐரோப்பிய தரத்தின் கீழ் உணவு பொதி செய்யப்படுவதால் அதில் இருக்கும் வேதிப் பொருள்கள், ஒழுங்குகள் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பயன் படுத்தப்படும் பொழுது அவை குறித்து கருத்தில் கொள்ள வேண்டியதில்லை என்று விளக்கம் தருவதுடன் அவற்றை நுகர் வோர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.
அமெரிக்க வேதியியல் அமைப்பு ஸ்டைரீன் வேதிபொருள் குறித்து சாதகமாகக் கூறுகையில், உணவு பொருள்கள் உற்பத்தியில் குறிப்பாக, கோப்பி கோப்பைகள், சாலட் அடைத்து வைக்கப்பட்டு இருக்கும் ரின்கள் ஆகியவற்றில் 50 வருடங்களுக்கும் மேலாக பாலிஸ்டைரீன் பிளாஸ்ரிக் பயன்பாட்டில் உள்ளது.
இந்த வேதிப்பொருள், ஒழுங்குமுறை அமைப்பால் மறு ஆய்வு செய்யப்பட்டு, உணவு தொடர்பான பயன்பாட்டில் பாது காப்பானது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



# இந்திய அரசின் நிதி மூலம் மாந்தை கிழக்கில் வீடுகள்

முல்லைத்தீவு.ஓக.2
முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் இந் திய அரசின் நிதியுதவியுடன் 784 வீடுகள் மூன்று கட்டங்களாக அமைக் கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளில் 2 ஆயிரத்து 744 குடும்பங்கள் மீள் குடியமர்ந்துள்ளன.
இந்த நிலையில் இந்திய அர சின் நிதியுதவியுடன் முதற்கட் டமாக பாலிநகர், கொல்ல விளாங்குளம், பாண்டியன் குளம், நட்டாங்கண்டல் ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரி வுகளில் 433 வீடுகளும், அம்பாள் புரம், செல்வபுரம், சிவபுரம், கொல்லவிளாங் குளம், விநா யகபுரம் ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரி வுகளிலும் இரண்டாவது கட் டத்தில் 271 வீடுகளும் கரும் புள்ளியான், மூன்று முறிப்பு, ஒட்டறுத்தகுளம், பொன்னகர், பூவரசன் குளம், சிறாட்டிகுளம் ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் மூன்றாவது கட்டத்தில் 80 வீடுகளும் என 784 வீடுகள் அமைக்கப்பட் டுள்ளன.
இவைதவிர யு.என். கபிரெட் நிறுவனத்தினூடாக 316 புதிய வீடுகளும், 324 பகுதித் திருத்த வீடுகளும் நேப் திட்டத் தின் கீழ் 178 புதிய வீடுகளும் சர்வோதயத்தினூடாக 17 வீடுகளும் அமைக்கப்பட் டுள்ளன.
அத்துடன் இந்திய அரசின் மாதிரி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 வீடுகளும் அமைக்கப் பட்டுள்ளன. (க-55)

# அடாத்தாக காணி பிடித்தவரை வெளியேற்றுவதற்கு முடிவு

## அக்கராயன் கமநலசேவை நிலையத்துக்குரிய காணியிலிருந்து

கிளிநொச்சி.ஓக.2
கிளிநொச்சி அக்கராயன் கம நலசேவை நிலையத்துக்குரிய காணியை பொது நபரொருவர் அபகரித்தமை தொடர்பாக மேற் கொள் ளப்பட்ட விசாரணைக ளின் போது குறித்த காணி கம நல சேவை நிலையத்துக்குச் சொந்தமானதென உறுதி செய்யப்பட்டுள்ளது.
அக்கராயன் கமநல சேவை நிலையத்துக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதியை தனியார் ஒருவர் அடாத்தாகப் பிடித்ததுடன் அந்தக் காணிக் குள் வர்த்தக நிலையம் ஒன் றையும் நடத்தி வந்தார்.
இந்த நிலையில் குறித்த காணி யிலிருந்து வெளியேறுமாறு பல தடவைகள் அந்த நபருக்கு அறிவுறுத்தல்கள் விடுக் கப்பட்ட போதிலும் குறித்த நபர் மேலும் நிரந்தர கட்டடங்களை அமைப்பதில் ஈடுபட்டிருந்தார்.
இதனையடுத்து குறித்த காணியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சிப் பிரதேச செயலர், கமநல உதவி ஆணை யாளர் உள் ளிட்ட குழுவினர் சென்று பார் வையிட்டு குறித்த நபரை ஒரு இணக்கப்பாட்டுக்கு வருமாறும் கோரியிருந்தனர்.
ஆனால் தீர்வு எதுவும் கிடைக்க வில்லை. அதையடுத்து கடந்த வாரம் கிளிநொச்சியில் நடை பெற்ற காணிப்பயன்பாடு தொடர்பான நடமாடும் சேவையில் குறித்த காணி கமநல சேவை நிலையத்துக் குரியது எனவும் குறித்த காணி யில் அடாத்தாக இருப்பவரை அங்கிருந்து வெளியேற்றுவது எனவும் முடிவு எடுக்கப்பட் டுள்ளது. (க-18)



வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டம் தொடர்பாக அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையிலான குழுவினர் மன்னாரிலுள்ள குறிப்பிட்ட இடங்கள் சிலவற்றைப் பார்வையிட்டனர். (க-56)

# கொடுப்பனவுகள் கிடைக்காத துணுக்காய் விவசாயிகள்

துணுக்காய்,ஓக.2
துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த காலபோக நெற் செய்கையின் போது அழிவு களை எதிர்கொண்ட விவசாயி களுக்கு காப்புறுதிக் கொடுப்ப னவுகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த மே,ஜூன் மாதங்களில் இந்தக் கொடுப்பனவு கிடைக் கும் என விவசாயிகள் காத்தி ருந்த போதிலும் ஏமாற்றமே மிஞ்சியது. பயிர்ச் செய்கைக் கூட்டங்களின் போது நெற் செய்கைக்கு காப்புறுதி மேற் கொள்ளுங்கள் என வலியுறுத் திக் கூறிய அதிகாரிகள், விவ சாயிகளுக்கான காப்புறுதிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதில் அக்கறை செலுத்த வில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (க-18)

# விசுவமடுப் பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகம்

முல்லைத்தீவு.ஓக.2
முல்லைத்தீவு மாவட்டத்தி லுள்ள விசுவமடுப் பகுதியில் கடுமையான வறட்சி நிலவும் பத்து இடங்களுக்கு புதுக்குடி யிருப்பு பிரதேச செயலகத்தின்



ஏற்பாட்டில் விசுவமடு விவ சாயிகளால் பலநோக்குக் கூட் டுறவுச் சங்கத்தினூடாக குடி தண்ணீர் விநியோகம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.
தற்போது இங்கு நிலவும் கடும் வறட்சி காரணமாக பல இடங் களிலும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
இதனால் பாதிக்கப்பட்ட பகுதி களுக்கு குடிதண்ணீர் விநி யோகம் இடம்பெற்று வருகின் றது.
இதேவேளை விசுவமடுப் பிரதேசத்திலுள்ள றெட்பானா, நாச்சிக்குடா உள்ளிட்ட பகுதி களில் தற்போது குடிதண்ணீ ருக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவி வரு கின்றது.
இந்த நிலையில் புதுக் குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட் டில் விசுவமடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் இந்தப் பகுதிகளுக்கு குடி தண் ணீர் விநியோகம் மேற் கொள்ளப்பட்டு வரு கின்றது.
இது தொடர்பாக விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவிக் கையில்;
வறட்சி நிலவும் இடங்களில் பத்து நீர்த்தாங்கிகள் வைத்து குடிதண்ணீர் விநியோகம் தினமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது - என்றார்.(க-55)

# நிர்வாகத் தெரிவு இடம்பெறாத நிலையில் அக்கராயன் மத்தி கிராமிய அமைப்புக்கள்

கிளிநொச்சி, ஓக. 2
கிளிநொச்சி அக்கராயன் மத்திய பகுதியில் அமைக்கப்பட்ட கிராம அபிவி ருத்திச் சங்கம், மாதர் சங்கம் என்பவை நீண்ட காலமாக புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறாத நிலையில் காணப்படு கின்றன.
அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் உள்ள அக்கராயன் கிழக்கு, அக்கராயன் மேற்கு, கொங்காதரன் குடியிருப்பு ஆகிய மூன்று பகுதிகளுக்குமான கிராம அபிவி ருத்திச் சங்கங்களின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற போதிலும் அக்கரா யன் மத்தியில் உள்ள கிராம அபிவி ருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகியனவற்றுக்கு புதிய நிர் வாகத் தெரிவுகள் இதுவரை இடம் பெறவில்லை.
ஒரு கிராமத்தின் அபிவிருத்தியில் கிராமிய அமைப்புக்கள் முக்கிய பங்கு வகிக்கும் நிலையில் இவற்றுக்கான புதிய நிர்வாகங்களைத் தெரிவு செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர். (க-18)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படும் மன்னார் சேமக்காலை

## மாற்று இடம் ஒன்றைத் தேடுகிறது நகரசபை

மன்னார்,ஓக.2
மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் அமைந் துள்ள மன்னார் பொது சேமக் காலை வளாகத்தினுள் மன் னார் நகர்ப்பகுதிகளில் சேகரிக் கப்படுகின்ற குப்பை கூளங்கள் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாக மன்னார் மக்களும்,சமூக ஆர்வலர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.
மன்னார் பொது சேமக்காலை யில் இந்து மக்களுக்கென ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.
அதற்கு அருகாமையில் கத் தோலிக்க மக்களுக்கும், அதற்கு அருகாமையில் கத் தோ லிக்க அருட்தந்தையர் கள், அருட்சகோதரிகள் ஆகியோரை அடக்கம் செய்வதற் குமென இடங்கள் ஒதுக்கப்பட்டு பராம ரிக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில் மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகு தியில் மன்னார் நகர சபை யினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருள்கள் இந்தச் சேமக்காலை வளாகத்தின் பின் பகுதியில் கொட்டப்பட்டு எரிக்கப்படுகின்றன.



*கொட்டப்பட்டுள்ள கழிவுகள்*

இதனால் சேமக்காலைப் பகு தியில் சுகாதாரச் சீர்கேடு கள் ஏற்பட்டுள்ளதோடு புனிதமா கப் பராமரிக்கப்பட வேண்டிய இடம் அசுத்தம் நிறைந்து காணப்படுவதாக மக்கள் விச னம் தெரிவித்துள்ளனர்.
இதே வேளை கழிவுகள் கொட்டப்படுவதால் கழுதை கள், நாய்,காகம் ஆகியவை இங்கு வருவதோடு சேமக்கா லையில் அடக்கம் செய்யப்பட் டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள கல்லறை களையும் நாசப்படுத்தி வரு கின்றன.
மேலும் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களைச் சுற்றி குப்பை கூளங்கள் காணப் படுவதாகவும் மக்களும்,சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள் ளனர்.
எனவே மன்னார் நகர சபை இதில் கூடிய கவனம் செலுத்தி சேகரிக்கப்படுகின்ற குப்பை கூளங்களை வேறு இடத்தில் கொட்ட நடவடிக்கை எடுக்கு மாறு மக்கள் மன்னார் நகர சபையிடம் கோரிக்கை விடுத் துள்ளனர்.
இது தொடர்பாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ்டன் தொடர்பு கொண்டு கேட்ட போது:-
தற்போதைய சூழலில் மன் னார் நகர சபையால் சேகரிக் கப்படுகின்ற குப்பைகளைக் கொட்டுவதற்கு எமக்கு இடப் பிரச்சினை ஏற்பட்டுள்ள கார ணத்தினால் அன்றாடம் சேக ரிக்கின்ற குப்பை கூளங்களை சேமக்காலைக்கு பின் பகுதி யிலே கொட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
ஆனால் சேமக்காலை ஒரு புனிதமான இடம். அந்த இடத்தை மாசுபடுத்துவது சரியான நடவடிக்கை அல்ல என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றோம்.
நாங்கள் மன்னார் பிரதேச செயலருடன் மேற்கொண்ட கலந்துரையாடலையடுத்து சேமக்காலைக்குப் பின் பகுதி யில் உள்ள கடற்கரையை அண்மித்த பகுதியில் மன் னார் நகர சபைக்கு 5 ஏக்கர் காணியை குப்பை கொட்டு வதற்கு வழங்குவதாக உறுதி யளித்துள்ளார்.
அந்தக்காணி வழங்கப்படும் பட்சத்தில் தற்போது சேமக் காலைக்கு பின்புறம் கழிவுகள் கொட்டப்பட்டு வரும் நடவடிக் கைகள் உடன் நிறுத்தப்பட்டு மன்னார் சேமக்காலையை சுத்தமான முறையில் பராம ரிக்க நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (க-56)



3 ஆம் கட்ட பாதீனிய ஒழிப்பில் ஈடுபட்ட ஒருவருக்கு வடமாகாண விவ சாய அமைச்சர் பொ.ஐங் கரநேசன் கொடுப்பனவை வழங்குகிறார்.

## ஒரு லட்சம் கிலோ பாதீனியம் மக்களிடமிருந்து பெற்று அழிப்பு

### கடந்த இரு மாதங்களில் மட்டும்

யாழ்ப்பாணம், ஓக.2

வடமாகாண விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சால் கடந்த இரண்டு மாத காலத்தினுள் ஒரு லட்சத்துப் 10 ஆயிரத்து 634 கிலோ பாதீனியம் பொதுமக்களிட மிருந்து கொள்வனவு செய்து அழிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகத் தற்போது பொது மக்களிடம் இருந்து பாதீனியத்தைக் கிலோவுக்கு 10 ரூபா வீதம் கொள்வனவு செய்து பின்னர் அதனை எரித்து அழிக்கும் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஜூன் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் இது வரையில் மூன்று கட்டங்களாக இடம் பெற்றுள்ளது.

இதில் மூன்றாம் கட்ட பாதீனிய ஒழிப்பில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், பா.கஜதீபன், அனந்தி எழிலன், யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிறிபால சுந்தரம் ஆகியோரும் பாதீனியம் ஒழிப்பில் ஈடுபட்ட பொது மக்களும் கலந்து கொண்டனர். (வ-14)


# நல்லூர் மந்திரி மனை அழிந்து போகும் நிலை

### அதனைப் பாதுகாப்பது தமிழர் கடமை

வலி.வடக்கு ஓக.2

நல்லூரில் அமைந்துள்ள சங்கிலிய மன்னனின் மந்திரி மனை எனக் கூறப்படும் கட்டடம் இன்றும் பாடசாலை மாணவர்களால் பார்வையிடப்பட்டு வருகின்றது. இந்தக் கட்டடம் இன்று உரிய முறையில் பராமரிக்கப்படாமல் அழிந்து போகும் நிலையில் காணப்படுகின்றது.

இதனைத் தனியார் சிலர் தமது உடைமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்று இதனைப் பராமரிப்பது உட்பட ஏனைய நடவடிக்கைகளுக்



நல்லூர் சங்கிலி மன்னனின் மந்திரி மனை

கான ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. அந்தப் பதவிகளைப் போட்டிபோட்டுபெற்றுக்கொண்டவர்கள் தமது பணியைச் செய்யாத நிலையில் தற்போது மாநகர சபையின் பதவிக் காலமும் முடிவ டையவுள்ளது.

வட மாகாண சபைக்கும் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து மந்திரிமனையைச் சீர் செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளது.

தமிழர்களின் அடையாளங்களையும் சின்னங்களையும் அரசு திட்டமிட்டு அழித்து வருவதாகக் கூறிக்கொண்டிருக்கும் நாம் தமிழர்களின் அடையாளங்களைப் பாதுகாப்பது அவசியம். வடமாகாண சபை இந்த விடயத்தில் கூடிய அக்கறை காட்ட வேண்டும் என்று சமூக நலன்விரும்பிகள் பலரும் தெரிவித்தனர். (ஒ-86)

## கசிப்பு கடத்தியவருக்கு அபராதமும் சிறையும்

தென்மராட்சி, ஓக.2

15 போத்தல் கசிப்பை சைக்கிளில் கடத்திய நபரை அங்கு மறைத்திருந்த பொலிஸார் மடக்கிப் பிடித்ததுடன் கசிப்பையும் கைப்பற்றினர். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மீசாலை வடக்கு வயற்கரை வீதி ஊடாக தினமும் கசிப்பு கடத்தப்படுவதாக பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டது. அதை அடுத்து அங்கு மறைந்திருந்த பொலிஸார் 15 போத்தல் கசிப்பை சைக்கிளில் கொண்டு சென்ற நபரைக் கைது செய்ததுடன் அவர் கொண்டு சென்ற கசிப்பையும் கைப்பற்றினர்.

சாவகச்சேரி பொலிஸார் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதமும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. (வ-9)

## வீதி மின் விளக்குகளுக்கான மின்சாரம் நிறுத்தப்படும் நிலை

### சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள்

தென்மராட்சி, ஓக. 2

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் விளக்குகளுக்கான மின்விநியோகம் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி விளக்குகளுக்கான மின் கட்டணம் 60 லட்சம் ரூபா நிலுவையாக உள்ளதால் அதனைச் செலுத்தாத பட்சத்தில் வீதி விளக்குக்கான மின் விநியோகம் துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபையால் தமது எல்லைப் பரப்பில் 548 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னைய காலத்தில் மின் விநியோகத் திட்டம் நகர சபையால் பராமரிக்கப்பட்டு வந்ததால் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை மின் பாவனையாளரிடமிருந்து மாதாந்தம்





அறவிட்டு மின்பாவனைக் கட்டணம் செலுத்தப்பட்டது. தற்போது அவ்வாறான வருமானம் இல்லாததால் நிலுவைத் தொகையை எவ்வாறு செலுத்துவது என்று சபை ஆராய்ந்து வருகிறது.

மின்சார சபை நகர சபைக்கு வழங்கும் மின்சாரத்துக்கான கட்டணத்தை முன்னர் நகர சபையிடம் பெற்று வந்தது. நகரசபை தமது பிரிவில் உள்ள மின்பாவனையாளர்களுக்கு வழங்கும் மின்சார பாவனைக் கட்டணத்தை அறவிட்டு அவ்வேளையில் பொருத்தப்பட்டிருந்த 548 வீதி விளக்குகளுக்கான மின் கட்டணத்தையும் மின்சார சபைக்கு செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

நகரசபையால் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட மின் விநியோகத் திட்டத்தை மின்சாரசபை பொறுப்பேற்ற பின்னர் சபைக்கு மின்விநியோகத்தால் கிடைத்த வருமானம் இல்லாமல் போயுள்ளது. இதனால் மின்சார சபைக் குச் செலுத்த வேண்டிய வீதிவிளக்குகளுக்கான கட்டணத்தை எந்த வகையில் செலுத்துவது என்பது குறித்து நகரசபை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

### மத்தியஸ்த சபை அமர்வுகள் அமிர்தாம்பிகையில்

தென்மராட்சி, ஓக.2

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்று வந்த சாவகச்சேரி மத்தியஸ்த சபையின் அமர்வுகள் ஓகஸ்ட் மாதத்தில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுமென்று சபைத் தவிசாளர் செ.சபாரத்தினம் அறிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் ஓகஸ்ட் 3,10, 17,24,31 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் அமர்வுகள் அமிர்தாம்பிகையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ஒ-9)

## அபராதம்

தென்மராட்சி, ஓக.2

ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய காரைநகர் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் புதன்கிழமை 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதையடுத்து 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

### போதையில் இடையூறு விளைவித்தவருக்கு தண்டனை





பொது இடத்தில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட நபரொருவருக்கு 80 மணித் தியாலம் சமூக சேவைகளில் ஈடுபடுமாறு சாவகச்சேரி நீதி மன்றில் கடந்த புதன்கிழமை உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவரை ஆறு மாத காலத்தினுள் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுத்துமாறு நீதிமன்ற சமுதாயச் சீர்திருத்தப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டார். (வ-9)



யாழ். அரச அதிபர் தண்ணீர் தாங்கியை மக்கள் பாவனைக்கு கையளிக்கிறார்.

## டிறிபேர்க் கல்லூரியில் தண்ணீர் தாங்கி கையளிப்பு

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி வளாகத்தில் 12 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் தாங்கி நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

வேள்ட் விஷன் நிறுவனம் மற்றும் தற்போது கனடாவில் வதியும் கல்லூரியின் பழைய மாணவர் இமானுவேல் குணராஜா ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு மாணவர்களுக்கான குடிதண்ணீர் வசதியும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், வேள்ட்விஷன் நிறுவன யாழ். மாவட்ட திட்ட முகாமையாளர் ஏ.ஜி.றொசைரோ ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-9)

## நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி முடிவுக்கு

### எம்பாக் நிறுவன அனுசரணையில் யாழ். மாநகர சபையால்

யாழ்ப்பாணம், ஓக. 2

எம்பாக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்ட நாய்களுக்கு கருத் தடை மற்றும் விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றும் பணியின் 80 வீதம் முடிவடைந் துள்ளதாக யாழ். மாநகர சபை தெரிவித்துள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் 4 ஆயிரத்து 300 கட்டாக்காலி நாய்கள் தற்போது உள்ளன. அவற்றில் 3 ஆயிரத்து 500 நாய்களுக்குக் கருத்தடை மற்றும் விலங்கு விசர் நோய் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

ஒரு பிரதேசத்தில் மட்டும் 91 ஆண் நாய்களுக்கும்,119 பெண் நாய்களுக்கும் என 210 நாய்களுக்கு நிரந்தர கருத் தடை செய்யப்பட்டுள்ளது.



அவற்றில் 198 கட்டாக் காலி நாய்களுக்கும்,12 வளர்ப்பு நாய்களுக்கும் கருத் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிகள் இன்னும் இரு வாரங்களில் முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. கட்டாக்காலி நாய்களால் ஏற்படக்கூடிய விலங்கு விசர் நோயைத் தடுக்கும் நோக்குடனும் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (வ-14)

### டெங்கு பரவும் சூழல்; தலா ரூ.3 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஓக.2

டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் விதத்தில் சுற்றாடலை வைத்திருந்த மீசாலைப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. விசாரணைகளின் போது எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இஸ்ரேலின் மனித உரிமை மீறல்கள்

கடந்த 24 நாள்களாக நீடித்துவரும் காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் 1,300க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். காஸாவில் போரை நிறுத்தி பேச்சுகள் மூலம் தீர்வுகாண மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டுவிட்டன. ஹமாஸின் ரொக்கட் தாக்குதல்களால் ஆத்திரமடைந்துள்ள இஸ்ரேலின் வெற்றியை உறுதிசெய்யக்கூடிய நடவடிக்கையை எடுக்க வேண்டிய நெருக்கடி பிரதமர் நெத்தன்யாகுவுக்கு உண்டு என்று கூறப்படுகிறது. அதேசமயம் இஸ்ரேலின் தாக்குதல் நீடித்தால் ஒரு கட்டத்தில் சர்வதேச தலையீடு ஏற்பட்டு தனக்கு நியாயம் கிடைக்கும் என்று ஹமாஸ் எதிர்பார்க்கிறது. இப்படியான நிலைப்பாடுகளால் அப்பாவி மக்களே பெருமளவில் உயிரிழக்கின்றனர். குடியிருப்புகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் இஸ்ரேலினால் குறிவைத்துத் தாக்கப்படுகின்றன. ஐ.நா. மையங்களும் தாக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட அளவு சிறிய நிலப்பரப்பில் 5 ஆயிரம் மக்கள் வாழும் மிகவும் அடர்த்தியான குடிசனப் பரம்பல் காஸாவில் உண்டு. அது தெரிந்தும் ரொக் கட்டுகள் மூலமும் பீரங்கிகள் மூலமும் கடந்த ஆறு வருட காலத்தில் இஸ்ரேலும் ஹமாஸூம் போர் புரிவது இது மூன்றாவது தடவையாகும். ஆகவே கண் மூடித்தனமான தாக்குதல் காஸா மக்களுக்கு பேர ழிவை ஏற்படுத்தும் என்பது இஸ்ரேலுக்குத் தெரியும். அந்த வகையில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் அப்பட்டமான சர்வதேச மனித உரிமை மீறல்கள் ஆகும். அது சர்வதேசவிசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்று.

இதுவரை காஸாவில் 315 சிறுவர்கள், 166பெண்கள் மற்றும் 58 முதியவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர 2,307 சிறுவர்கள், 1,539 பெண்கள் மற்றும் 287 முதியவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தப் பேரழிவுகள் நிறுத்தப்படவேண்டும்.

ஹமாஸினால் எல்லையில் தோண்டப்பட்டுவரும் சுரங்கப்பாதைகளை அழிக்கும்வரை இஸ்ரேலின் தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார். ஹமாஸ் இதுவரை நூற்றுக்கணக்கான ரொக்கட்டுகளை இஸ்ரேலுக்குள் ஏவிவிட் டுள்ளது. ரொக்கட்டுகள் காஸாவிலேயே உற்பத்தி செய்யப்படுவதால் தாக்குதல்கள் தொடரத்தான் போகின்றன. முழு அளவில் படையெடுப்பு நடத்தினாலொழிய ரொக்கட் உற்பத்தித் தொழிற்சாலைகளை இஸ்ரேலினால் அழிக்க முடியாது. முழு அளவிலான படையெடுப்பு நடத்தப்படும்போது இஸ்ரேல் இராணுவத்துக்குப் பேரழிவு ஏற்படலாம். உலக நாடுகளின் அனுதாபத்தையும் இஸ்ரேல் இழந்து போகலாம். பாரம்பரியமாக இஸ்ரேலை ஆதரித்து வரும் அமெரிக்காவில் இஸ்ரேல் மீதான அனுதாபம் குறைந்து வருகிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளான எல்சல்வடோர், பிரேஸில், பெரு, சிலி, ஈக்வடோர் ஆகியவை தமது தூதர்களை இஸ்ரேலிலிருந்து வாபஸ் பெற்றுள்ளன. பொலிவியா, இஸ்ரேலுடனான விஸா விலக்களிக்கும் ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டது.

இந்தப் போர் சர்வதேச அரங்கில் இஸ்ரேலுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. அப்படியிருந்தும் நெத்தன்யாகுவின் நடவடிக்கைகள் கடினமடைந்து வருகின்றன.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலுக்கு இம்முறையாவது தீர்வுகாணப்படாவிட்டால் மீண்டும் மீண்டும் யுத்தங்கள் ஏற்படவே வழி பிறக்கும். காஸா மீதான இஸ்ரேலின் ஏழு வருடகால முற்றுகை நீக்கப் படவேண்டும். இதன்மூலம் பேச்சுக்கான சூழ்நிலை உருவாக முடியும். முற்றுகை நீக்கப்பட்டால் ஹமாஸூம் தனது ரொக்கட் தாக்குதல்களை நிறுத்தும்.

காஸாவில் இதுவரை இஸ்ரேலின் தாக்குதல்கள் காரணமாக 4 லட்சத்து 25 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்று ஐ.நா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

காஸாவில் அப்பாவிப் பலஸ்தீன மக்கள் அழிக்கப்படுவதை சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாதிருப்பது கவலை தரும் ஒன்றாகும்.

சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் தலையிட்டு போர் நிறுத்தத்துக்கும் தீர்வுக்கும் முயற்சி செய்வது மிகவும் அவசியமாகும்.

# கல்வி சார் நியமனங்களில் மோசமான நெறிப்பிறழ்வுகள்

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் நியமனங்களில் ஊழலும், துஷ்பிரயோகங்களும் தலைவிரித்தாடுவதாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் துறைரீதியாக மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**விலங்கியல்**

14 ஒக்ரோபர் 2013 இல் நடைபெற்ற நேர்முகத்தேர்வு ஒன்றில் சராசரித் தரப் புள்ளியாக (GPA) 4 இற்கு 3.72 பெற்று தனது அணியில் முதலாவதாக வந்த முதலாம் வகுப்புச் சித்தி பெற்ற பட்டதாரி ஒருவர் புறந்தள்ளப்பட்டுள்ளார். தேர்வுச் சபைக்கு வழங்கப்பட்ட அனுபந்தத்தில் இவர் பெற்ற விசேட பேறான விலங்கியலில் மிகச் சிறந்த ஆற்றுகைக்கான சேர் சங்கரப்பிள்ளை பரராஜசிங்கம் பரிசில் காரணம் ஏதுமில்லாமல் சேர்க்கப்படாமல் விடப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய பதினொருவரில் மிகவும் தரம் குறைந்தவர் என்று சொல்லக்கூடிய சராசரித் தரப் புள்ளியாக 3.44 பெற்று இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவருக்கே நியமனம் வழங்கப்பட்டது.

நேர்முகத் தேர்வின்போது முதலாம் வகுப்பு வேட்பாளரின் அளிக்கையை இரண்டு நிமிடத்தில் நிறுத்திய துணைவேந்தர் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு வேண்டிய நேரம் வழங்கினார்.

**கணினி விஞ்ஞானம்**

சராசரித் தரப் புள்ளி 3.80 வரை கொண்டிருந்த நான்கு முதலாம் வகுப்பு விண்ணப்பதாரிகள் 8 மே 2012 இல் தகுதிகாண் விரிவுரையாளர் பதவிக்கான நேர்முகத்துக்கு தோற்றினர். எனினும் இவர்களின் அளிக்கைத்திறன், பாட அறிவு என்பவற்றுடன் பொதுவான ஆற்றுகையும் திருப்தியற்றவை எனக் கூறி தெரிவுச் சபை எவரையும் தெரிவு செய்யவில்லை. அடுத்த தடவைக்கு விண்ணப்பிக்கவுமில்லை.

அடுத்து 12 நவம்பர் 2013 இல் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் குறிப்பிடத்தக்கதான மேம்பட்ட கல்வித் தகைமைகள் அடையாமல் கணினிப் பிரிவில் (கணினி விஞ்ஞானத் துறையில் அல்ல) உதவி வலையமைப்பு முகாமையாளர் தரம் 11 இல் ஒன்பது வருடங்கள் கடமையாற்றிய 2001 இல் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு பட்டம் பெற்ற ஒருவரே தெரிந்தெடுக்கப்பட்டார்.

எவ்வாறு புதிய முதலாம் வகுப்புப் பட்டதாரிகளுக்கு பாட அறிவு இல்லாமலுள்ளது என்பது விடை தெரியாத ஒரு கேள்வியாகும்.

மிகத் திறமை வாய்ந்த முதலாம் வகுப்புப் பட்டதாரிகளைத் துரத்தி, ஏற்கப்பட்டிருக்க வேண்டிய சிறந்த விண்ணப்பதாரிகளை அகற்றிய பின்னர் தந்திரமாக இவர் உள்வாங்கப்பட்டுள்ளார் என்பதையே சந்தர்ப்ப சூழ்நிலைகள் சுட்டிக் காட்டுகின்றன.

**பொறியியல் பீடம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு 1982 இல் அனுமதிக்கப்பட்டு மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் 2008 இல் கலாநிதிப் பட்டம் பெற்ற ஒரு பொறியியலாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 இற்கு வேண்டப்படும் பட்டப்பின் தகைமைக்கு பின்னரான 6 வருட அனுபவம் இல்லாத நிலையில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 இற்கு நியமிக்கப்பட்டார்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு 1981 இல் அனுமதி பெற்று 1983 வன்செயலின் பின் சென்னைப் பல்கலைக்கழ கத்தில் பொறியியல் கல்வியைப் பூர்த்தி செய்து கரையோர பொறியியல் துறை யில் பெயர் பெற்ற கனடாவின் குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் 1995 இல் கரையோரப்பொறியியல் துறையில் கலாநிதிப் பட்டம்பெற்ற இன்னொரு பொறியியலாளர் இரண்டு தடவைகள் விண்ணப்பித்து இரண்டு தடவையும் நிராகரிக்கப்பட்டார். இந்தப் பதவிக்கு வேண்டிய கலாநிதிப் பட்டத்தின் பின் கொண்டிருக்க வேண்டிய அனுபவங்களையும் மேலும் தேவைப்படும் எல்லாத் தகுதிகளையும் இவர் போதிய அளவு கொண்டுள்ளார். இரண்டாவது தடவையின் போது தெரிவுச் சபை இவரது பாடஅறிவு, கற்பித்தல் திறன், ஆய்வு ஆற்றல் என்பனவற்றுடன் இவரது பொதுவான ஆற்றுகையும் திருப்தியற்றவை எனக் கூறியது. ஆனால் நிராகரிக்கப்பட்ட இந்தப் பொறியியலாளர் புலமை வாய்ந்த நடுவர்களால் தரம் பேணப்படும் விஞ்ஞான சஞ்சிகைகளில் மூன்று கட்டுரைகள் எழுதியுள்ளார். இதனை சமன் செய்யத்தக்க வகையில் தெரிவு செய்யப்பட்ட பொறியியலாளாரிடம் இருக்கும் திறன் குறைவானதே.

**சமூகவியல்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முதலாம் வகுப்புப் பட்டம் பெற்று, உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் முதல் 20 இடங்களுக்குள் சேர்க்கப்பட்டுள்ள அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் (authropology) துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற ஒருவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையில் கல்விசார் பதவிக்கு விண்ணப்பித்தார். நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியானவர்களைக் காட்டும் சுருக்கமான அட்டவணையில் இவரது பெயர் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் சமூகவியலில் கலாநிதிப்பட்டமே இந்தப் பதவிக்குத் தேவைப்படுகிறது என சிரேஷ்ட உதவிப் பதிவாளரால் குறிப்பு எழுதப்பட்டது. அத்துடன் இவர் நேர் முகத்தேர்வுக்கு அழைக்கப்படவில்லை.

ஆனால் பாடத்துடன் தொடர்புள்ள கல்விப் பிரிவொன்றின் வேண்டப்படும் தகைமையைக் கொண்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டும். தெரிவுச் சபையே நியமனம் தொடர்பான முடிவை எடுக்க வேண்டும் என்பதே விதிமுறையாகும். உண்மையில் சமூகவியலையும் மானிடவியலையும் பிரித்துக் காட்டுவதென்பது மிகவும் கடினமான காரியமாகும்.

**ஆங்கிலமொழிக் கற்பித்தல்**

ஆங்கில இலக்கியத் துறையில் ஒன்றரை வருடங்கள் தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றிய பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் வகுப்பு விண்ணப்பதாரி ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவில் ஒரு பதவிக்கு ஒக்ரோபர் 2010 இல் விண்ணப்பித்தார். அவர் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்று ஓகஸ்ட் 2011 இற்கு இரண்டு மாதங்களுக்குப் பின்பு (அதாவது விண்ணப்பித்து ஒரு வருடத்தின் பின்) நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இணையத்தின் மூலம் தனக்கு நேர்முகத் தேர்வு நடத்தும்படி அவர் விடுத்த வேண்டுகோள் ஏற்கப்படவில்லை.

அடுத்த தடவை அவர் விண்ணப்பித்த போது நேர்முகத்தேர்வு 17 ஏப்ரல் 2012 இற்கு நிர்ணயிக்கப்பட்டது. அது அவருடைய பல்கலைக்கழகத்தில் கல்விச் செயற்பாட்டுக் காலமாக இருந்ததைக் காரணம் காட்டி நேர்முகத் தேர்வை ஒரு மாதம் பிற்போடும்படி அவரால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. அதே 17 ஏப்ரல் அன்று சட்டத்துறைக்கும் நேர்முகத்தேர்வு நடைபெற்றது. ஆங்கில மொழி, சட்டம் ஆகிய இரண்டு பாடங்களுக்கும் முதலாம் வகை (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் கீழ் பிரிவுச் சித்தி) வேட்பாளர்கள் வருகை தரவில்லை. இதனால் இரண்டாம் வகை(இரண்டாம் வகுப்பில் கீழ்ப்பிரிவு சித்தி) வேட்பாளர்கள் மே 15 அன்று நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். ஆங்கில மொழிக்கு ஓர் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு பட்டதாரி தெரிவு செய்யப்பட்டார். சட்டத்துறைக்கு விண்ணப்பித்த இரு இரண்டாம் வகை விண்ணப்பதாரிகளில் ஒருவர் அன்று சமுகமாகி இருந்தார். ஆனால் நேர்முகத்தேர்வு பிற்போடப்பட்டுள்ளதாக அவருக்கு அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டத்துறைக்கான நேர்முகத் தேர்வு மே 24 அன்று நடைபெற்றது. அதில் மே 15 அன்று சமுகமளிக்காமல் மே 24 அன்று சமுகமளித்த இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு பட்டதாரி தெரிவு செய்யப்பட்டார். இந்த நாளில் நேர்முகத்தேர்வை [illegible] போடுமாறு விண்ணப்பித்த ஆங்கிலத்தில் முதலாம் வகுப்புப் பெற்ற வேட்பாளர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்து விட்டார். ஆனால் நேர்முகத்தேர்வை பிற்போடுமாறு கோரிய அவரது விண்ணப்பம் ஆரம்பித்திலேயே நிராகரிக்கப்பட்டுவிட்டது; சட்டத்துறையில் இதற்கு நேர்மாறான நிகழ்வு நடந்துள்ளது.

ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவில் பதவிக்கான விண்ணப்பம் மீண்டும் ஏப்ரல் 2013 இல் கோரப்பட்டு நேர்முகத்தேர்வு ஒக்ரோபர் 2013 இல் நடைபெற்றது. அமெரிக்காவில் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொள்ளும், மேற்கூறிய ஆங்கில முதலாம் வகுப்புப் பட்டதாரி தனது நேர்முகத்தேர்வை இணையம் மூலம் நடத்தும்படி விடுத்த வேண்டுகோள் ஏற்கப்படவில்லை. தெரிவுச் சபைக்கு வழங்கப்பட்ட அனுபந்தத்தில் அவர் தனது விண்ணப்பத்தில் பட்[illegible]லிட்டுக் காட்டிய பல்கலைக்கழக பரிசில்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதே நேர்முகத்தேர்வுக்குத் தோற்றிய யாழ். பல்கலைக்கழக முதலாம் வகுப்புப் பட்டதாரியும் நிராகரிக்கப்பட்டார். இரண்டாம் வகுப்பு மேற் பிரிவில் சித்தியடைந்த மூன்று விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

**நிதி முகாமைத்துவம்**

சராசரித் தரப் புள்ளி (GPA) 3.63 உடன் பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தன ஆணைக் குழுவின் தங்கப்பதக்கத்தையும் வென்றவரான ஒரு முதலாம் வகுப்புப் பட்டதாரி நிராகரிக்கப்பட்டு 3.49 GPA ஐக் கொண்ட ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். தெரிவுச் சபைக்கு வழங்கப்பட்ட அனுபந்தத்தில் முதலாவது விண்ணப்பதாரியின் தங்கப்பதக்கம் பற்றிய தகவல்கள் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி ஏப்ரல் 2012 இலிருந்து தற்காலிக விரிவுரை யாளராகக் கடமையாற்றியதாக தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இவர் மே 2013 இற்கு முன்னர் அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கவில்லை.

நிராகரிக்கப்பட்ட முன்னணி விண்ணப்பதாரி பேரவைக்கு அனுப்பியிருந்த முறைப்பாட்டில் தெரிவுக்குழுவின் தலைவர் (துணைவேந்தர்) நேர்முகத் தேர்வின் பெரும்பாலான நேரத்தில் அங்கு சமுகமளித்து இருக்கவில்லை என்றும் ஆனால் தெரிவுப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த விண்ணப்பதாரி உயர் நீதிமன்றத்தில் அடிப் படை உரிமை மீறல் மனு ஒன்றையும் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாறு வர்த்தகம் மற்றும் விளையாட்டு விஞ்ஞான பிரிவுகளில் நியமனங்களில் துஷ்பிரயோகம் நடந்துள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. தொடரும் இந்த நியமன தில்லுமுல்லுகளாலும், அரசியல் தலையீடுகளாலும் பாதிக்கப்பட்டவர்கள் சரியான நீதியை எதிர் பார்க்கின்றனர்.

# பத்திரிகைப் பணியில் தனிநாயகம் அடிகளார்

தமிழ்ப் பெரியார் தனிநாயகம் அடிகளாரின் 101 ஆவது பிறந்தநாளாகிய இன்று, யாழ்ப்பாண மறைமாவட்டம் மற்றும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் இணைந்து, யாழ். பிரதான வீதியில் அமைத்த அவரது சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

அருள்திரு. ஞூபன் மரியாம்பிள்ளை
யாழ். பல்கலைக்கழகம்



தமது வாழ்வைப் பெரும் இலட்சிய எண்ணங்களோடு நோக்கிய பெரியோர்களை இன்றைய இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. அதில் நாம் அதிகம் கற்றுணர வேண்டியவர்கள், நம் மோடு வாழ்ந்து வழிகாட்டியவர் தனிநாயகம் அடிகளார் ஆவார். இவர் தமிழ் துறைக்கும், பத்திரிகைத் துறைக்கும், மெய்யியல், இறையியல் துறைக்கும் ஆற்றிய பணி அளப்பரியது.

**தனிநாயகம் அடிகளுடைய வாழ்வு**

இலங்கையின் வடபகுதியான தீவுப்பகுதியில் கரம்பொன் என்ற ஊரில் 1913இல் பிறந்த தனிநாயகம் அடிகளார், 1923 - 1930 ஆண்டுகாலப்பகுதியில் சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் என்ற பெயருடன் புனித பத்திரிசியார் கல்லூரியில் கேம்பிறிச் தேர்வுவரை கற்றார். குருவாகும் எண்ணத்துடன் 1931 - 1934 ஆண்டுகாலப் பகுதியில் பொரளை புனித பேர்ணாட் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கற்றார் - பின் குருத்துவக்கல்லூரியிலிருந்து விலகித் தாம் கல்வி கற்ற புனித பத்திரிசிரியார் கல்லூரியில் ஆசிரியப் பணி புரிந்தார். தொடர்ந்தும் இறையியல் தொடர்பான கற்கைகளில் தேர்ச்சி பெற்ற இவர், மெய்யியல் துறையில் ஈடுபட்டார். அதற்காகப் பத்திரிகையியலில் அதிகம் நாட்டம் கொண்டிருந்தார்.

**தனிநாயகம் அடிகளார் ஆற்றிய பத்திரிகைப்பணி**

1923 - 1930 காலப்பகுதியில் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விகற்று 15ஆவது வயதிலேயே பொட்டில் சன் சையின் - என்ற ஆங்கில இதழின் ஆசிரியராக இவர் தமது பத்திரிகைப் பணியை ஆரம்பித்தார். தனிநாயகம் அடிகளாரின் இறுதிக்கட்டுரை 5வது உலகத்தமிழ் மகாநாட்டு மலரில் 1981 ஆம் ஆண்டு 'சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் பண்பு' என்னும் தலைப்பில் இவரது இறப்புக்குப் பின்னர் வெளியாகியுள்ளது.

பொட்டில் சன் சையின் - Bottled Sun shine தமிழ் கல்சர், ஜணல் ஒப் தமிழ் ஸ்ரடீஸ் - Journal Of Tamil Studies முதலிய ஆங்கில இதழ்களில் தனிநாயகம் அடிகள் ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ளார். இவற்றோடு கூட சிறுமலர் - தமிழ் ஒளி ஆகிய தமிழ் வெளியீடுகளிலும் இவர் ஆசிரியராகப் பணி புரிந் துள்ளார். இவற்றைவிட ஞானதூதன், கத்தோலிக்கசேவை, சத்தியவேத பாதுகாவலன், தமிழ் ஓசை, இளங்கதிர், சமயசஞ்சரி, கலைப்பூங்கா, தமிழ்நேசன், ஈழநாடு, வீரகேசரி போன்ற இதழ்களிலும் எழுதியுள்ளார். மேலும்

இவருடைய படைப்புக்கள் மற்றும் நேர்காணல்கள் பொது இதழ்களிலும் சமய இதழ்களிலும் ஆய்வு இதழ்களிலும் வெளிநாட்டு இதழ்கள் - ஆண்டு மலர்கள் - நினைவு மலர்கள் - சிறப்பு மலர்கள் மற்றும் மகாநாட்டு மலர்களிலும் வெளிவந்துள்ளன.

தனிநாயகம் அடிகளார் ஏறக்குறைய 15 தமிழ் இதழ்களிலும் 25 ஆங்கில இதழ்களிலும் ஒரு மலேசிய இதழிலும் எழுதியுள்ளார். பல கருத்தரங்க ஆய்வு மலர்களின் பதிப்பாசிரியராக இருந்துள்ளார். சிங்கள தமிழ் பண்பாட்டைப் பற்றிய ஆய்வு இதழ் ஒன்றைத் தொடங்கவேண்டுமெனத் திட்டமிட்டிருந்துள்ளார் என அமுதனடிகள் தனிநாயக அடிகள் என்ற நூலில் தெரிவிக்கிறார்.

இவருடைய எழுத்துப்பணி முழுவதும் கல்வி - சமயம் - ஆய்வு - தமிழ் என்ற பரப்புக்களைக் கொண்ட இதழ்களையே சுற்றி வட்டமிட்டுள்ளது என்பதோடு மற்ற இதழ்களில் வெளிவந்த இவருடைய ஆக்கங்களும் கல்வி - சமயம் - ஆய்வு - தமிழ் என்பவற்றைப்பற்றியே அமைந்திருந்தன.

தூத்துக்குடி மறைமாட்டத்தில் வடக்கன் குளம் புனித திரேசாள் பள்ளியில் ஆசிரியப்பணி புரிந்த 1940 - 1945 ஆண்டு காலப் பகுதியில் புனித திரேசம்மாளை பற்றிய சிறு மலர் என்ற இதழை வெளியிட்டு அதன் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். இங்கு இவரிடம் கல்வி பயின்ற எம்.ஜி.வென்சஸ்லோஸ் என்பவர் பிற்காலத்தில் வீரகேசரி என்ற இதழை நடத்தியவர் என்பது அரிய தகவலாகும். தனிநாயகம் அடிகளார் தமது இதழியற் பணி வழி பத்திரிகையாளரையும் உருவாக்கியுள்ளார் என்பது இங்கு தெரியவருகிறது.

1941ஆம் ஆண்டு மதுரை மறைமாவட்டத்தில் தொடங்கப்பட்ட மாதமிருமுறை சமய இதழான கத்தோலிக்க சேவை என்ற இதழில் தனிநாயகம் அடிகளார் எழுத்துப்பணி புரிந்துள்ளார். 1928ஆம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டத்தில் தொடங்கப்பட்ட மாதாந்த சமய இதழான ஞானதூதன் என்ற இதழில் தனிநாயகம் அடிகளார் தாம் தூத்துக்குடியில் வாழ்ந்து காலமான 1942 - 1952 காலப்பகுதியில் எழுத்துப்பணி புரிந்ததாக இலங்கை மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் வே. அந்தனி யோண் அழகரசன் அடிகளார் தனிநாயகம் அடிகளார் வாழ்வும் பணியும் என்னும் நூலில் தெரிவிக்கிறார்.

மலேசியப் பல்கலைக்கழகத்தில் 1961 - 1969 ஆண்டு காலப் பகுதியில் இந்தியமொழிகள் துறையின் தலைவராகத் தனிநாயகம் அடிகளார் பணியாற்றிபோது தமிழ்ஒளி என்ற இதழை வெளியிட்டுள்ளார். மலேசியப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழித்துறையின் தமிழ்ப்பேரவை சார்பாக 1960இல் தமிழ்ஒளி வெளியிடப்பட்டது.

இந்தத் துறைத் தலைவராக முத்து இராசாக் கண்ணனார் 1960இல் இருந்தபோது இந்த இதழ் ஆரம்பிக்கப்பட்டது. தனிநாயகம் அடிகளார் மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகள் துறையின் தலைவராகப் பணியேற்றபோது இரண்டாவது இதழைத் தமது வாழ்த்துரையுடன் வெளியிட்டுள்ளார். தொடர்ந்தும் வெள்வந்த இதழ்களில் தமிழ்ப்பேரவை மாணவர்களின் நிகழ்ச்சிகளைப் பாராட்டி வாழ்த்துரைகள் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாண மறை மாவட்டத்திலிருந்து நூற்றாண்டுகளைத் தாண்டி அன்று சத்தியவேத பாதுகாவலன் என்றும் இன்று பாதுகாவலன் என்றும் வெளிவந்து கொண்டிருக்கும் சமயப் பத்திரிகையில் 1949 - 1950 - 1951- 1954 ஆண்டு காலப் பகுதியில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இவை சமயம் பற்றியவையாக அல்லாமல் தமிழ் சார்ந்தவையாகவே வெளிவந்துள்ளன. இவற்றில் பல கட்டுரைகள் தொடர்கட்டுரைகளாகவே இருக்கின்றன.

சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு - பிறமொழிக் கலப்பால் ஒரு மொழி சிதையவே செய்யும் - தமிழில் உரையாடுகையில் தனித்தமிழ் மொழியைக் கையாள வேண்டும் - போன்ற தமிழ்க்கட்டுரைகளையும் In Xaviers Foot steps போன்ற அவரின் பயணக்கட்டுரைகளையும் இங்கு காணலாம். இவற்றைவிட தமிழ்த்தூது - தமிழின் வளாச்சி - கீழ்த்திசை நாடுகளில் அச்சுக்கண்ட முதல் நூல்கள் தமிழ் நூல்களே போன்ற கட்டுரைகளையும் காணலாம். பன்னிரண்டாம் பத்திநாதர் - அர்ச் அகுஸ்தீன் புகழ் உரைநூல் போன்ற சமயம் சார் கட்டுரைகளும் இங்குள்ளன. இவை தனிநாயகம் அடிகள் எழுதிய முழுக்கட்டுரைகளின் தொகுப்பல்ல என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். இவை தனி நாயகம் அடிகளாரின் பத்திரிகைப்பணி தமிழை வளர்க்கவே ஆற்றப்பட்டது என்பதை உறுதி செய்கின்றன.

தமிழ் ஓசை - இளங்கதிர் - சமூக மஞ்சரி போன்ற இதழ்கள் பற்றிய முழுமையான விவரங்களைப் பெற முடியவில்லை - ஆனால் இந்த இதழ்களில் இவர் முறையே எழுதிய மலரும் மாலையும் (1957) ஒற்றை அமெரிக்கா (1959) முதிந்தோர் கல்வி விரிவு (1960) என்பன முக்கியமானவை என டாக்டர் பா.இறையரசன் தெரிவிக்கிறார். இலங்கை இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பட்ட அரையாண்டு இதழான கலைப் பூங்கா இதழில் திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும் என்ற கட்டுரையைத் தனிநாயகம் அடிகள் எழுதியுள்ளார். இந்த இதழின் தலைப்பு தமிழ் கிரேக்க அறக்கொடைகள் ஒப்பாய்வு என இருந்ததாக டாக்டர் வே.அந்தனி யோன் அழகரசன் அடிகளார் தெலிவிக்கிறார்.

தமிழ் நேசன் என்ற மலேசிய நாளிதழ் இங்கு சிறப்பு முக்கியத்துவம் பெறும் பத்திரிகையாகும். 1966 ஆம் ஆண்டு முதல் உலகத்தமிழ் மகாநாட்டுக்கு இந்த இதழ் பெருந்துணை புரிந்துள்ளது என்பதோடு பெருந்தொகைப் பணத்தையும் மகாநாட்டு நிதியாக வழங்கியுள்ளது. தனி நாயகம் அடிகளின் படைப்புக்கள் அவ்வப்போது இந்த இதழில் வெளிவந்துள்ளன. மலேசியா தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் - மலேசியாவில் தமிழ் எழுத்தாளரும் அவர்களின் பணியும் - என்ற தலைப்பில் தனிநாயகம் அடிகள் ஆற்றிய உரை 1963ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. உலகத்தமிழ் மகாநாடு பற்றி தமிழ்த் துறைகளின் உலகக்கருத்தவை என்னும் தலைப்பில் தனிநாயகம் அடிகளாரின் கட்டுரை 1966 கருத்தரங்குச் சிறப்பு மலரில் வெளிவந்துள்ளது.

1959ஆம் ஆண்டுமுதல் யாழ்ப்பாணத்தில் தனித்தமிழ்ப் பத்திரிகையாக வெளிவந்து 90களில் இல்லாமற்போன ஈழநாடு பத்திரிகையில் 1971இல் தமிழ்மொழியின் வேர் இயல் என்ற தலைப்பில் தனிநாயகம் அடிகளின் கட்டுரை வெளிவந்துள்ளது. கொழும்பிலிருந்து இன்றும் வெளிவந்துகொண்டிருக்கும் வீரகேசரிப் பத்திரிகையில் வீரமாமுனிவர் தமிழராய்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஐரோப்பியரில் தலைமகன் என்ற கட்டுரை தனிநாயகம் அடிகளின் இறப்பின் பின்னர் 1980 இல் வெளிவந்துள்ளது. 1958இல் கல்கி தீபாவளி மலரில் தமிழ்ச் செல்வங்கள் என்னும் கட்டுரை வெளியாகியுள்ளது.

**தனிநாயகம் அடிகளார் ஆற்றிய ஆங்கிலப் பத்திரிகைப் பணி**

தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச்செய்ய வேண்டும் என்பதே தனிநாயகம் அடிகளாரின் நோக்கமாக இருந்தமையால், அவர் தமிழ் இதழ்களைவிட ஆங்கில இதழ்களில் அதிக கவனம் செலுத்தினார் என்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. தனிநாயகம் அடிகளார் ஏறக்குறைய 15 தமிழ் இதழ்களில் பத்திரிகைப்பணி ஆற்றியுள்ளவேளை 25 ஆங்கில இதழ்களில் பத்திரிகைப்பணி ஆற்றியுள்ளார் என்று இந்தக் கட்டுரையில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட குறிப்பை இங்கு நினைவூட்டுவது பொருத்தமாகும்.

புனித பத்திரிசியார் கல்லூரியில் 1923 - 1930 ஆண்டுகாலப் பகுதியில் கல்வி கற்றபோது பொட்டில் சன் சையின் என்ற ஆங்கில இதழின் ஆசிரியராகப் பணியாற்றி இந்த இதழில் 17 கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். 1928ஆம் ஆண்டு Favourite Hero in History Nepoleon என்னும் தம் முதல் ஆக்கத்தை பொட்டில் சன் சையின் என்ற இதழில் இவர் எழுதியுள்ளார். The Parting of the Ways என்பது இந்தச் சஞ்சிகையில் இவர் எழுதிய இறுதி ஆக்கமாகும். இவர் கல்லூரியை விட்டு விலகிய பின்னர் இவரின் முக்கிய ஆக்கம் ஒன்று பொட்டில் சன் சையின் என்ற இதழில் 1945 ஆம் ஆண்டு வெளியாகியுள்ளது. புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் குருத்துவவெள்ளி 'விழாவின் போது தனிநாயகம் அடிகளார் ஆற்றிய மறையுரை The Power and the Glory Sermon preached on the Occasion of the Silver Jubilee of the Late Rev.Fr.T.M.F.Long என்னும் தலைப்பில் வெளியாகியுள்ளது.

1933 - 1935 காலப்பகுதியில் தனிநாயகம் அடிகளார் பல கட்டுரைகளை இந்த இதழில் எழுதியுள்ளார். தூத்துக்குடி மறை மாவட்டத்தில் வடக்கன் குளம் புனித திரேசாள் பள்ளியில் ஆசிரியப்பணி புரிந்த 1940 - 1945 ஆண்டுகாலப்பகுதியில் இலங்கை சென்று பத்திரிசியார் கல்லூரி அதிபர் லோங் அடிகளாரின் நினைவு நாளில் ஆற்றிய சொற்பொழிவு 1945 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

The Anthonian என்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மலரில் 1942 - 1943 ஆண்டு காலப் பகுதியில் தனிநாயகம் அடிகளின் ஆக்கம் ஒன்று வெளிவந்துள்ளது.

1920 - 1922 காலப்பகுதியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மூன்றாம் வகுப்புவரை படித்து தமிழ் அறிவின் அடிப்படைகளையும் தமிழ் ஆய்வின் முதற்படிகளையும் கற்ற நினைவுகளை நினைந்து ஊர்காவற்றுறைக் கவிதை - Poetry of Kayts என்ற கவிதையை எழுதியுள்ளார்.

தனிநாயகம் அடிகளாார் 1952 - 1966 ஆண்டு காலப்பகுதியில் தூத்துக்குடியில் இருந்த போது ஆங்கிலக் காலாண்டு இதழான தமிழ் கல்சர் என்ற இதழை முதன்மை ஆசிரியராக இருந்து நடத்தியுள்ளார். 1966இல் இந்த இதழின் முதன்மை ஆசிரியராக தனிநாயகம் அடிகளாார் இருக்க இலோயலாக் கல்லூரியைச் சோந்த இன்னாசி இருதய அடிகளார் மேலாண்மை ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ளனர்.

1966ஆம் ஆண்டின் பின்னர் தமிழ் கல்சர் இதழ் வெளிவரவில்லை. தனிநாயகம் அடிகளார் 1952இல் கொழும்பில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தையும் - 1954இல் சென்னையில் தமிழ்க்கலை மன்றத்தையும் - 1961இல் சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தையும் நிறுவி இவற்றின் வெளியீடாக தமிழ் கல்சர் என்ற இதழை வெளியிடச் செய்தார் என்று பேராசிரியர் வ.அ.சுப்பிரமணியம் அமுதன் அடிகளார் எழுதிய தனிநாயக அடிகள் என்ற நூலில் தெரிவிக்கிறார். தனிநாயகம் அடிகளாரின் பொறுப்பில் தமிழ் இலக்கிய கழக இதழாக 1952 முதல் வெளிவந்த தமிழ் கல்சர் என்ற இதழ் 1955 முதல் தமிழ்க்கலைமன்ற இதழாக வெளிவந்துள்ளது. 1960-1962-1965-ஆம் ஆண்டுகளில் தமிழ் கல்சர் இதழ் வெளிவரவில்லை.

தமிழ் கல்சர் இதழ் வெளியான 12 ஆண்டுகளில் வெளிவந்த 44 இதழ்களில் 276 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவற்றில் 09 மட்டுமே தமிழ்க் கட்டுரைகளாகும். இவை வரலாறு - கலை - பண்பாடு - சமயம் - மொழியியல் - இலக்கியம் எனப்பல தலைப்புக்களில் வெளி வந்துள்ளன. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் கட்டுரை ஒன்று அவரின் இறப்பின் பின்னர் வெளிவந்துள்ளது.

இந்தப் பணிகளுடன் தனிநாயகம் அடிகளார் நண்பர்களோடு இணைந்தும் சில பத்திரிகைப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எதிர்பார்த்த பணம் வந்து சேரும். திறமை வெளிப்படும். பல வகையிலும் முன்னேற்றம் உண்டாகும். சொத்து தொடர்பான விடயங்களில் இழுபறிநிலை காணப்படும். இடமாற்றம் உண்டாகும். செலவும் அதிகரிக்கும்

**இடபம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டி இருக்கும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் தாமதப்படலாம். எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடும் முன்பு தயக்கம் ஏற்பட்டு பின்னர் தெளிவு உண்டாகும். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்**: குடும்பத்தினிடையே பேசித் தெளிவுபடுத்திக்கொள்வது நன்மை தரும். இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்குவரும். புதிய தொடர்புகளால் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். இடமாற்றம் ஏற்படலாம்.

**கடகம்**: திறமை வெளிப்படும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதன் மூலம் நன்மை ஏற்படும். எந்த ஒரு சின்ன விடயம் கூட இலாபகரமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் கௌரவம் உண்டாகும்.

**சிங்கம்**: தொழில் தொடர்பான பயணங்களில் வெற்றி கிடைக்கும். செயற்றிறமை மூலம் கடினமான பணியையும் சிறப்பாகச் செய்து முடித்து மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கப் பெறுவீர்கள். அதிகாரம் செய்யும் பதவிகள் தேடிவரும்.

**கன்னி**: குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். சுபகாரியம் நடக்கும். திருமண முயற்சி மேற்கொண்டவர்களுக்கு சாதகமான பயன் கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள் ஆதரவும் கிடைக்கும். நீண்டநாள் சங்கடம் தீரும்.

**துலாம்**: எல்லாவற்றிலும் இலாபம் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து கூடும். எதிர்ப்புகள் விலகும். மன மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்துக்கு உதவும்.

**விருச்சிகம்**: நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**தனுசு**: எதிர்ப்புகள் அகலும். உங்கள் செயல்களுக்கு இருந்த தடை நீங்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பயன் கிடைக்கும். பலவகை முன்னேற்றங்களும் உண்டாகும்.

**மகரம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமையும் சாமர்த்தியமும் உண்டாகும். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். மற்றவர்களுக்காக பரிந்து பேசும்போதும் அவர்களுக்கு உதவிகள் செய்யும்போதும் கவனமாக இருப்பது நல்லது.

**கும்பம்**: அறிவுத் திறமை அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி கிடைக்கும். தேவையான பண உதவியையும் எதிர்பார்க்கலாம். திறமையாகச் செயற்பட்டு பாராட்டுகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மீனம்**: தைரியமாக எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவார்கள்.

## நாளை

**ஆடி-18 ஞாயிற்றுக்கிழமை | 03.08.2014**

திதி: ஸப்தமி பி.ப.01.49 வரை
நட்சத்திரம்: சித்திரை கா.06.45 வரை
சுபநேரம்: 09.04-10.34 வரை
இராகுகாலம்: 04.34-06.04 வரை
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### நம்பிக்கையே சுதந்திரம்

முக்தி என்னும் கருத்தே மயக்கமானது என்று ஆத்திகவாதி கருதுகிறான். அப்படியானால் உலகம் இருப்பதை நிரூபிப்பது எப்படி? உலகத்தை நாம் பார்க்கிறோம். அதை நாம் உணர்கிறோம். அதுவே அது இருப்பதற்குப் பிரமாணம் ஆகிறது. அதே போலத்தான் சுதந்திரத்தை அவர்கள் உணர்கின்றனர். உலகம் என்பது அனுபவ உண்மையானால், சுதந்திரம் அல்லது முக்தி என்பதும் அனுபவ உண்மையே ஆகும். நாம் பார்ப்பதைப் போன்று, சுதந்திரம் சங்கற்பத்தால் உண்டாவதல்ல. எல்லாவித ஆராய்ச்சிக்கும் மனிதன் சுதந்திரத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையே அடிப்படையாக அமைந்துள்ளது. கட்டுப்பட்ட நிலைக்கு முன்னர் சுதந்திரம் என்பது சங்கற்பத்தைப் பொறுத்ததே. சுயேச்சை என்பது, பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள மனிதன் ஒவ்வொரு கணமும் போராடுவதன் மூலம் தெரிகிறது. வரம்பற்றதாகவும் எல்லையற்றதாகவும் வரையறைக்கு உட்படாததாகவும் இருக்கும் பொருள் ஒன்றுதான் சுதந்திரமாக இருக்க முடியும். மனிதனிடமுள்ள சுதந்திரம் இப்போது நினைவு மட்டுமே; சுதந்திரத்தை அடைவதற்கான ஒரு முயற்சியே. பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றும் வட்டத்தைப் பூர்த்தி செய்து கொண்டு, தான் முன்பு இருந்த இடத்துக்கோ அதாவது ஆன்மாவுக்கோ போக முயல்கிறது. ஆனந்தத்தை நாடுவது, இழந்துவிட்ட சமநிலையை எய்த முயலுதல் ஆகும். ஒழுக்கம் என்பது பந்தத்தை நீக்குவதற்கான முயற்சியே; நாம் பூரண நிலையிலிருந்து வந்திருக்கிறோம் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

## சனிக்கிரக பனி நிலாவில் 101 வெந்நீர் ஊற்றுகள்



நாசாவின் காஸினி விண்கலம், சனிக்கிரகத்தின் பனி நிலாவான என்சிலேடஸில் 101 தனித்துவ வெந்நீர் ஊற்றுகள் இருப்பதைக் கண்டறிந்துள்ளது. அந்த நிலாவின் அடி நிலப்பகுதியில் இருந்து திரவ நிலை நீர் மேலே வந்திருப்பதற்கான சாத்தியக் கூறு இருப்பதாக இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடந்த 7 ஆண்டுகளாக காஸினியின் கமரா, இந்தச் சிறிய நிலாவின் தெற்கு முனைப் பகுதியில் படங்களை எடுத்து ஆராய்ந்து வருகின்றது. காஸினி ஹைஜன் மிஷன், நாஸா, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் இத்தாலி விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி இது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | | | | 2 | 4 | | |
| 9 | | | 1 | 7 | | 3 | | 6 |
| | | | 4 | | 9 | | 2 | |
| 2 | | | | 6 | 1 | 9 | | |
| | | | 2 | 5 | 4 | | | |
| | | 3 | 8 | 9 | | | | 5 |
| | 9 | | 7 | | 3 | | | |
| 7 | | 2 | | 1 | 8 | | | 9 |
| | | 8 | 9 | | | | 1 | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 4 | 8 | 1 | 2 | 5 | 9 | 3 |
| 5 | 1 | 8 | 9 | 3 | 4 | 7 | 2 | 6 |
| 3 | 2 | 9 | 5 | 6 | 7 | 4 | 1 | 8 |
| 6 | 8 | 3 | 1 | 7 | 9 | 2 | 4 | 5 |
| 4 | 5 | 1 | 6 | 2 | 3 | 8 | 7 | 9 |
| 2 | 9 | 7 | 4 | 5 | 8 | 6 | 3 | 1 |
| 9 | 7 | 6 | 3 | 4 | 5 | 1 | 8 | 2 |
| 8 | 4 | 5 | 2 | 9 | 1 | 3 | 6 | 7 |
| 1 | 3 | 2 | 7 | 8 | 6 | 9 | 5 | 4 |

# இளந்தென்றல் - சென்.ஜூட் இறுதியாட்டத்தில் மோதல்

யாழ்ப்பாணம்,ஓக.2
முள்ளியவளைவளர்மதிவிளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி, சென். ஜூட் விளையாட்டுக்கழக அணி ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில்தலாஒருகோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென்.ஜூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்மலை உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் சென்.ஜூட் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# வென்றது சென்.மேரிஸ்



யாழ்ப்பாணம்,ஓக.2
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக .2
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பொலனறுவை தேசிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மாதுறுஓயா உதைபந்தாட்டலீக் அணியை எதிர்த்து திருகோணமலைஉதைபந்தாட்டலீக்அணிமோதவுள்ளது.(த-23)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.2
மன்னார் நட்புறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் மன்னார் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை மன்னார் நகர சபை மற்றும் மன்னார் சென்.சேவியர் கல்லூரி மைதானங்களில் ஆரம்பமாகின்றன.
மன்னார் நகர சபை மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு;-
காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் பெரியகடை லெவின் கொயின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் அஞ்சல் திணைக்கள விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அடம்பன் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாந்திபுரம் குறோஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முருங்கன் பொதுசன விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பெரியகமம் எவர்கிறின் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மன்னார் சென்.சேவியர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு;-
காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வங்காலை சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாழ்வுப்பாடு சென்.அன்ரனிஸ்விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்துஅடம்பன் செந்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 'ஈ' அலவத்தை மருதம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கற்கடத்தகுளம் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
முற்பகல்10.30மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில் மன்னார்பொலிஸ் திணைக்கள விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துதேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.2
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு யங்கேர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பேராறு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.2
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன
இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)



வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளிலிருந்து தேசிய மட்ட மெய்வன்மை, எறிபந்துப் போட்டிகளில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் கடந்த 28ஆம், 29ஆம், 30 ஆம் திகதிகளில் ஓமந்தை மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. மேற்படி பயிற்சி முகாமில் பங்குபற்றிய வீர, வீராங்கனைகள் பயிற்றுநர்களுடன் படத்தில் காணப்படுகின்றனர். (த-23)

# மணற்காடு சென்.அன்ரனிஸை வென்றது திக்கம் இளைஞர்

யாழ்ப்பாணம்,ஓக.2
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2 ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில்இடம்பெற்றுவருகின்றன.
நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக் கும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)




வடமாகாண க்ல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பூப்பந்தாட்டத்திடலில் இடம்பெறுகின்றது. இதில் ஆட்டம் ஒன்றில் மோதிக் கொள்ளும் வீராங்கனைகள். (த-23)

# திருமலை ஒலிம்பிக்ஸ் உதைபந்தில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக .2
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிரிவு 2 இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.
கடந்த வாரம் திருகோணமலை கடற்படை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விள்ையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



# மொயீன் அலியிடம் சரணடைந்தது ஏன்?



மொயீன் அலியிடம் இந்திய அணி விக்கெட்டை பறிகொடுத்தது ஆச்சரியமாக உள்ளது என்று இயன் சப்பல் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா படுதோல்வியடைந்தது. இந்த தோல்விக்கு இந்திய துடுப்பாட்டக்காரர்கள் சுழல் பந்து வீச்சாளர் மொயீன் அலியிடம் சரணடைந்ததும் காரணமாக அமைந்தது.

இந்திய அணியிடம் என்னென்ன பிரச்சினைகள் இருக்கிறது என்பது பற்றி இயன் சப்பல் ஆங்கில இணையத்தளம் ஒன்றில் கூறுகையில்; முன்தர வரிசையில் உள்ள துடுப்பாட்டக்காரர்கள் ஒரே விதத்தில் திரும்பத் திரும்ப ஆட்டமிழப்பது தொடர்ந்து நடக்கிறது.

அதாவது பந்து வீச்சாளர் இந்த துடுப்பாட்டக்காரர்களை வீழ்த்தும் முறையை கண்டுபிடித்துள்ளனர் என்று கூறலாம். அதனை முறியடிக்க இவர்கள் ஏதும் செய்யாமல் இருப்பது கவலையளிப்பதாகும்.

இதற்கு ஏதாவது வழிமுறையை அவர்கள் கண்டு பிடிக்க வேண்டும். விராட் கோஹ்லி, புஜாராவிடம் அந்தத் திறமை உள்ளது.

ஷிகர் தவான் 2ஆவது இன்னிங்ஸில் ஓரளவுக்கு சரியாகவே ஆடினார். அவருக்கு இன்னும் ஒரு வாய்ப்பு கொடுக்கலாம்.

சில நல்ல பந்துகள் விழும்போது ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் மொயீன் அலியின் பந்துவீச்சில் அவர்கள் விளையாடத் திணறியதுதான் ஆச்சரியமாக உள்ளது. ஒட்டுமொத்த இந்த டெஸ்ட் போட்டியிலும் எனக்கு அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

இந்திய ஆடுகளங்களில் ஆடுவது போலவே ஆடுகின்றனர். இது ஒரு பெரிய பிரச்சினை தான். இங்கு அணுகுமுறை வேறுமாதிரியாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (த)

# தர வரிசைப்பட்டியலில் சறுக்கிய இந்திய வீரர்கள்

இங்கிலாந்துக்கெதிரான தொடரில் மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வரும் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் புதிதாக வெளியிடப்பட்டுள்ள ஐ.சி.சியின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் பின் தள்ளப்பட்டுள்ளனர்.

International Cricket Council

தொடரில் பிரகாசிக்கத் தவறிவரும் புஜாரா 2 இடங்கள் பின்தங்கி 10 இடத்திலும், விராட் ஹோக்லி ஒரு இடம் பின்தங்கி 15வது இடத்திலும் உள்ளனர். இத்தொடரில் அசத்தி வரும் அஜிங்க ரகானே 9 இடங்கள் முன்னேறி 26ஆவது இடத்திலுள்ளார். துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் தென்னாபிரிக்காவின் டி வில்லியரஸ் முதலிடத்தில் நீடிப்பதுடன் சங்கக்காரா 896 புள்ளிகளுடனும் அம்லா 873 புள்ளிகளுடனும், முறையே 2ஆவது, 3ஆவது இடங்களிலுள்ளனர்.

அதேவேளை பந்துவீச்சில் அசத்திய ஜடேஜா 25 இடத்திற்கும், புவனேஸ்குமார் 32வது இடத்திறகும் முன்னேறியுள்ளனர்.

முதலிடத்தில் தென்னாபிரிக்காவின் டேல் ஸ்ரெய்ன் தொடர்ந்தும் முதல் இடத்தில் நீடிப்பதுடன், அன்டர்சன் 7ஆவது இடத்திலும், இலங்கையின் ரங்கண ஹேரத் 8ஆவது இடத்திலும் உள்ளனர். பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் முதல் 10 இடங்களுக்குள் எந்தவொரு இந்திய வீரரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அணிகளுக்கான டெஸ்ட் தரவரிசையில் தென்னாபிரிக்கா 124 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் இந்தியா 102 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் இலங்கை 95 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும் உள்ளன.

# இந்திய அணி 7 ஆம் திகதி அறிவிப்பு

இலங்கை அணிக்கெதிராக ஒரு நாள் போட்டிகளில் விளையாடும் இந்திய அணி எதிர்வரும் 7ஆம் திகதி தெரிவு செய்யப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் இந்திய அணி இதையடுத்து 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணியுடன் விளையாட உள்ளது.

இந்தத்தொடருக்கான இந்திய அணி வரும்7ஆம் திகதி தெரிவு செய்யப்பட உள்ளது. அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை கவனத்தில் கொண்டு இந்த போட்டிகளுக்கு வீரர்களை தெரிவு செய்ய தேர்வுக்குழுவினர் ஆயத்தமாகி வருகின்றனர்.

இதற்கான சந்தீப் பாட்டீல் தலைமையிலான தேர்வுக்குழு கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி பிற்பகல் நடைபெறும் என்று இந்தியக் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பங்களாதேஷ் அணியுடன் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடியபோது அணித் தலைவர் டோனி உள்ளிட்ட முக்கிய வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது.

அதேபோல் இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் தொடரிலும் முக்கிய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்படலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன. (த)

# சிறப்பாக ஆடவில்லை



இங்கிலாந்து அணியிடம் படுதோல்வியடைந்ததற்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாதது தான் காரணம் என்று அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.

சவுத்தாம்டனில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 266 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி மோசமான தோல்வியைக் கொடுத்தது.

இந்த மோசமான தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கூறுகையில்; நாங்கள் சிறந்த ஆட்டத்தை ஆடவில்லை. மொயீன் அலி நன்றாகவே பந்து வீசினார். இருந்தாலும் அவரை நன்றாக வீச அனுமதித்தோம்.

அதேபோல் சுழல்பந்து வீச்சாளருக்கு எதிராக நல்லதொரு அ[illegible]கு முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

சில இலக்குகள் மென்மையான முறையில் விழுந்தன. பெரிய இலக்குகள் விழும்போது அது ஆட்டத்தின் போக்கை மாற்றி விடுகிறது. அதிக இலக்குகளை இழக்காமல் இருந்திருந்தால் ஆட்டம் வித்தியாசமாக இருந்திருக்கும்.

5ஆவது பந்துவீச்சாளரை எப்போதும் பயன்படுத்தியதில்லை. அதனால் துடுப்பாட்டக்காரர்களை அதிகப்படுத்தி அதில் ஓரிருவரைப் பந்து வீசச் செய்வது என்று முடிவெடுத்தோம்.

4 பந்து வீச்சாளர்களைக் கொண்டு வீசினாலும் வேகப்பந்து வீச்சுக்கு அதிக உதவி இல்லாத இத்தகைய ஆட்டக்களங்களில் பொறுமை அவசியம்.

எப்போதும் வெளியே பந்தை வீசச் செய்து துடுப்பாட்டக்காரர் தவறு செய்வார் என்று காத்திருப்பது பெரிய சோர்வை ஏற்படுத்துகிறது.

இஷாந்த் சர்மா 4ஆவது டெஸ்ட் போட்டிக்குள் காயத்திலிருந்து மீள்வது கடினம் என்று தான் நினைக்கிறேன்.

கண்டிப்பாக இந்திய அணியின் திறமையை வைத்துப் பார்த்தால் நிச்சயம் அடுத்த போட்டியில் வெற்றி பெற முடியும். அடிக்கக்கூடிய இடத்தில் பந்து விழும்போது தன்னம்பிக்கையுடன் அடித்து ஆடவேண்டும்-என்று கூறியுள்ளார். (த)

# தவான் வேண்டாம்

இந்திய அணியின் தொடக்க ஆட்டம் மோசமாக இருப்பதால் தவானுக்கு பதிலாக தொடக்க வீரராக கம்பீரை களமிறக்கலாம் என கங்குலி கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து இலக்காக நிர்ணயித்த 445 ஓட்டங்களை எடுக்க முடியாமல் இந்தியா 178 ஓட்டங்களில் வீழ்ந்தது.

அதிகபட்சமாக ரஹானே 52 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் மொயீன் அலி 6 இலக்கை வீழ்த்தினார். இந்த படுதோல்வியால் இந்திய வீரர்கள் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளனர்.

தொடக்க வீரர் முரளி விஜய் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் மற்றொரு வீரரான ஷிகார் தவான் தொடர்ந்து சொதப்பி வருகிறார். இதுவரை நடந்துள்ள 3 டெஸ்டிலும் இந்தியாவின் தொடக்கம் சரியாக அமையவில்லை.

லோர்ட்சில் பெற்ற வரலாறு வெற்றி இந்த டெஸ்ட் போட்டியில் எந்தவித தாக்கத்தையும் வெளிப்படுத்தவில்லை என்று கருத்து நிலவுகிறது.

இந்நிலையில் இந்த் தோல்வி குறித்து முன்னாள் அணித்தலைவர் கங்குலி கருத்து தெரிவிக்கையில்;

இந்தியாவின் தொடக்கம் சிறப்பாக இல்லை. அதனால் ஷிகார் தவானுக்கு பதில் கவுதம் கம்பீரை களம் இறக்கவேண்டும். தவானுக்கு ஓய்வு தேவை. கோஹ்லியை விட ஷிகார் தவான் துடுப்பாட்டம் தான் கவலையளிக்கிறது.

அதேபோல் பந்து வீச்சில் உமேஷ் யாதவ், வருண் ஆரோனுக்கு வாய்ப்பு கொடுக்கலாம். மன்செஸ்டரில் நடக்கும் 4ஆவது டெஸ்டில் இந்தியா கண்டிப்பாக வெல்லும் என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார். (த)



# ஈட்டி எறிதல் போட்டியில் நதீகா லக்மாலி 6ஆம் இடம்



பொதுநலவாய விளையாட்டு விழாவில் மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு பதக்கம் பெற்றுக் கொடுக்கக்கூடியவர் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நதீகா லக்மாலிக்கு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் ஆறாவது இடமே கிடைத்தது.

இது இலங்கை அணியினருக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

32 வயதான நதீகா லக்மாலி கடந்த வருடம் 60.64 மீற்றர் தூரம் ஈட்டியை எறிந்து இலங்கைக்கான தேசிய சாதனையை நிலைநாட்டியிருந்த போதிலும் புதன்கிழமை (இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை) நடைபெற்ற போட்டியில் 59.04 மீற்றர் தூரம் ஈட்டியை எறிந்து ஆறாம் இடத்தையே அவரால் பெறமுடிந்தது.

எவ்வாறாயினும் செப்ரெம்பர் மாதம் தென் கொரியாவின் இன்ச்சொனில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் நதீகா லக்மாலி பதக்கம் ஒன்றை பெறுவார் என்ற எதிர்பார்ப்பை அவரால் பதிவுசெய்யப்பட்டுள்ள தூரப் பெறுதி அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியாவின் கிம் மிக்ல் 65.96 மீற்றர் தூரம் ஈட்டியை எறிந்து புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பரமானந்தம்



தாவடி தெற்கு பத்தானை வீதியை பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட சின்னத்துரை பரமானந்தம் 01.08.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை செல்லம்மாவின் மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற நடேசபிள்ளை, ஞானசுந்தரம், கணேசபிள்ளை, பஞ்சலிங்கம் ஆகியோரின் சகோதரனும் கண் மணியின் அன்புக் கணவரும் ஆனந்த பாஸ்கரன், அன்புமலர், லலிதா, சுமதி, நிசாந்தன், மல்லிகா ஆகியோரின் அன்பு தகப்பனாரும், சகிலா தேவி, பற்குண ராஜா, வரன், கிருபா, பாமா, சிவா, ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: வரன்(மருமகன்)
(வரன் வெற்றிலைக்கடை, யாழ்ப்பாணம்.தொ.பே.0779050188)

# கசுன் ஜயசூரிய மீண்டும் களத்தில்

ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் நான்கரை வருட கால தடைக்குட்பட்டிருந்த இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியின் முன்னாள் வீரர் கசுன் ஜயசூரிய, தனது மீள் வருகையில் விளையாடிய முதலாவது போட்டியிலேயே கோல் போட்டு பலத்த பாராட்டைப் பெற்றார்.

நிகம்போ யூத் கழகத்துக்காக சம்பியன்ஸ் லீக் உதை பந்தாட்டப் போட்டிகளில் விளையாடும் கசுன் ஜயசூரிய, வென்னப்புவை யில் நடைபெற்ற நியூ யங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 69 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டார்.

இவருக்கு விதிக்கப்பட்டிருந்தந்து வருடத் தடையை கடந்த வருடம் நீக்குவதற்குச் சம்மேளனம் தீர்மானித்த போதிலும் விளை யாட்டுத்துறை அமைச்சரின் தலையீட்டால் அந்தத் தடை நீக்கப்படாமல் இருந்தது.

எனினும் அமைச்சரின் அனுமதியுடன் ஜூலை முதலாம் திகதி முதல் ஜயசூரியவின் தடை நீக் கப்பட்டதாகச் சம்மேளனத் தலைவர் ரஞ்சித் ரொட்றிக்கோ தெரிவித்தார்.

நியூ யங்ஸ் அணிக்கு எதிரான இப் போட்டியில் நிகம்போ யூத் 30 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.மற்றைய இரண்டு கோல் களை கமல் சில்வா 45, 56ஆவது நிமிடங் களில் போட்டார்.

மாத்தறையில் நடைபெற்ற மாத்தறை சிட்டிக் கும் சுப்பர் சன்னுக்கும் இடையிலான போட்டி 11 என்ற கோல் அடிப்படையில் வெற்றி தோல் வியின்றி முடிவடைந்தது.

இவ் வருடம் சுப்பர் சன் சார்பாக விளையாடும் முன்னாள் தேசிய மற்றும் ரட்ணம் கழக வீரர் ஈ.பி. சன்ன 67ஆவது நிமிடத்தில் கோல் போட்டார். எனினும் மாத் தறை சிட்டி சார்பாக ஏ.எம்.பிரசன்ன 78 ஆவது நிமிடத்தில் கோல் போட்டு கோல் நிலையை சமப் படுத்தினார்.

வேர்னன் பெர்னாண்டோ விளையாட்டரங்கில் நடைபெற்ற புளூ ஸ்டார் அணிக் கும் களுத்துறை பார்க் அணிக்கும் இடை யிலான போட்டி கோல் எதுவும் போடப்படாமல் வெற்றி தோல் வியின்றி முடிவடைந்தது.

இதுவரை நடந்து முடிந்துள்ள 10 போட்டி முடிவுகளின் பிரகாரம் நிகம்போ யூத் கழகம் நிகர கோல்கள் வித்தியாச அடிப்படையில் முதலாம் இடத்தில் உள்ளது. (த)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் செல்வம்



குருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் செல்வம் 30.07.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மத்தியாஸ் செல்வத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தியோகு-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரேசாள், றூபி, பொன்னுக்கண்டு ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிறேமா, செல்லம், யோகா, றதி, சூரி, பெரியவன், இன்பம் ஆகியோரின் பாசமிகு தாயும், தேவதாஸ், வசீகரன், விமலன், மவுண்பேட், ஜோண்சன், பவானி, மலர் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (05.08.2014) செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணியளவில் இல.79, 4ஆம் குறுக்குத்தெரு, குருநகரிலுள்ள இல்லத்திலிருந்து புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 9317

(50523)(10)

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்



வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட காசிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உள்ளூராட்சி திணைக்கள எழுதுவினைஞர்) நேற்று (01.08.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் இளைய புதல்வரும், மகேஸ்வரி, கந்தசாமி (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), சரஸ்வதி (பிரதம தாதி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பராசக்தி, தம்பு துரைராசா ஆகியோரின மைத்துனரும், திருக்குமார், திருக் குமாரி (நீதியுதவியாளர் வலயக் கல்வி அலுவலகம், வலிகா மம்), செல்வகுமார் (கிராம உத்தியோகத்தர்), கமலகுமாரி, உதயகுமாரி, பால குமாரி ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு பூதவுடல் மாவிட்டபுரம் தச்சன்காடு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீணியவரை அம்மன்
கோயிலடி, மாவிட்டபுரம்.

தகவல்:
கா. கந்தசாமி
(சகோதரன்)

(50525)(10)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.11.1948 — மறைவு 13.08.2013

### திருமதி பூபதி அருளானந்தம்

அம்மா பிரமத்தின் அவதாரமே!
வார்த்தைகள் வற்றிப்போக
நினைவுகள் நின்று விட....
கண்ணீர்த் துளிகளால்
உன்னைத் தேடுகின்றோம்.

உலக அதிசயங்களுக்கெல்லாம்
முகவரி நீ....
உன் வைராக்கியம்
வானத்தை அண்ணாந்து பார்க்கச் செய்தது
சிலுவை சுமந்த பெண் யேசு-நீ
உன் பாசம் பரிவு நேர்மை...
புவிச் சுழற்சி உள்ளவரை
தர்மத்தைப் போதிக்கும் நீ
எமக்கு.....
காலத்தை காவியமாக்கியவளும் நீயே.

சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49726)(10.6)

## அந்தியேட்டி அழைப்பு

### முருகு இராசலிங்கம்

(வரைபட கலைஞர் நில அளவைத்திணைக்களம்,ஆங்கில தட்டெழுத்தாளர்)



கடந்த 04.07.2014 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் முருகு இராசலிங்கம் (வரைபட கலைஞர் நில அளவைத் திணைக்களம், ஆங் கில தட்டெழுத்தாளர்) அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் அவரின் இல்லத்தில் நாளை (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி யளவில் நடைபெறும் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதராக பங்கு கொண்டு நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதன் பின் நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அவரது மரணச் சடங்கில் பங்கேற்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் - 18.05.1936
மறைவு - 04.07.2014

60/5. Dr. சுப்பிரமணியம் வீதி.
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் இராசதுரை

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)



கட்டுவனைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் வவுனியா வேப்பங்குளத்தை தற்காலிக வசிப் பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசதுரை நேற்று (01.08.2014) வெள் ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-முத்துப்பிள்ளை தம் பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற சிவகாமி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, நடராசா, அருளம்மா, செல் லத்துரை ஆகியோரின் அன்புச் சகோ தரரும், கரிகரன், கருணாகரன், உதய குமார் (ரஞ்சன்), பாலேந்திரன் (இந்திரன்) ஆகியோரின் அன்புத் தந்தை யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2014) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேப்பங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.45/12,
6ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா.

தகவல்:
பிள்ளைகள்
T.P: 077 036 8366 (இந்திரன்)
077 026 1303 (உதயன்)

(48956)(10)

## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை-செபஸ்ரியாம்பிள்ளை (விஜயரட்ணம்)

(இளைப்பாறிய அதிபர் யா/மரியாள் வித்தியாலயம் OLR)



போயிட்டி இளவாலையைப் பிறப்பிடமாகவும், ஊறணி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மனு வேற்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை (விஜயரட்ணம்) நேற்று (01.08.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - அன்ன பூரணம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சிங்கராயர்-பரிமளம் தம்பதியரின் மருமகனும், மேரி யோசேப்பின் புஸ்பராணியின் (ராணி) அன்புக் கணவ ரும் ஹொன்சி அருளினி (NDB Bank, சுன்னாகம்) அனிஸ் தயந்தன் (ஆசிரியர், சென். பற்றிக்ஸ் கல்லூரி) ஜெனிஸ்- ஜெயந்தன் (ஆசிரியர்-கணேசபுரம் சண் முகானந்தா வித்தியாலயம்-வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கறோஸ், ஜெயரட்ணம், துரை ரட்ணம், ஜீவரட் ணம், குணரட்ணம், மரியமலர், திரேச மலர் ஆகியோரின் சகோதரனும், மேரி பிலோமினா, தவராசா, யோகராசா, வின் சன்ட் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை போயிட்டி இளவாலையில் அமைந் துள்ள புனித லூர்து அன்னை ஆலயத்தில் இன்று (02.08.2014) சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் புனித லூர்து அன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 116/3,
கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 9208

தகவல்:
குடும்பத்தினர்.

(50526)(10)

# நல்லூர்க் கந்தன் உற்சவ கால போக்குவரத்து சிறப்பிதழ்

நல்லூர் உற்சவ கால சுற்றுலா பயணிகளுக்கான
போக்குவரத்து சேவை

**தற்போது....**
யாழ்ப்பாணத்தில் 26 ஆசனங்களுடன், குளிரூட்டி வசதியுடன் Toyota Coaster வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்



## சிநேகிதபூர்வமான சிறப்பான சேவை

- விமான நிலையம் மற்றும் ஹோட்டல் போக்குவரத்து சேவை
- ஒன்றுபட்ட போக்குவரத்து
- சுப நிகழ்வுகளுக்கான போக்குவரத்து
- ஒழுங்கமைக்கப்பட்ட வாடகை சேவை
- நாளாந்த சுற்றுலா சேவை
- திருமண வைபவங்கள்
- யாழ் சுற்றுலா
- குறுந்தூர நெடுந்தூர சுற்றுலா
- வெளிமாவட்டங்களுக்கான சுற்றுலா




**KK TRAVELS**
மேலதிக தகவலுக்கு அழையுங்கள்
0773 086586 / 0759 732169
Email : vasee76@gmail.com

---

நல்லூர்
உற்சவ கால விசேட போக்குவரத்து சேவை

## PRAKASH
## TRANSPORT SERVICE



*கடந்த பல வருடங்களாக சிறந்த சேவையினை வழங்கிவரும் எமது நிறுவனம்*

எமது யாழ். கிளை மூலமாகக் குடாநாட்டில் உற்பத்தியாகும் அனைத்துப் பொருள்களையும் தென்பகுதியில் உரிய இடங்களில் ஒப்படைக்கவும், கொழும்பிலிருந்து அனைத்து வர்த்தகப் பொருள்களையும் வடபகுதி வர்த்தகர்களிடம் ஒப்படைக்கவும் நம்பிக்கையுடன் சேவை செய்யும் எங்கள் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறு வாடிக்கையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.



**GENERAL MERCHANTS & RICE MILLERS**
No. 221, Dam Street, Colombo-12 Tel : 011 254 3310
Fax : 011 238 7857
No. 457, K.K.S. Road, Jaffna. Tel : 021 222 2145
Fax : 021 222 2958

---

நல்லூர் உற்சவகால விசேட போக்குவரத்து சேவையை.......
2002 ஆம் ஆண்டு தொடக்கம் பாதுகாப்புடன் சிநேகபூர்வமான சேவையை வழங்குவோரும் City Express



## சிற்றி எக்ஸ்பிரஸ்
## City Express

கொழும்பு 87/ யாழ்ப்பாணம்/ யாழ்ப்பாணம் 87 கொழும்பு
Colombo 87 Jaffna | Jaffna 87 Colombo
சரி செய்யக் கூடிய இருக்கை, படக்காட்சியுடன் தினசரி சேவை.
Adjustable seat, Video Coach, Daily Service





தேவன் (Thevan) - 077 466 9641 / 077 774 2671
பரந்தி (Paranthi) - 077 908 0435 / 021 321 1560

(C/1514O)(5.6.3)

**WE WILL TAKE CARE FOR THE PASSANGER**

---

# நல்லூர் உற்சவ கால விசேட போக்குவரத்து சேவை

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்

## கியூ லைன்ஸ்
## Keyu Q Lines



அரச அனுமதிப் பத்திரம் பெற்ற
A/C பலூன் பஸ் சேவை

ஆசன பதிவுகளுக்கு: கொழும்பு : 077 8591 555 / : 077 179 8963
யாழ்ப்பாணம் : 077 8595 151 / : 077 717 6516



Adjustable Baloon Bus

**மேலதிக தொடர்புகளுக்கு: 077 859 1943**

அனைத்து விஷேட சுற்றுலா பயணங்களுக்கும் வீடியோ படக்காட்சியுடன்
குளிரூட்டப்பட்ட அதி நவீன சொகுசு பஸ் சேவை.

# இயற்கை அழிவுகள் எம் மக்களை கையேந்துவோராக மாற்றியுள்ளது

## மண்முனை தென்மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.2

சூறாவளி, சுனாமி இடம்பெயர்வுகள் எம்மை இலவசமாகக் கையேந்துவதற்கு பழக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார் தென்மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர், ந.தயாசீலன்.

முனைக்காடு உக்டா சமூகவள நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வுவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"எதிர்கால கல்வி நிலைக்கு ஆங்கிலம் மற்றும் கணினி என்பவை மிக முக்கியமானவை. அவை இன்றி எந்தவித தொழிலுமே செய்ய முடியாத ஒரு சூழல் எதிர்காலத்தில் உருவாகும். அதற்காக நாம் அதனை இன்று இருந்தே ஒவ்வொரு குழந்தைகளையும் கற்பிக்க வேண்டிய அவசியமும் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டிய தேவையும் பெற்றோர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளது. இன்று வெளியாகின்ற அனைத்து கண்டுபிடிப்புக்களும் முதலில் ஆங்கிலத்திலே வெளியாகின்றது. இதிலிருந்து ஆங்கிலம் எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக எமது பிரதேசத்து மக்கள் இலவசமாக எதையும் வழங்கினால் அதை பெறுவதில் ஆர்வமாக உள்ளார்கள். சூறாவளி, சுனாமி பேன்றவற்றால் உருவான இடப்பெயர்வுகள் எமது மக்களை இலவசமாக கையேந்துவதற்கு பழக்கியுள்ளது. பொருளாதாரமாக இருந்தாலும் சரி நல்ல பழக்க வழக்கங்களாக இருந்தாலும் சரி கல்வியினாலேயே அனைத்தையும் கட்டியெழுப்ப முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)


## அறைகள் வாடகைக்கு


கொழும்பு வெள்ளவத்தையில் குறைந்த நாளாந்த வாடகையில் வீடு A/c, Non A/c அறைகளை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

**THAAS REST**
391/6, Galle Road, Wellawatte
Mangala Hald அருகில்
011 2360515, 011 2362586

**UTHAYA REST**
No 58,Harmes Avenue,
Wellawatte
011 2503552, 011 2361242

GOOD WIN


## மரண அறிவித்தல்



### க. தங்கவடிவேல்

[ இளைப்பாறிய ஆசிரியர் ]

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கம்பர்மலையை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசித்தவரும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஓய்வுபெற்ற ஆசிரியர் க.தங்கவடிவேல் 29.07.2014 அன்று காலமானார்.

அன்னார் திருமதி ரூபசௌந்தரி-தங்கவடிவேலின் அன்புக் கணவரும், சௌந்தர், ராதா, சுஜாதா, சுரேன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கணபதி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணன்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மறைந்த பிரபல பாடகர் குழந்தைவேல், சகுந்தலை, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மறைந்த ரஞ்சிதமலர் மற்றும் ராஜேந்திரன், புவனேஸ்வரலிங்கம், பாஸ்கரதாஸ் ஆகியோரின் மைத்துனரும், அபிராமி, தவராஜா, கலாமோகன், சுஜிதா, வசந்தகோகிலம், சூரியகுமாரி, ரகுநாதன், வரதராஜன், சுமதி, வளர்மதி, வைகுந்தவாசன், ஜெயகாந்தன், கங்காதரன், சோதிஸ்வரன் ஆகியோரின் மாமனும், நடராஜாவின் சகலனும், மஞ்சரி, பிருந்தன், கிருஷ்ணி, துவாரகன், சாரகேஸ், சௌமியா, வைசஷாலி, சாகரன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.08.2014 ஞாயிற்றுக்கிழமை கம்பர்மலை வல்வெட்டித்துறையில் (அன்னாரின் வீட்டில்) முற்பகல் 10 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஊரிக்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/15587)(10.6) தகவல் சுரேன், கலாமோகன் 077 2198599

# உயர்தரத்தில் தோற்றவுள்ள மாணவருக்கு ஆசீர்வாதம்

மட்டக்களப்பு, ஓக.2

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் உயர்தரக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டு முதன்முறையாக இந்த முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களை ஆசீர்வதிக்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் இந்த ஆண்டு உயர்தரத்தில் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பெற்றோர்களாலும் பின்னர் அதிதிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலய ஆசிரிய வளநிலைய முகாமையாளர் க.குருபரன், வித்தியாலய அதிபர் திருமதி.யோகராணி ஞானப்பிரகாசம், தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.வ.சோதிலிங்கம் குருக்கள், வித்தியாலய பிரதி அதிபர், ஆசிரியர்கள், வளவாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றார்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு

நல்ல இன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (50515) (7.6.3)
தொடர்பு : 021 492 2950, 077 911 6052


## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### கிருஷ்ணர் மகாலிங்கம்
(ஓய்வுநிலை ஊழியர், சீமெந்துக்கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை )

தோற்றம் 30.05.1938

மறைவு 28.06.2014

திதி: பிரதமை

கடந்த 28.06.2014 சனிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் கிருஷ்ணர் மகாலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (02.08.2014) சனிக்கிழமை முற் பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

முகாந்தர லேன்,
காங்கேயன் பேக்கறி அருகில்,
மல்லாகம்.

(50512) (12.3.6)

உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலம் கந்தையா



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலம் கந்தையா நேற்று முன்தினம் (31.07.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் கந்தையா(ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் குமாரசாமி, குலசேகரம், பசுபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியேந்திரா(நீர் இறைக்கும் இயந்திர இயக்குநர், பிரதேசசபை), புவனேந்திரா, யோகேந்திரா (விஞ்ஞான ஆய்வுகூட அலுவலர், நெடுந்தீவு மகாவித்தியாலயம்), பவானி, காலஞ்சென்ற ரவீந்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மங்கையர்க்கரசி, சந்திரகலா (ஆசிரியை), கலா (ஆசிரியை) நிர்மலரத்தினம்(முன்னாள் கெயார் நிறுவன திட்டப்பணிப்பாளர், தற்பொழுது வேள்ட் விசன் வெளிக்கள இணைப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்மிகா, மதுசன், நிரோஜன், சிந்துசன், கிரிசாளினி, கிரியாழினி, சாகித்தியன், துசாளினி, நிருண், நிர்ஜின், நிரோஜன், நிருபா, நிருஷா, நிருசன், நிதர்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வெல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்திவு மேற்கு
தொடர்பு: க.சத்தியேந்திரா
077 989 3077

(50507)(4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை சிற்றம்பலம் (ஆச்சாரியார்)



சுழிபுரம் கிழக்கு பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை சிற்றம்பலம் 28.07.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம் கிழக்கு.

(50513)(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.


நம்பிக்கை மிகுந்த சேவையுடன் 5ம் ஆண்டில் கால் பதிக்கும் "ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் பி.எல்.சி"
யாழ் கிளை........

எமது உன்னத சேவையில் துணை நின்ற பெறுமதி மிக்க வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் மேலும் தங்களுடன் தொடர்ந்து பயணிக்க நாம் விரும்புகின்றோம்.



74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
www.tfil.lk
T.P : 021 221 9997, 9998, 021 222 1898. 1900
Fax : 021 222 1899 E.mail : tradefij@sltnet.lk

# வைக்கோலைச் சேமித்து உபயோகப்படுத்தும் திட்டம்

## மட்டக்களப்பில் ஆரம்பமாகியது

மட்டக்களப்பு, ஓக.2

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் எழுவான்கரை விவசாய உற்பத்தியாளர்களுடன் ஒன்றிணைந்து வைக்கோலை சேமித்து பிரயோசனப்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாண விவசாய கால்நடை உற்பத்தி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.பத்மநாதனின், அறிவுரைக்கமைய மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி உதயராணி குகேந்திரன் தலைமையில் வைக்கோலை பிரயோசனப்படுத்துவது தொடர்பான செய்முறை பயிற்சித்திட்டம் ஆயித்தியமலை வயல்வெளியில் இடம்பெற்றது.

கால்நடை உணவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் இந்தக் காலகட்டத்தில் வைக்கோலை குறைந்த இடப்பரப்பில் நிறைவாக சேமித்து வைப்பதற்கும் வைக்கோல் தட்டுப்பாடு நிலவும் வேறு பிரதேசங்களுக்கு சிரமமின்றி எடுத்து செல்வதற்கும் வைக்கோலை விற்பனை செய்வதற்கும் இந்த புதிய தொழில்நுட்பம் வசதியாக அமையும் என்றும் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர்.ரீ.கே.தவராஜன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வைத்திய அலுவலக கால் நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.பி.சண்முகநாதன் இதுகுறித்துக் கருத்து தெரிவிக்கையில்:

பண்ணையாளர்களுக்கு கால்நடை உணவாக வைக்கோலை சேமிப்பது மட்டுமன்றி இதனை வியாபார முயற்சியாகவும் மேற்கொள்ள முடியும் என்பதுடன் இதற்காக தனியார் வங்கிகள் இலகு வட்டியுடன் கடன் வழங்க முன்வந்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

(ற)

## தொடர்ச்சிகள்

### சமுர்த்தி

பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியத்தின் கொடுப்பனவின் கீழ் பணியாற்றுவது என்ற 4 தெரிவுகள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 24 ஊழியர்கள் கொடுப்பனவுகளையும், நஷ்டஈட்டையும் பெற்றுக் கொண்டு பதவி விலகியுள்ளனர். திணைக்களத்தினுள் இணைந்து கொண்டு ஓய்வூதியத் திட்டத்தில் பங்கு பற்றுவது என்ற தெரிவில் 380 பேர் இணைந்து கொண்டுள்ளனர்.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டு புதிதாகத் திணைக்களத்தில் இணைந்து கொள்வது என்ற தெரிவின் கீழ் 213 பேரும், தொடர்ந்தும் ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியத்தின் கொடுப்பனவின் கீழ் பணியாற்றுவது என்ற தெரிவில் 168 பேரும் இணைந்து கொண்டுள்ளனர். (த-5)

### தமிழ்

வில்லை.

இந்தச் சம்பவங்களையடுத்து தமிழ் ஊடகவியலாளர்களுக்காகக் குரல் கொடுத்த அமெரிக்காவைக் கண்டித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலும், வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்துகளிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் மறைமுகமாக மிரட்டப்படுகின்றனர் என்பது புலனாகின்றது.

எனவே, தமிழினத்தின் அவலங்களை வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்டும் தமிழ் ஊடகவியலாளர்களை மிரட்டி - அச்சுறுத்தி ஒருபோதும் அடிபணிய வைக்க முடியாது. இதனை இலங்கை அரசும், அதன் படைகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்த காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி தமிழ் ஊடகவியலாளர்கள் அரசின் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது பணிகளைச் செய்து வருகின்றனர்.

இவர்கள் எதற்கும் அடிபணியாமல் தமது பணிகளை துணிகரமாகச் செய்த காரணத்தால் தான் அரசினதும் அதன் படைகளினதும் மோசடிகளும், மனித உரிமை மீறல்களும் வெளி உலகிற்கு அம்பலமாகியுள்ளன.

இதனால்தான் சர்வதேச சமூகத்தின் பொறிக்குள் இலங்கை அரசு சிக்கித் தவிக்கின்றது" - என்றார்.

### பிரதேச

காரணங்களைக் குறிப்பிட்டுப் பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாக முடியாது என்று கூறினார். ஆனால் சட்டத்தில் அவ்வாறு இடமில்லை என்பது குறித்து சிறிது நேரம் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலையாகலாம் என்று முடிவாகிய பின்னர் கட்டாணை வழக்கு விசாரணை இடம்பெற்றது. நேற்று முன்தினம் கட்டாணை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதால் அந்த மனு எதிராளிகளுக்குக் கிடைக்காதமையால் மனுவில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் என்னவென்று தெரியாத நிலையில் மனுதாரரால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வாதங்களுக்கே பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டு விசாரணை இடம்பெற்றது.

இறுதியாக கட்டாணையை நிறுத்துவதற்கு எதிராளிகளால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் போதாமை மற்றும் நீதிமன்றைத் திருப்திப்படுத்தாமை ஆகிய காரணங்களால் இந்த விடயத்தில் கட்சி எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று கூறும் கட்டாணை அனுமதி வழங்கப்படுவதாக நீதிமன்று அறிவித்தது. எதிர் வரும் 15 ஆம் திகதிவரை அந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆணை 14 நாள்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

(த-4)

### முல்லைத்தீவு

யில் கூரையின் கீழ்ப்புறமாக பெரிய தேன் குளவிக்கூடு ஒன்று காணப்பட்டுள்ளது. இதிலிருந்து கலைந்து சென்ற தேன் குழவிகளே மாணவர்களைத் தாக்கியுள்ளன. இதேபோன்றதொரு தேன் குளவிக்கூடு சில மாதங்களுக்கு முன்னர் மேற்படி பகுதியில் காணப்பட்டதாகவும், அதனை தாம் தீமூட்டி அழித்ததாகவும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்றைய தேன் குளவித் தாக்குதல் குறித்து பாடசாலை நிர்வாகத்தினர் உடனடியாக முல்லைத்தீவுக் கச்சேரியில் இயங்கும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினருக்குத் தெரியப்படுத்தினர். அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இல்லாத நிலையில் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர், பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களையும் பார்வையிட்டனர்.

நேற்றுப் பாடசாலை நாளாக இருந்த போதும் இந்ததேன் குளவித் தாக்கத்தை அடுத்து மாணவர் கள் அனைவரும் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுப் பாடசாலை காலையிலேயே மூடப்பட்டது. (த-102)

### புலிகளிடம்

பாவது பாதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க பூரண சுதந்திரமும் சந்தர்ப்பமும் உள்ளது.

முப்பது வருட பெரும் போர் ஒன்று முடிவுக்கு வந்துள்ள சந்தர்ப்பத்தில் தேசிய பாதுகாப்பு தொடர்பாக கூடிய கவனத்தை செலுத்த வேண்டியது அத்தியவசியமானது. வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்து செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை தேடிப்பார்ப்பது மிகவும் அவசியமானது.

முக்கியமாக இவ்வாறான அமைப்புகள் இன அடிப்படையில் நபர்களை தெரிவு செய்து வாக்குரிமையை பயன்படுத்துவது மாத்திரமல்லாது யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் சொல்லி கொடுத்துள்ளன"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

### போராட்டத்தை

ருந்தனர்.

இதுகுறித்து நேற்றுக் கருத்துத் தெரிவித்திருந்த இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தின் தலைவர் எஸ்.யேசுராஜா,

"நேற்று மாவட்ட ஆட்சியாளரை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பை மேற்கொண்டிருந்தோம். மீனவர் பிரச்சினை தொடர்பில் தாம் நடவடிக்கை எடுப்பதாக நேற்று உறுதிமொழி வழங்கியுள்ளார். அதனையடுத்து கச்சதீவு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. ஆயினும் இன்று வேர்கோடு பகுதியில் இருந்து துறைமுகத்தை நோக்கி மீனவர்கள் நடை பயணத்தை மேற்கொண்டு தமது போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

இதற்கும் தீர்வு கிடைக்கா விட்டால் எதிர்வரும் 9 ஆம் திகதி பிரதமர் மற்றும் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஆகியோரை சந்திப்பதற்கு அனுமதி கோரியுள்ளோம். அனுமதி கிடைத்தால் சந்திப்பு மேற்கொள்ளப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-14)

### ஜெயலலிதா கடும்

பொது வாழ்க்கையில் நான் ஈடுபட்டதிலிருந்து நான் பல விமர்சனங்களையும் எதிர் கருத்துக்களையும் எதிர்கொண்டுள்ளேன். ஆனால், மீனவர்களின் வாழ்வாதாரமான ஒரு பிரச்சினையில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு செய்யும் முயற்சிகளை இப்படி நேரடியாகக் கொச்சைப் படுத்தி, சிறுமைப் படுத்தி எழுதப்பட்டிருப்பது, அதுவும் அண்டை நாடு ஒன்றின் முக்கிய அமைச்சகத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில் இதுபோன்று எழுதப்படுவது ஒரு போதும் ஏற்புடையதல்ல.

அதில் சேர்க்கப்பட்டுள்ள படங்கள் இந்தியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கீழ்மைப்படுத்தும் விதமாகவும் குறிப்பாக பல ஆண்டுகள் அரசியல் அனுபவம் பெற்ற 66 வயது பெண் அரசியல் தலைவரைக் கொச்சைப்படுத்தும் விதமாகவும் உள்ளது. நாட்டையும் அதன் தலைவர்களையும் இழிவுபடுத்தும் இத்தகைய முயற்சிகளை எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

முக்கியமாக அந்த வலைத்தளத்தின் உரிமைத் துறப்பு வாசகம், வலைத்தளத்தில் தனிநபர் பங்களிப்புடன் எழுதப்படும் உள்ளடக்கங்களுக்கு பாதுகாப்பு அமைச்சகம் பொறுப்பேற்காது என்று கூறியுள்ளது. ஆனால், தமிழக முதல்வர் மற்றும் பிரதமர் ஆகியோரின் படங்கள், கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் குறிப்பிட்ட அந்த பத்திரிகையாளரைச் சார்ந்தது அல்ல. மாறாக இலங்கை அரசுடையது தான் என்பதை அறிவுறுத்துகிறது.

தமிழ்நாட்டில் இது குறித்து பலத்த கண்டனங்கள் எழுந்த பிறகு அந்தக் கட்டுரை நீக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே அது நிறைய சேதங்களை விளைவித்துவிட்டது. உடனடியாக இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று வலியுறுத்தியுள்ளார்.

(ற-5)

### ஜெயலலிதாவை

யும் கோரியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவமதிக்கும் வகையில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதி வரும் கடிதங்களை கொச்சைப் படுத்தும் வகையில் "நரேந்திர மோடிக்கு ஜெயலலிதா எழுதும் காதல் கடிதங்கள் எந்த அளவுக்கு அர்த்தமுள்ளவை?" என்று தலைப்பிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஐஷனாலி டி வடுகே என்பவர் எழுதியிருந்த அந்தக் கட்டுரையில்,

இலங்கை அரசு ஏற்பாடு செய்துள்ள பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்ள வந்த சுப்பிரமணியம் சுவாமி உள்ளிட்ட இந்திய குழுவினர், இந்தியா - இலங்கை உறவில் தமிழ்நாடு குறுக்கீடு இருக்காது என்று தெரிவித்துள்ளனர். தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டதற்கு அவர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தெரிவித்த கருத்துகளை வைத்து பார்க்கும் போது, தமிழக மீனவர்கள் அவர்கள் கடல் எல்லையில் மீன் வளம் இல்லாததால் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறுகின்றனர் என்பதை ஜெயலலிதா மறுக்க முடியாது என்பது உறுதியாகிறது.

எனவே இலங்கையை குற்றம் சாட்டி மோடிக்கு கடிதம் எழுதும் தந்திரத்தை ஜெயலலிதா நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜெயலலிதா ஆட்டுவித்த மாதிரி எல்லாம் ஆட மோடி ஒன்றும் அவரது கைப்பாவை இல்லை என்பதை ஜெயலலிதா தெரிந்து கொள்ளும் காலம் தொலைவில் இல்லை.

கடித தந்திரத்தை கைவிட்டுவிட்டு மோடி வலியுறுத்துவது போல் யதார்த்த நிலையை உணர்ந்து அரசாட்சி செலுத்துவது ஜெயலலிதாவுக்கு நல்லது. இந்திய கடலில் மீன்வளம் குறைந்துவிட்டால் அண்டை நாட்டுக் கடலில் அத்துமீறி மீன் பிடிக்கலாம் என்பது அர்த்தமில்லை. மாறாக ஜெயலலிதா தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத்துக்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு விவரிக்கப்பட்ட அந்தக் கட்டுரையின் கீழ் ஒரு பொறுப்புத்துறப்பு வாக்கியமும் இணைக்கப்பட்டிருந்தது. இந்த வலைத்தளத்தின் கருத்துப் பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ள கருத்துகள், யோசனைகளுக்கு இலங்கை பாதுகாப்பு அமைச்சு எவ்விதத்திலும் பொறுப்பாகாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை தரவேற்றம் செய்யப்பட்டிருந்த இந்தக் கட்டுரைக்கு, உடனடியாகவே தமிழகத்திலிருந்து கடுமையான எதிர்ப்புக்கள் வெளியாகியிருந்தன.

இந்த விவகாரத்தில், டில்லியில் உள்ள இலங்கைத் தூதரை இந்திய வெளியுறவுத்துறை உடனடியாக அழைத்து கண்டனம் தெரிவிக்க வேண்டும், இதற்காக இலங்கை ஜனாதிபதியும், இலங்கை பாதுகாப்புத்துறை செயலாளரும் மன்னிப்பு கேட்கும்படி மத்திய அரசு வலியுறுத்த வேண்டும், மன்னிப்பு கேட்க இலங்கை அரசு மறுத்தால் அந்த நாட்டுடனான உறவை துண்டித்துக் கொள்ளவும் இந்திய அரசுத் தயங்கக் கூடாது என்று பா.ம.க நிறுவுநர் இராமதாஸ் வலியுறுத்தியிருந்தார்.

தமிழக முதல்வரையும், தமிழக மக்களின் பிரச்சினையையும் தரக்குறைவாக விமர்சித்துள்ள இலங்கை அரசுடனான தூதரக உறவை மத்திய அரசு முறித்துக் கொள்ள வேண்டும் என ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ வலியுறுத்தியிருந்தார்.

தமிழக முதல்வரை அவமதிக்கும் வகையில் இலங்கை பாதுகாப்புத்துறை இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கு கண்டனம் தெரிவித்த தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், இது தொடர்பாக சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரக அதிகாரியையும் தொடர்பு கொண்டு கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சர்ச்சைக்குரிய அந்தக் கட்டுரையையும், சர்ச்சைக்குரிய ஒளிப்படத்தையும் தமது வலைத்தள முகப்புப் பக்கத்தில் இருந்து இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு 6 மணித்தியாலத்தில் நீக்கியது.

இதனை நீக்கிய சிறிது நேரத்திலேயே பரந்தளவிலான மன்னிப்பு என்ற தலைப்பில், நரேந்திர மோடியின் படத்துடன் பாதுகாப்பு அமைச்சின் மன்னிப்பு கேட்கும் வாசகம் வெளியாகியிருந்தது. அதில் குறித்த கட்டுரைக்காக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடமும், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடமும் மன்னிப்புக் கோருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### நல்லூர்

ளும் வெளியேயும் குழுமியிருந்தனர். அதைச் சாதமாக்கிக் கொண்ட கொள்ளை யர் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடியுள்ளார். அப்போது அங்கு சிவில் உடையில் இருந்த பொலிஸார் கொள்ளையரைத் துரத்திப் பிடித்துள்ளனர். இந்தச் சம்பவத்துடன் மேலும் இருவர் தொடர்புபட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ற-4)

### கல்லறையை

தேசியக் கட்சியிலும் இறுதிக் காலத்தில் இவ்வாறு பிளவுகள் ஏற்பட்டன. சந்திரிகாவின் ஆட்சிக்காலம் உட்பட எமது நாட்டின் வரலாறு முழுவதும் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்கையில், அது கவிழும் காலகட்டத்தில் இவ்வாறு சுடுகாட்டு அறிகுறி தென்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில், தற்போதைய கூட்டணி அரசின் இறுதிக் காலம் நெருங்கிவிட்டது. இதனால், தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சிலர் போலி காரணங்களை முன்வைத்து தனித்துக் களமிறங்க முற்படுகின்றனர். கப்பல் கவிழும் போது உயிர் பாதுகாப்பு அங்கி அணிவதுபோல்தான் ஆட்சி கவிழும் அறிகுறி தென்படுகையில் சிலர் தனிவழி யுக்தியைக் கையாளுகின்றனர்.

அதேவேளை, மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் கிடைத்த வெற்றியை விட பலமானதொரு வெற்றி ஊவா மாகாண சபைத் தேர்தலில் கிடைக்கும் என நாம் நம்புகின்றோம். இதற்காகப் பலமானதொரு அணியைக் களமிறக்கவுள்ளோம் என்பதுடன், முன்கூட்டியே தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்துவிட்டோம். 500இற்கும் மேற்பட்ட கூட்டணிகளை பதுளை, மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றோம்"- என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-சி)

## அபராதம்

தென்மராட்சி, ஓக. 2
மதுபோதையுடனும் தலைக்கவசம் மற்றும் ஆவணங்களின்றியும்மோட்டார்சைக்கிளைச் செலுத்திச்சென்ற கல்வியங்காடு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 22 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 22 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்குத் தேவையான சாரதிய அனுமதிப்பத்திரம், காப் புறுதி, வாகனவரி மற்றும் தலைக்கவசம் இல்லாமல் மது போதையில் வாகனம் செலுத்தியதாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. (வ-9)

## காந்தீயம் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,ஓக. 2
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பத்திரிகையின் ஜுலை, ஓகஸ்ட் மாத இதழ்கள் வெளிவந்துள்ளன.
மகாத்மா காந்தியினுடைய கல்விச் சிந்தனைகள், சுய தேவைப் பூர்த்திக்கான பரிந்துரைகளே என்ற தலைப்பிலான ஆக்கம், பல்லவராயன் கட்டில் இடம்பெற்ற காந்தீயத் திருமணம் பற்றிய குறிப்பு போன்ற பல அம்சங்கள் இந்த இதழில் வெளியாகியுள்ளன. (ஓ)

# இலங்கையுடனான இந்திய தூதரக உறவைத் துண்டிக்குக

## வலியுறுத்துகிறார் வைகோ

சென்னை, ஓக.2
தமிழக முதல்வரையும், தமிழக மக்களையும் இழிவுபடுத்திய இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இலங்கை அரசுடனான தூதரக உறவுகளை இந்தியா துண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.
இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்தின் அதிகாரபூர்வமான இணையத்தளத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை தரக்குறைவாகச் சித்தரித்து, அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை மனதால் நினைத்துக் கொண்டு கடிதங்கள் எழுதுவதாகப் புகைப்படம் வெளியிடப்பட்டிருக்கின்றது.
அதுமட்டுமின்றி, நரேந்திர மோடிக்கு ஜெயலலிதா எழுதும் காதல் கடிதங்களுக்கு என்ன பொருள்? என்று தலைப்பிட்டு ஒரு கட்டுரையும், இலங்கை பாதுகாப்புத்துறை இணையத்தளத் தில் வெளிவந்துள்ளது.
ஹிட்லரின் நாஜிப்படைகள் கூடச் செய்யத் துணியாத அக்கிரமத்தை ஈழத்தமிழ் மக்களுக்கும், தமிழ்ப் பெண்களுக்கும் இழைத்த இலங்கை இராணுவம், தமிழக முதலமைச்சர் பதவியை வகிக்கும் ஜெயலலிதாவை இழிவுபடுத்தத் துணிந்து இருக்கின்றது. இத்தகைய கேவலமான வக்கிர எண்ணம் படைத்த இலங்கை அரசின் செயற்பாடு மன்னிக்கவே முடியாத வன்மையான கண்டனத்துக்கு உரியது ஆகும்.
தமிழக முதலமைச்சர், பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதுவது வெறும் கடிதங்கள் அல்ல. இலங்கை அரசால் இனப்படுகொலைக்கு ஆளாகி, இன்னமும் இராணுவ முற்றுகைக்குள் சுதந்திரத்தைப் பறிகொடுத்துவிட்டுத் திறந்த வெளிச் சிறையில் வாடிக் கொண்டு இருக்கின்ற ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்கவும், வாழ்வாதாரத்தை மீட்டு எடுக்கவும் வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா கடிதம் தீட்டுகிறார்.
இனப்படுகொலை நடத்திய ராஜபக்ஷவை சர்வதேச குற்றக் கூண்டில் நிறுத்த வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியதைச் சுட்டிக்காட்டிப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். ஏழரைக் கோடித் தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் கடிதங்கள் அவை.
நெருப்புக்குத் தன்னை இரையாக்கிய வீரத் தமிழ் இளைஞன் முத்துக்குமார் உள்ளிட்ட 19 தமிழ் இளைஞர்களை எரித்த நெருப்பின் சீறல் அந்தக் கடிதங்கள். தினமும் இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாகும் தமிழக மீனவர்களை இந்திய அரசு காப்பாற்ற வேண்டும் என்று வைக்கப்படும் கோரிக்கை தான் முதல்வரின் மடல்கள்.
ஆனால், இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் எந்தவகையில் இந்திய அரசையும் தமிழக அரசையும் துச்சமாக நினைத்து தமிழக முதல்வர் மீது கீழ்த் தரமான முறையில் விமர்சனம் செய்யத் துணிவார்கள்? தமிழக முதலமைச்சரைக் கிள்ளுக்கீரையாக இலங்கை அரசு நினைப்பதற்கு யார் காரணம்? எவர் கொடுத்த துணிச்சல் இது?
இந்திய அரசு உடனடியாக இலங்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை அரசுடனான தூதரக உறவுகளை முறித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் அந்த அரசோடு கைகோர்த்துக் கொண்டு தமிழ் இனத்தைத் தண்டிக்கவும், தமிழ் மக்களை இழிவுபடுத்தவும் நரேந்திர மோடி அரசு துணிந்து விட்டது என்ற குற்றச்சாட்டுக்குஆளாகநேரிடும். எனவே, இந்திய அரசு உடனடியாக இலங்கை அரசு மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (வ)



வைகோ

# உணவின்றி 5 ஆண்டுகள் உயிர் வாழ முடியுமாம்

## ஆச்சரியமூட்டும் இலங்கையர்

உணவுகள் எதனையும் உட்கொள்ளாமல் 5 ஆண்டுகள் வரை உயிர் வாழ முடியும் என்று இலங்கையர் ஒருவர் கூறியுள்ளார்.
மனிதர்கள் உணவின்றி இரண்டு மாதங்கள் மட்டுமே வாழ முடியும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.
எனினும் கிர்பி டி லேனர்ரோல் என்ற இந்த இலங்கையர் சுத்தமான காற்றும் ஊட்டமும் மட்டுமே மனிதர்கள் உயிர் வாழத் தேவை என்று குறிப்பிட்டுள்ளார்.
சுவாசிப்பது தனது வாழ்க்கை முறை என்றும் ஒளி, காற்று மற்றும் கடவுளின் அதிர்வுகள் மூலம் நீண்டகாலம் உயிர் வாழ முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
உண்ணும் உணவுகளை விட சிறந்த கலோரி சத்துக்கள் வெளியில் உள்ளன. அதிர்வுகள், ஒளியணுக்கள் மற்றும் ஒளி மூலம் கலோரிகள் உடலுக்குள் வருகின்றன.



கிர்பி டி லேனர்ரோல்

மனிதர்களின் சக்தி மையங்கள் திறந்திருக்குமாயின் எதனையும் உணவாக அளிக்க முடியும். கடந்த 10 மாதங்களில் 500 கலோரி உணவுகளை உண்டதாக ஒப்புக் கொள்ளும் அவர், அது உடலுக்கு மோசமானதாக இருந்ததை உணர்ந்ததாகக் கூறியுள்ளார்.
சாப்பிடும் போது சோர்வான உணர்வை ஏற்படுத்தும். சாப்பிடும்போது உடலின் உஷார் நிலை உடலை விட்டு சென்று விடுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். டி லேனர்ரோல் அவரது 16 வயதில் போதைக்கு அடிமையாகி இருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன்பின்னர் 1995 ஆம் ஆண்டு தேசிய அளவிலான கனிஷ்ட துப்பாக்கி சுடும் போட்டியில் அவர் வாகையர் பட்டத்தை வென்றுள்ளதுடன் குத்துச் சண்டை போட்டிகளிலும் பங்கேற்று பதக்கங்களைப் பெற்றுள்ளார்.
இலங்கை சமூக சேவைகள் அமைச்சின் ஆலோசகராக இருந்துள்ள அவர், வெற்றிகரமான தொழிலதிபருமாவார். 3 மாதங்கள் தண்ணீர் மாத்திரம் அருந்தி மரதன் ஓட்டப் போட்டியை நிறைவு செய்த ஒரே நபர் இவர் என்று நம்பப்படுகிறது.
6 ஆண்டுகளுக்கு முன்னர், 6 வருடங்களுக்கு மேல் சாப்பிடாதவர்கள் மற்றும் 40 பகல் 40 இரவுகள் தண்ணீர் பருகாது இருந்தவர்கள் குறித்து கற்றறிந்துள்ளார். (வ)



## 50 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்தவரின் எலும்புகள் மீட்பு

பல்லம, திம்பிரகொல்ல பிரதேசத்தில் இருந்து 50 வருடங்கள் பழைமையான மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.
பிரதேசவாசி ஒருவரால் வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து காட்டுப் பகுதி ஒன்றிலிருந்து இந்த எலும்புகள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.
குறித்த எலும்புகள் பல வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த ஒருவருடையது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
இற்றைக்கு 50, 60 வருடங்களுக்கு முன்னர் குறித்த பிரதேசத்தில் பரவிய நோய் காரணமாக பலர் உயிரிழந்ததாகத் தெரியவந்துள்ளது.
இந்த எலும்புத் தொகுதிகளும் அவ்வாறு உயிரிழந்த வருடையதாக இருக்க கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
எலும்புகள் மீட்கப்பட்ட பிரதேசத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள அதே வேளை பல்லம பொலிஸார் இந்தவிடயம் குறித்த மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (வ)

## அல்லாரை வாள்வெட்டு இளைஞருக்கு பிணை அனுமதி

தென்மராட்சி, ஓக. 2
அல்லாரைப் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற இரு குழுக்களுக்கு இடையிலான வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞரொருவர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
கடந்த நான்காம் திகதி இரவு கச்சாய் அம்மன் கோயில் திருவிழாவில் இடம்பெற்ற கைகலப்பு குழு மோதலாகி வாள் வெட்டில் முடிவடைந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞரொருவர் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட் பிணையில் செல்ல நீதிமன்றினால் நேற்று அனுமதி வழங்கப்பட்டது.
இந்த மோதலில் காயமடைந்தவரை ஏற்றிவந்த இளைஞர் மருத்துவமனை வளாகத்தில் வைத்து வெட்டி படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# மனிதக் கடத்தலுக்கு மாற்றுவழியாக தென்னிந்தியா அமைந்து விடக்கூடாது

## ஆஸ்திரேலியா அரசு தெரிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு மனிதக் கடத்தல்களை மேற்கொள்வோருக்கு தென்னிந்தியா மாற்று வழியாக அமைந்து விடக்கூடாது என்று ஆஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது.
இந்தியாவுக்கான ஆஸ்திரேலிய தூதர் பெட்ரிக் சக்லிங் இதனை தெரிவித்துள் ளார்.
ஆஸ்திரேலியா மனிதக் கடத்தல் சட்டங்களை கடுமையாக்கிய பின்னர் இலங்கையில் இருந்து குறைந்தளவான படகுகளே ஆஸ்திரேலியாவுக்கு சட்டநீதியற்றவகையில்சென்றுள்ளன.
இந்தநிலையிலேயே மாற்றீடாக தென்னிந்தியாவை கடத்தல்காரர்கள் பயன்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை அண்மையில் இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியா சென்றடைந்த 157 அகதிகளில் நீண்டகாலமாக இந்தியாவில் தங்கியிருந்த அகதிகளை மீண்டும் பொறுப்பேற்க இந்தியா இணங்கியுள்ளதாகவும் தூதர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## ஆலயக் கதவுக்கு தீயிட்டு எரிப்பு

தென்மராட்சி, ஓக .2
ஆலய பிரதான கதவை உடைக்க மேற்கொண்ட முயற்சி பயனளிக்காததால் அதனைத் தீயிட்டு எரித்துள்ளனர் திருடர்கள்.
இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு மீசாலை வடக்கு தட்டான்குளப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் மறுநாள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். (வ-9)



முல்லைத்தீவு புனித இராயப்பு ஆலயத்தின் திருப்பலி பூசையும் திருச்சொருப பவனியும் நேற்றுக் காலை முல்லைத்தீவு நகரில் நடைபெற்றது. அதில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர். (ற-102)

**கடையும், வீடும் விற்பனைக்கு**

யாழ்.பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்திக்கு அருகில் அமைந்துள்ள 3 (மூன்று) பரப்புக் காணியும் 45 அடி நீளம் கொண்ட மூன்று கடையும் மேல்மாடி வீடும் விற்பனைக்குள்ளன.

தொடர்பு: 076 535 2300 (சி/15293) (4.6.3)

**உடனடி வேலை வாய்ப்பு**

இலங்கையின் முன்னனி நிதி நிறுவனத்தின் குழுக் கம்பனியான காப்புறுதி நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள்.

நிதி ஆலோசகர்கள்: Financial Planner's

குழுத்தலைவர்கள் : Team leader's

தகைமைகள்:

01. க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி
02. 18-55 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
03. சந்தைப்படுத்தல் துறையிலோ காப்புறுதித்துறையிலோ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
04. அரச/தனியார் துறைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
05. வட மாகாணத்திலிருந்து வேலை செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
06. வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பது விரும்பத்தக்கது.

சலுகைகள்:

01. கவர்ச்சியான மாதாந்த அடிப்படைக் கொடுப்பனவுகள்
02. கவர்ச்சிகரமான இன்னும் பல விசேடகொடுப்பனவுகள்
03. வெளிநாட்டுச்சுற்றுலா செல்வதற்கான அரிய வாய்ப்புகள்
04. குறுகிய காலத்துக்குள் அதிகமாக சம்பாதிக்கக் கூடிய வாய்ப்புகள்
05. திறமை அடிப்படையில் பதவி உயர்வுகள்

மேற்குறிப்பிட்ட தகைமையுடையோர் 09.08.2014 இற்கு முன்பாக உங்கள் சுய விவரக்கோவையுடன் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல. 5004,
C/o உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (50491) (45.6.3)

**ஐடியல் அக்கடமி**

சண்டிலிப்பாய் யாழ்ப்பாணம்
மூன்றாம் தவணை ஆரம்பம்
03.08.2014 ஞாயிறு
(வழமையான நேர அட்டவணை) நிர்வாகி
(50518) (4.6.3)

**தவறிவிட்டது**

அடையாள அட்டை இல.938060789V உடைய தேசிய அடையாள அட்டை 29.07.2014 அன்று நுவரெலியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் பயணப்பையுடன் தொலைந்துவிட்டது. அதனைக் கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் தரப்படும்.

தொடர்பு: 075 290 1929 (50501) (4.6.3)

## ஸ்ரீபாலி வளாக ஊடக கற்கைநெறி மாணவர்கள் கற்கை கள பயணம்

மட்டக்களப்பு, ஓக.2

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஹொரண ஸ்ரீபாலி வளாக ஊடகக் கற்கைத்துறை விரிவுரையாளர்களும், மாணவர்களும் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு கற்கைக் களப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கும், ஏறாவூர் நகர சபைக்கும் சென்றிருந்தனர்.

ஏறாவூர் நகர சபைக்கு வந்திருந்த அவர்களை ஏறாவூர் நகர பிதா அலிஸா ஹிர மௌலான வரவேற்றதுடன் கடந்த போர்க்காலச் சூழ் நிலைகள் மற்றும் சமகால நிலைமைகள் பற்றி விரிவாக விளக்கமளித்தார்.

பொதுவாக ஆயுத வன்முறைகளுக்குப் பின்னரான சமகால நிலைமை, இனங்களுக்கிடையிலான சகவாழ்வுச் சூழ்நிலை, பாதிப்புக்களிலிருந்து மக்கள் மீண்டெழுவதற்கான சாதகமான வாய்ப்புக்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் உள்ளிட்ட பல விடயங்கள் தமது கள கற்கை பயணத்தின்போது அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்று தலைமை விரிவுரையாளர் குமேஷ் பிரபாஷினி தெரிவித்துள்ளார். (ற)

**மலிவு விற்பனை**

*பாடசாலை விடுமுறையை முன்னிட்டு மீண்டும் அனைத்து நூல்களுக்கும் 20% விலைக்கழிவு வழங்கப்படுகிறது.
*நீரால் சேதமடைந்த ஒரு தொகுதி நூல்கள் 50% விலைக்கழிவில் விற்பனையாகின்றன.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (f/15295) (4.6.3)

**Mega Sale**

ARPICO DAMRO

ஆடி தள்ளுபடி
என்றும் எங்கும் கிடைக்காத
அமோக விலை குறைப்பு
ஞாயிறு காட்சியறை திறக்கப்படும்

மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069

## கைக்குண்டு மீட்கப்பட்டது

மட்டக்களப்பு, ஓக.2

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள மீராவோடையில் கடந்த புதன்கிழமை மாலை ஆறு மணியளவில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மீராவோடை தமிழ் - முஸ்லிம் எல்லைப் பகுதியிலுள்ள காணியொன்றிலிருந்தே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த காணிக்குள் நோன்புப் பெருநாள் பண்டிகை நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொழுது ஏற்பாட்டாளர்களால் இந்த கையெறி குண்டு கிடப்பது பற்றி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து வாழைச்சேனைப் பொலிஸார் கைக்குண்டை மீட்டுள்ளனர். (ற)

**Personal Classes**

Chemistry (A/L)

தொடர்பு : 078 998 9956 (60610)(7.6.3)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

அழையுங்கள்: 077 9086 737 (50519) (10)

GUNAA BEST PC, 52, Hospital Road, Jaffna.

WHAT TO DO AFTER OL/AL

கொழும்பில்...
Students Visa வெளிநாடு செல்பவர்களுக்கு

(தங்கியிருந்து 50 நாள்களில் பாடத்திட்டத்தை முடிக்க ரூபா 70,000/=) பரீட்சைகள் உள்ளடங்கலாக

IELTS English Band.6 Guarantee

Blooming Buds International IELTS Academy வழங்கும்

IELTS பாடநெறி முழுநேர பாடநெறியானது திங்கள் தொடக்கம் சனி வரை தினமும் 8 மணித்தியாலங்களுக்கு நடைபெறும்.

இக்கற்கை நெறியை மேற்கொள்வதன் மூலம் 6.0 புள்ளி பெறுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

இக்கற்கைநெறிக் கட்டணத்தை முழுமையாகச் செலுத்தினால் 10% கழிவு வழங்கப்படும்.

6.0 Guarantee After the Course

Blooming Buds International IELTS Academy

No.164/C, Awissawella Road, Orugodawatta, Wellampitiya
TP: 077 469 0044/071 566 9641
(C15563)(12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா கந்தசாமி



கொடிகாமம் அல்லாரையைப் பிறப்பிடமாகவும் புலோப்பளை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தசாமி 31.07.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி- .சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், கருணேஸ்வரன், மதிவதனி, ஜெயவதனி, ரகுனேஸ்வரன் (பிரான்ஸ்), கமலேஸ்வரன் (பிரான்ஸ்), ஸ்ரீவதனி, ரூபவதனி, ஜெகனேஸ்வரன், தனீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லிப்பளை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோப்பளை மேற்கு,
பளை.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்

(43695)(4.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### கந்தையா தியாகராஜா

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

காரைநகர் முல்லைப்பிலவைப் பிறப்பிடமாகவும், இல.06. 6ஆம் ஒழுங்கை, பலாலிவீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகராஜா நேற்றுமுன்தினம் (31.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராமநாதன், கோமளவல்லி ஆகியோரின் மைத்துனனும், ஜெயலக்ஸ்மி, கிரிஷா, காலஞ்சென்ற லிங்கேஸ்வரி மற்றும் தயாநிதி, தயாபரன், மோகனரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமரகுருநாதன், ஞானக்குமார், கௌதமி ஆகியோரின் பாசமிகு மாமனும், தர்சினி, பிரதீபன், நிஷாந்தி, சுஜித், சங்கரி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (04.08.2014) முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.06, 6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 8613

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.